உதயன்

பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 061 வள்ளுவர் ஆண்டு 2044 தை 13 சனிக்கிழமை (26/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily



இலங்கை முதலிடம் 19

அமெரிக்காவை இலக்கு வைத்தே எமது திட்டங்கள் 09

அணுமின் நிலையத்தில் இருந்து கதிர்வீச்சு இல்லை 08

# அமெரிக்காவின் அணுகுமுறை தவறானது

கொழும்பு, ஜன 26

போருக்குப் பிந்திய இலங்கையுடனான அமெரிக்காவின் அணுகுமுறை தவறானது. இரு நாடுகளுக்குமிடையில் நல்ல உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு இலங்கை தொடர்பான கொள்கைகளை அமெரிக்கா மீளாய்வு செய்ய வேண்டும் எனப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பாதுகாப்பு அமைச்சில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறியதாவது:


இலங்கை இராணுவ அதிகாரிகளை அமெரிக்கா அநீதியான முறையில் நடத்துகிறது. அவர்கள் செய்வது தவறு என்று அவர்களுக்கு நான் கூற விரும்புகிறேன்.

ஒவ்வொரு முறையும் அவர்கள் அமெரிக்க இராஜதந்திரிகளும், அதிகாரிகளும் என்னைச் சந்திக்கும்போதும், எமது இராணுவத்துடன் ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டும் என்று கூறுகிறார்கள்.

நான்காவது கட்ட ஈழப் போரின் போது, இலங்கையின் படைகளை அமெரிக்க ஆயுதப் படையினர் பயன்படுத்திக் கொள்வதற்கான உடன்பாடு ஒன்று செய்து கொள்ளப்பட்டது.

பார்க்க பக்கம் 04

கோத்தபாய சீற்றம்



# புதுடில்லியில் சந்திரிகா ஜெனிவா காய்நகர்த்தல்

## இந்திய உயர்மட்டங்களுடன் மந்திராலோசனை



**"இலங்கையின் தற்போதைய மனித உரிமை விவகாரங்கள், அரசின் நல்லிணக்கச் செயற்பாடுகள் ஆகியவை உட்பட மேலும் சில முக்கியமான விடயங்களில் அரசின் குறைநிறைகள் குறித்து மேற்படி சந்திப்புகளின் போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது."**

கொழும்பு, ஜனவரி 26

மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரின் போது இலங்கை விடயத்தில் எவ்வாறான வகிபாகத்தைக் கொள்வது என்பது தொடர்பில் தீவிரமாக ஆராய்ந்துவரும் இந்தியா, இவ்விடயம் தொடர்பில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் மந்திராலோசனை நடத்தியுள்ளது.

இராஜதந்திர மட்டத்திலான பயணமொன்றை மேற்கொண்டு அண்மையில் இந்தியாவுக்குச் சென்றுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அந்நாட்டின் முக்கிய அதிகாரிகளைச் சந்தித்து இலங்கை விடயங்கள் தொடர்பில் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்திய அரசின் அழைப்பின் பேரிலேயே அவர் அங்கு பயணம் மேற்கொண்டார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தாலும், இதுகுறித்து உத்தியோக

பார்க்க பக்கம் 04

## காத்தான்குடியில் பாம்பு மழை!

மட்டக்களப்பு, ஜன 26

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேசத்தின் சில பகுதிகளில் நேற்று வெள்ளிக்கிழமை காலை பாம்பு மழை பெய்துள்ளதாகப் பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

காத்தான்குடி 6ஆம் குறிச்சி அப்றாருல்லா வீதி, காத்தான்குடி ஜன்னத் மாவத்தை ஆகிய பகுதிகளிலேயே இப்பாம்பு மழை பெய்துள்ளது.

காத்தான்குடி அப்றாருல்லா வீதியிலுள்ள வீட்டு வளாகமொன்றிலும் ஜன்னத் மாவத்தையிலுள்ள வீட்டு வளாகமொன்றிலுமே பாம்பு மழை பெய்துள்ளதென்று கூறப்பட்டது.

தான் வளாகத்தில் நின்று கொண்டிருந்தபோது மழையுடன் சேர்ந்து இரண்டு பாம்புகள் வந்து விழுந்ததாகவும் அதில் ஒரு பாம்பு தனது தோள் மீது விழுந்து ஓடியதாகவும் ஜன்னத் மாவத்தையில் வசிக்கும் பெண்ணொருவர் கூறினார்.

இந்தப் பாம்புகள் எந்த இனத்தைச் சேர்ந்த பாம்புகள் என்பது பற்றி தங்களுக்குத் தெரியாதெனவும் பிரதேசவாசிகள் மேலும் தெரிவித்தனர்.(த)

## புதிய கட்சி ஆரம்பித்தார் பொன்சேகா



கொழும்பு, ஜன.26

கட்சிக்குள் பிளவு ஏற்பட்டு அரசியல் களத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவராக இருந்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, தமது அரசியல் பயணத்திற்குப் புத்துயிரளிக்கும் நோக்கில் ஐக்கிய ஜனநாயக மக்கள் முன்னணி என்ற புதிய கட்சியொன்றை உருவாக்கியுள்ளார்.

அத்துடன், இந்தப் பிக்குகள் முன்னணியின் முக்கிய பதவிகளுக்கு பொறுப்பான

பார்க்க பக்கம் 04

# உலகறிந்த மகா உண்மையை மூடி மறைக்கிறார் கோத்தா

## மனோ கணேசன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன 26

காணாமல் போனவர்கள் எவரையும் இல்லை என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சொல்லுவதை எந்த ஒரு அடிப்படையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், மக்கள் கண்காணிப்புக் குழுவின் அமைப்பாளருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

உலகறிந்த இந்த மகா உண்மையை இவர் ஒன்றுமில்லை எனச் சொல்லுவது காணாமல் போன தமது உறவுகளை தேடித் திரியும் அப்பாவிக் குடும்ப உறவுகளை அதிர்ச்சியடையச் செய்துள்ளதாகவும் மனோ குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது படையினரால் பதிவு செய்யப்பட்டு பொறுப்பேற்கப்பட்ட எவரும் காணாமல் போகவில்லை என பாதுகாப்புத் துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்

பார்க்க பக்கம் 04

## தீர்வு இழுத்தடிப்புக் குறித்து சர்வதேசத்திடம் முறைப்பாடு

### சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன.26

அரசியல் தீர்வு விடயத்தில் மஹிந்த அரசு காட்டும் இழுத்தடிப்பு மற்றும் வடக்கு, கிழக்கில் படையினரின் அராஜகங்கள் குறித்து சர்வதேச நாடுகளுக்கு எதிர்வரும் தினங்களில் எடுத்துரைக்கவுள்ளோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஜேர்மனிக்குப் பயணமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:

"இலங்கையில் தற்போது காட்டாட்சி நடக்கின்றது. நீதித்துறை செத்துவிட்

பார்க்க பக்கம் 04

# பொதுநலவாய விதிகளை முறையாகப் பேணுங்கள்

## இலங்கையிடம் கோருகிறது பிரிட்டன்

லண்டன், ஜன.26

2013 பொதுநலவாய அரசுகளின் தலைவர்களின் மாநாட்டை நடத்தவிருக்கும் இலங்கை அரசு, பொதுநலவாய பெறுமானங்களை முறையாகப் பேண வேண்டுமென்றே பிரிட்டன் எதிர்பார்க்கிறது.

பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் அலிஸ்டெயர் பேர்ட் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவர் தாம் மேற்கொள்ளவிருக்கும் இலங்கைப் பயணம் குறித்து லண்டனிலுள்ள இலங்கைத் தூதுவர் கிறிஸ் நோனிஸைச் சந்தித்து கலந்துரையாடினார்.

அடுத்த வாரம் இலங்கைக்குப் பயணத்தை மேற்கொள்ளவிருக்கும் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் அலிஸ்டெயர், தமது இந்தப் பயணத்துக்குப் பின்னர் இலங்கைத் தொடர்பாக டுவிட்டரில் நேரடி கலந்துரையாடலில் ஈடுபடுவார் என்றும் தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தரும் அமைச்சர் அலிஸ்டெயர் பேர்ட், பொப்ரவரி முதலாம் திகதி லக்ஷ்மன் கதிர்காமர் மத்திய நிலையத்

பார்க்க பக்கம் 04

## கடலில் மூழ்கி இளைஞர் சாவு

யாழ்ப்பாணம், ஜன.26

நண்பர்களுடன் படகில் சென்ற இளைஞர் தவறிவிழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் யாழ். நாவாந்துறை கடலில் நேற்று வெள்ளிக்கிழமை பகல் இடம்பெற்றது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மயில்வாகனம் டிலக்ஷன் (வயது 22) என்ற இளைஞரே உயிரிழந்தார் என்று யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

பார்க்க பக்கம் 04

## தமிழ் மொழி கலந்த தேசிய கீதமா? இனவாதக் கட்சிகள் போர்க்கொடி!

கொழும்பு, ஜன.26

நாட்டின் தேசிய கீதம் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் இசைக்கப்பட வேண்டும் எனத் தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்கத்துக்கான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார முன்வைத்துள்ள யோசனைக்கு அரசின் பங்காளிக் கட்சிகளான தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய ஆகியன கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

'ஸ்ரீலங்கா மாதா' என்பதே இலங்கையின் தேசிய கீதம் என்று தேசிய சுதந்திர முன்னணியும், தேசிய கீதத்தில் தமிழ்மொழி இணைக்கப்பட்டால் நாளை தமது மொழியும் (அரபு மொழி) அதில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று முஸ்லிம்கள் கூறுவர்

பார்க்க பக்கம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கஞ்சா விற்ற 17 பேர் கடந்த வாரம் கைது

யாழ்ப்பாணம்,ஜன.26

குடாநாட்டில் கடந்த வாரம் கஞ்சா விற்ற குற்றச்சாட்டில் 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தவிர பல்வேறு குற்றச் செயல்களுட ன் தொடர்புடைய 94 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை அவரது அலுவலகத்தில் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே எரிக் பெரேரா இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

யாழ்.குடாநாட்டில் பரவலாக 6 இடங்களில் சட்டவிரோதமாகக் கஞ்சா போதைப் பொருளை விற்ற குற்றச்சாட்டில் 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் வைத்திருந்த போதைப் பொருள்களும் கைப்பற்றப்பட்டன.

ஊர்காவற்றுறையில் 9 பேரும், யாழ்ப்பாணத்தில் 2 பேரும், சாவகச்சேரியில் 2 பேரும், சுன்னாகத்தில் 2 பேரும், கொடிகாமத்தில் ஒருவரும், கோப்பாயில் ஒருவருமாக 17 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 22 பேர் கைது செய்யப்பட்டனர். சட்டவிரோதமாக மது விற்பனையில் ஈடுபட்டிருந்த குற்றச்சாட்டில் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். டெங்கு பரவல், சூழல் மாசடையும் வகையில் செயற்பட்ட குற்றச்சாட்டில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மது போதையில் பொது மக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்.குருநகர் பகுதியில் சட்டவிரோதமாக கடல் ஆமை பிடித்து வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றார். (த-4-86)

# 48 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகை, பொருள்கள் திருட்டு

## கடந்த வாரத்தில் மட்டும்

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ்.குடாநாட்டில் கடந்த வாரத்தில் மட்டும் 48 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயுள்ளன.

யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா இத்தகவலை தெரிவித்தார்.

யாழ்.சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிகளவாக யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்துக்குரிய 16 இலட்சம் ரூபா பெறுமதியான தொலைபேசி இணைப்பு வயர்கள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் இருவரை கைதுசெய்துள்ளனர்.

நல்லூர் கோயில் வீதியில் உள்ள வீடொன்றில் 2 இலட்சத்து 19 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி,

சர்வதேச வர்த்தகக் கண்காட்சிக்கு சென்றிருந்த ஒருவரது மோட்டார் சைக்கிள்,

தனியார் பஸ்ஸில் பெண்ணொருவரிடமிருந்து 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான 9பவுண் நிறையுடைய நகைகள், இச்சம்பவத்தில் இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நகையும் மீட்கப்பட்டது.

யாழ்.வண்ணை ஐயனார் கோயிலடி வீடொன்றில் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள்,

யாழ்.நகரில் உள்ள வீடொன்றில் 2 இலட்சத்து 28 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் 68 ஆயிரம் ரூபா பணம், பெறுமதிமிக்க மடிக்கணினி என்பன திருடப்பட்டன.

பருத்தித்துறையில் உள்ள வீடொன்றில் 22 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைக் காட்சி,

கொக்குவில் பகுதியில் 62 வயது முதியவர் கொலை செய்யப்பட்டு அவரது வீட்டிலிருந்த மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான 6பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன.

உரும்பிராயில் கடை உடைத்து 21 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள்,

ஊர்காவற்றுறையில் வீடு உடைத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை, அதனைத் திருடியவர் நகையை யாழ். நகரிலுள்ள வங்கி ஒன்றில் அடைவு வைத்து பணம் பெற்றுள்ளார். இது குறித்து விசாரணை மேற்கொண்ட பொலிஸார் நெடுந்தீவு மானிப்பாய் பகுதிகளைச் சேர்ந்த இருவரைக் கைது செய்துள்ளனர். நகையும் மீட்கப்பட்டுள்ளது.

மானிப்பாயில் ஒரு இலட்சம் பெறுமதியான சங்கிலி, தெல்லிப்பழையில் ஒரு இலட் சத்து 78 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள்.

பண்டத்தரிப்பில் 7 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடு ஒன்றை புத்தளத்தைச் சேர்ந்த ஒருவர் திருடியுள்ளார். அவர் கைது செய்யப்பட்டதோடு திருடப்பட்ட ஆடும் மீட்கப்பட்டது.

ஊர்காவற்றுறையில் 4 இலட்சத்து 98 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள், வேலணை வடக்கில் 3 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் களவாடப்பட்டுள்ளன. சாவகச்சேரியில் கடை உடைத்து 2 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன இந்த 3 சம்பவத்துடன் தொடர்புடைய 8 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர் - என்றார். (த-4-86)

## சிறுமியைக் கடத்தியவர் கைது

பதின்ம வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்ற புத்தூர் இளைஞன் கைது செய்யப்பட்டார். சிறுமியும் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த சிறுமியே கடந்த புதன்கிழமை கடத்திச் செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ்ஸில் முறையிடப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கடத்தப்பட்ட தினத்தன்றே சிறுமியை மீட்டனர். புத்தூரைச்சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார்.

## பஸ்ஸுக்கு நின்ற சிறுவனை மோதியது மோ.சைக்கிள்

யாழ்ப்பாணம்,ஜன.26

வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் வீதியோரம் பஸ்ஸுக்காகக் காத்து நின்ற சிறுவனை மோதித் தள்ளி விட்டுத் தப்பிச் சென்றது.

கால் முறிந்து, படுகாயமடைந்த சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான்.

இந்த விபத்து அச்சுவேலியில் நேற்று வெள்ளிக்கிழமை பகல் இடம்பெற்றது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தவரத்தினம் கிரிதரன் (வயது-06) என்ற சிறுவனே கால்முறிந்ததோடு தலை உட்பட உடலின் பல பாகங்களிலும் காயங்களுக்குள்ளானான்.

அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டான். (த-4)

## செபஸ்தியார் விழா

ஓட்டுமடம் புனித செபஸ்தியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நாளை நடைபெறவுள்ளது.

இன்று மாலை 4.45 மணிக்கு திருச்செபமாலையோடு நற்கருணைத் திருவிழா இடம்பெறும்.

நாளைகாலை 6.30 மணிக்கு திருப்பலி யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும். (த)

## இத்தாலிக்கு அனுப்புவதாக கூறி 40 லட்சம் ரூபா பணம் மோசடி

### தம்பதியர் தலைமறைவு

யாழ்ப்பாணம், ஜன. 26

இத்தாலிக்கு அனுப்புவதாகக் கூறி 40 லட்சம் ரூபா பண மோசடியில் ஈடுபட்ட தம்பதியர் தலைமறைவாகியுள்ளதாக யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :-

பருத்தித்துறையைச் சேர்ந்த இருவரிடம் இவர்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

மேற்படி தம்பதியரும் அதேயிடத்தை சேர்ந்தவர்களே. இந்தத் தம்பதியர் தலைமறைவாகியுள்ளமையால் அவர்களை இன்னும் கைது செய்யவில்லை. தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை யாழ். நகரைச் சேர்ந்த ஒருவர் 8 லட்சத்து 51 ஆயிரம் ரூபா காசோலை மோசடி செய்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர் தற்போது தலைமறைவாகியுள்ளார் - என்றார். (த-4-86)

# அச்சுவேலி மரக்கறிச் சந்தையை நேற்று பிரதேசசபை உறுப்பினர்கள் திறந்தனர்



யாழ்ப்பாணம், ஜன. 26

வலி. கிழக்குப் பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்ட அச்சுவேலி மரக்கறிச் சந்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலி.கிழக் குப் பிரதேச சபை உறுப்பி னர்கள் நேற்றுத் திறந்துவைத்தனர்.

இதேவேளை அச்சுவேலியில் அமைக்கப்பட்ட பஸ் நிலையத் திறப்புவிழாவில் வலி.கிழக்குப் பிரதேச சபையின் எதிர்க்கட்சியான அரசதரப்பினர் அடாத்தாக நடந்து கொண்டதைத் தொடர்ந்து வலி.கிழக்குப் பிரதேச சபையின் ஆளும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் அந்த நிகழ்வைப் புறக்கணித்து வெளியேறினர்.

மாகாண சபையின் நிதியில் புனரமைப்புச் செய்யப்பட்ட சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையம், அச்சுவேலி பஸ் தரிப்பு நிலையம் மற்றும் பிரதேச சபையினால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட அச்சுவேலி பொதுச்சந்தை என்பன நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட இருந்தன.

இதில் வலி.தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையத்தை யார் திறந்து வைப்பது என்பது தொடர்பில் சர்ச்சை நீடித்தது. உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினர் தம்மாலேயே மேற்படி நிகழ்வு நடத்தப்படும் என்று வலி. தெற்குப் பிரதேச சபைத் தலைவருக்குத் தெரிவித்திருந்தனர்.

இதற்குப் பிரதேச சபை மறுப்புத் தெரிவித்ததால் இழுபறிநிலை இருந்து வந்தது. இறுதியில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் பிரதேச சபையே இந்த நிகழ்வை ஏற்பாடு செய்ய, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தால் அனுமதி வழங்கப்பட்டது.

இதன்பின்னர் நேற்று மு.ப. 10.30 மணியளவில் சுன்னாகம் பஸ் நிலையத்தை வலி.தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஷுடன் இணைந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார்.

நண்பகல் 12.30 மணியளவில் அச்சுவேலி பஸ்நிலையத்தைத் திறந்து வைப்பதற்குரிய சகல வழிபாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. அதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஏற்பாடு செய்து நடத்திக் கொண்டிருந்தனர்.

இதன்போது ஈ.பி.டி.பி. யின் கோப்பாய் பிரதேச அமைப்பாளர் ஐங்கரன் அமைச்சர்களின் படம் தாங்கிய பதாகையை சபைச் செயலாளரின் ஒத்துழைப்புடன் கட்ட முயன்றார். இது கட்சி பேதமின்றிய நிகழ்வு; இந்தப் பதாகையைக் கட்ட வேண்டாம் எனப்பிரதேச சபைத் தலைவர் தடுத்துள்ளார்.'

இதனையடுத்துப் பதாகை கட்டும் முயற்சி கைவிடப்பட்டது. பின்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிகழ்வுக்கு வருவதற்குச் சிறிது நேரத்துக்கு முன்னர், மீண்டும் குறித்த பதாகையை ஈ.பி.டி.பி. யின் அமைப்பாளரும், பிரதேச சபைச் செயலாளரும் இணைந்து கட்டியுள்ளனர்.

அதனை எதிர்த்த பிரதேச சபைத் தலைவர், திறப்பு விழாவிலிருந்து வெளியேறினார். இதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பிரதேச சபை உறுப்பினர்களும், மக்கள் அனைவரும் வெளியேறினர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அச்சுவேலி பஸ் நிலையக் கட்டடத்தைத் திறந்து வைத்த அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலி. கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர்கள் இணைந்து அச்சுவேலி மரக்கறிச் சந்தையைத் திறந்து வைத்தனர். (த-5)

# சுகாதார வைத்திய அதிகாரி திடீரென இடைநிறுத்தம்

மன்னார் ஜன,26

உணவுப் பொருள்களைப் பதுக்கிவைத்திருந்த கூட்டுறவுச்சங்கக் களஞ்சியத்துக்குச் சீல் வைத்த சுகாதார வைத்திய அதிகாரி திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

மடு மேலதிக சுகாதார வைத்திய அதிகாரியாகப் பணியாற்றிய மருத்துவர் ஜீ.குணசீலனே மேற்படி பதவியிலிருந்து கடந்த 23 ஆம் திகதி நீக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான அறிவித்தல் கடிதம் கிடைத்திருப்பதை மருத்துவ அதிகாரி உறுதிப்படுத்தினார். கடந்த மாதம் மன்னார் மாவட்டம் கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தது.

அப்பகுதி மக்களுக்கு வழங்க அனுப்பப்பட்ட பெருமளவு பொருள்கள் வழங்கப்படாமல் முற்றாகப் பழுதடைந்து துர்நாற்றம் வீசிய நிலையில் மன்னார் கூட்டுறவுச் சங்க களஞ்சியத்திலிருந்து மீட்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் நடவடிக்கையில் இறங்கிய வைத்திய அதிகாரி ஜீ.குணசீலன் களஞ்சிய சாலைக்கும் சீல்வைத்தார்.

இந்தச் சம்பவத்தின் பின்னணியிலேயே இவருக்கு திடீர் இடைநிறுத்தம் வழங்கப்பட்டிருக்கலாமென சுட்டிக்காட்டப்படுகிறது. (த-16-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய், தந்தையை இழந்த 5 ஆயிரத்து 732 சிறுவர்

## யாழ். மாவட்டத்தில் இனங்காணப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜன.26

*யாழ். மாவட்டத்தில் தந்தை, தாயை இழந்த நிலையில் 5 ஆயிரத்து 732 சிறுவர்கள் வாழ்வது இனங்காணப்பட்டுள்ளது. இந்த விவரத்தை யாழ். மாவட்ட செயலக அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இதில் தந்தையை மாத்திரம் இழந்த நிலையில் 4 ஆயிரத்து 679 சிறுவர்களும் தாயை மாத்திரம் இழந்த நிலையில் ஆயிரத்து ஐம்பத்திமூன்று சிறுவர்களும் உள்ளனர் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் தந்தையை இழந்த நிலையில் 101 சிறுவர்களும் தாயை இழந்த நிலையில் 27 சிறுவர்களும் வேலணை பிரதேச செயலர் பிரிவில் தந்தையை இழந்த நிலையில் 226 சிறுவர்களும் தாயை இழந்த நிலையில் 56 சிறுவர்களும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் தந்தையை இழந்த நிலையில் 179 சிறுவர்களும் தாயை இழந்த நிலையில் 20 சிறுவர்களும்-


காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் தந்தையை இழந்த நிலையில் 123 சிறுவர்களும் தாயை இழந்த நிலையில் 38 சிறுவர்களும் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் தந்தையை இழந்த நிலையில் 381 சிறுவர்களும் தாயை இழந்த நிலையில் 56 சிறுவர்களும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் தந்தையை இழந்த நிலையில் 301 சிறுவர்களும் தாயை இழந்த நிலையில் 50 சிறுவர்களும்-

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தந்தையை இழந்த நிலையில் 530 சிறுவர்களும் தாயை இழந்த நிலையில் 145 சிறுவர்களும் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் தந்தையை இழந்த நிலையில் 346 சிறுவர்களும் தாயை இழந்த நிலையில் 73 சிறுவர்களும் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் தந்தையை இழந்த நிலையில் 503 சிறுவர்களும் தாயை இழந்த நிலையில் 13 சிறுவர்களும்-

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் தந்தையை இழந்த நிலையில் 364 சிறுவர்களும் தாயை இழந்த நிலையில் 67 சிறுவர்களும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தந்தையை இழந்த நிலையில் 186 சிறுவர்களும் தாயை இழந்த நிலையில் 121 சிறுவர்களும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் தந்தையை இழந்த நிலையில் 551 சிறுவர்களும் தாயை இழந்த நிலையில் 109 சிறுவர்களும்-

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் தந்தையை இழந்த நிலையில் 354 சிறுவர்களும் தாயை இழந்த நிலையில் 120 சிறுவர்களும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தந்தையை இழந்த நிலையில் 461 சிறுவர்களும் தாயை இழந்த நிலையில் 113 சிறுவர்களும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் தந்தையை இழந்த நிலையில் 73 சிறுவர்களும் தாயை இழந்த நிலையில் 45 சிறுவர்களும் இனங்காணப்பட்டுள்ளனர் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

## சுன்னாகம் நவீன சந்தையில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிப்பு



வலி வடக்கு, ஜன. 25

சுன்னாகம் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் காலை மாலை வேளைகளில் நுளம்புகளின் தாக்கம் மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்தப் பகுதியில் தொழில் புரிப வர்களும் பொது மக்கள் பலரும் அதுகுவித்து விசனம் தெரிவிக்கின்றனர்

நவீன சந்தைப் பகுதியில் கடைத் தொகுதிகள் வங்கி மற்றும் அருகில் சந்தையென நாளாந்தம் பல ஆயிரக் கணக்கான பொதுமக்களும் பல நூற்றுக் கணக்கான ஊழியர்களும் இந்த இடத்தில் கூடி வருகின்றனர்.

குறிப்பிட்ட பகுதியில் உள்ள நீர் வடிந்தோடும் வாய்க்கால் பகுதிகளில் போடப்படும் கழிவுகள் மற்றும் பழைய பொருள்களால் நீர் வடிந்தோட முடியாமல் தேங்குவதால் நுளம்புப் பெருக்கத்துக்கு இதுவும் ஒரு காரணமாக அமைகின்றது.

இதனால் பொது மக்கள் மற்றும் கட்டடத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். (ம-86)

## நிகழ்வுகள் இன்று

**முழு நிலா முத்து கலை விழா**

வடமாகாணக் கல்வி திணைக்களம் நடத்தும் 'முழு நிலா முத்து' எனும் கலை விழா முற்பகல் 10 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கேட்போர் கூட்டத்தில் நடைபெறவுள்ளது. வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்வர்.(ம-14-288)

**பொதுக் கூட்டம்**

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின்வருடாந்தப் பொதுக் கூட்டம் மாலை 6 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிலையத் தலைவர் க.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கிராம அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப் படவுள்ளது. (ம-14-288)

**ஆன்மிக அருளுரை**

ஓம்கிரியா பாபாஜி யோக ஆரண்யத்தில் திருநெல்வேலி கிளை நடத்தும் ஆன்மிக மிஷன் அருளுரை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் வடமாகாண சின்மய மிஷனின் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத் சைத்தன்ய அருளுரையை நிகழ்த்துவார்.(ம-14)

**பயிற்சிப் பட்டறை**

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த நடன ஆர்வலர்களுக்கான ஒரு நாள் பயிறசிப் பட்டறை இன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(ம-7-253)

**கருத்தரங்கு**

குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கான தனிப்பட்ட ஆலோசனைக் கருத்தரங்கு நண்பகல் 12.30 மணிக்கு நல்லூர் ஆலயத்துக்குப் பின்புறமாகவுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது. இதில் வைத்திய நிபுணர் எஸ்.சிவநேசன் ஆலோசனை வழங்குவார்.(ம-14)

# வட பகுதியில் சமுர்த்திச் செயற்றிட்டம் நெருக்கடிகளுக்கு மத்தியில் நடைமுறை

## சமுர்த்தி மகாசங்க முகாமைத்துவ பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 26

வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கைகொடுக்கும் சமுர்த்தி செயற்திட்டம் வடபகுதியில் பல்வேறு நெருக்கீடுகளுக்கு மத்தியிலேயே நடைமுறைப் படுத்தப்பட்டது.

யாழ் .சமுர்த்தி மகா சங்கத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மி.கியூமன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்க சமூக அபிவிருத்தி மன்ற ஏற்பாட்டில் வறிய மாணவர்களுக்கு கல்விக்கான உதவித் தொகை வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:-

**சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் பெரும் முயற்சியின் பயனாக வடக்கில் 2000 ஆம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்டது.**

பிரதேச செயலகத்தின் வழிகாட்டலின் கீழ் வீடு வீடாகவும் வர்த்தக நிலையங்களுக்கும் சென்று கடந்த வருடம் சேகரிக்கப்பட்ட அன்பளிப்பு நிதி 21 இலட்சம் ரூபா வசதி குறைந்த மாணவர்களுக்கு 500 ரூபா வீதம் வழங்கப்படுகிறது.

2010 ஆம் ஆண்டு 100 பேருக்கு உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் 2013ஆம் ஆண்டு 237 பேருக்கு வழங்கும் நிலைக்கு உயர்வடைந்துள்ளது.

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தை 1995 ஆம் ஆண்டு தென் பகுதியில் ஆரம்பித்த போதும் வட பகுதியில் அதிக முயற்சியின் பயனாக 2000 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது.

2013 ஆம் ஆண்டுக்கான வறிய மாணவர்களுக்கான உதவித் திட்டத்தில் 237 பேரில் 167 பேர் தாய் தந்தையை இழந்தவர்கள் என்பதுடன் ஏனைய மாணவர்கள் கணவனால் கைவிடப்பட்ட பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர். அத்துடன் தாய் அல் லது தந்தை அங்கவீன மடைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களும் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் திட்டத்தால் வறிய மாணவர்கள் தமது கல்வியைத் தொடர உதவியாக அமைந்துள்ளது - என்றார்.

யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்களாக பாரம்பரிய சிறுகைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன், யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமார், யாழ்.மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ஆ.இ.இரகுநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் யாழ். பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பாடசாலைகளின் வறிய மாணவர்கள் 237 பேருக்கு மாதாந்தக் கொடுப்பனவாக 500 ரூபா வழங்கப்பட்டது. (ம-14-23)

## குப்பிளானில் சிவபூமி ஞான ஆச்சிரமம்

யாழ்ப்பாணம்,ஜன.26

குப்பிளானில் அமைக்கப்பட்டுள்ள சிவபூமி ஞான ஆச்சிரமத் திறப்பு விழா எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சிவபூமி அறக்கட்டளை தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.அமெரிக்காஹவாய் சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் ஆச்சிரமத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் நல்லை ஆதின குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், பருத்தித்துறை சாரதா ஆச்சிரம முதல்வர் சித்ரூபானந்த சுவாமி, சிவதொண்டன் நிலைய சிவப்பணியாளர் முரளிதரன், கந்தர்மடம்வேதாந்த மடம் ஸ்ரீவதவித்தியாசாகர், சின்மயமிஷன் ஜாக்கிரத் சைத்தன்ய சுவாமிகள், சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் அமுத சுரபி மோகனதாஸ் சுவாமிகள் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கவுள்ளனர். (ம-13)

## 2 இலட்சத்து 17 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் அபேஸ்

வலிவடக்கு,ஜன.26

வீட்டைத் திறந்துவிட்டு காலையில் குளிக்கச் சென்றதை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி வீட்டினுள் நுழைந்த திருடர்கள் சுமார் இரண்டு இலட்சத்து 17 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிச்சென்றுள்ளனர்.

நல்லூர் கோயில் வீதியில் உள்ள வீட்டில் இந்த துணிகரமான திருட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காலையில் வீட்டின் கதவைத் திறந்துவிட்டு வீட்டின் பின்புறம் உள்ள கிணற்றில் குளிக்கச் சென்றதாகவும் அந்த நேரத்தில் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் கழற்றி வைக்கப்பட்டிருந்த சுமார் இரண்டு லட்சத்து 17 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளதாகவும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல் தெரிவித்தார். (ம-86)

## வர்த்தகக் கண்காட்சியில் சைக்கிள்களும் திருட்டு

வலி வடக்கு,ஜன.26

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற சர்வதேச வர்த்தக கைத்தொழில் கண்காட்சியில் கலந்து கொண்ட ஊடகவியலாளர் ஒருவரின் சைக்கிள் உட்பட ஐந்து சைக்கிள்களும், ஒரு மோட்டார் சைக்கிளும் திருட்டுப் போயுள்ளன.

சர்வதேச கண்காட்சியில் கலந்து கொண்ட ஒருவரது சுமார் இரண்டு லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் திருட்டுப் போனது சம்பந்தமாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

சைக்கிள்கள் திருடப்பட்டமை சம்பந்தமாக எந்த விதமான முறைப்பாடுகளும் பதிவு செய்யப்படவில்லை என்று யாழ் .மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் திருட்டு சம்பந்தமான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் கூறினார். (ம-86)

## வெறிச்சோடியுள்ள புங்கன்குளம் சந்தை

அரியாலை புங்கன்குளம் பகுதியில் அமைந்துள்ள பொதுச்சந்தை வியாபார நடவடிக்கைகள் இன்றி வெறிச்சோடிக் காணப்படுகிறது.

இந்தப் பகுதி மக்களின் நன்மை கருதி யாழ். மாநகர சபையால் அமைக்கப்பட்ட இந்த பொதுச்சந்தை கடந்த சில வருடங்களாக எந்த விதமான பயன்பாடும் இன்றிக் காணப்படுகிறது.

இந்த சந்தைப்பகுதியில் மாட்டிறைச்சிக்கடை, ஆட்டிறைச்சிக்கடை என்பன இயங்குகின்ற போதிலும் சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை விற்பனை செய்ய வியாபாரிகள் எவரும் முன்வரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுடில்லியில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பூர்வமாக அறியமுடியவில்லை.

இந்திய வெளிவிவகார அமைச்சர் குர்ஷித் சர்மா, அமைச்சின் செயலாளர் ரஞ்சன் மாத்தாய், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன் உள்ளிட்ட டில்லி நிர்வாகத்தின் உயர்மட்டப் புள்ளிகளுடனேயே அவர் இலங்கை விவகாரம் குறித்துக் கலந்துரையாடியுள்ளார் எனத் தெரிகிறது. இச் சந்திப்புகளின் போது இந்தியாவின் சார்பில் ஜெனிவா விவகாரங்களைக் கையாளும் உயர்மட்ட இராஜதந்திரிகளும் பிரசன்னமாகியிருந்தனர் என டில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் தற்போதைய மனித உரிமை விவகாரங்கள், அரசின் நல்லிணக்கச் செயற்பாடுகள் ஆகியவை உட்பட மேலும் சில முக்கியமான விடயங்களில் அரசின் குறைநிறைகள் குறித்து மேற்படி சந்திப்புகளின்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

### அரசுக்குக் கடும் அதிருப்தி

குறிப்பாக, இலங்கையின் தற்போதைய அரசின் செயற்பாடுகளைப் பகிரங்கமாக சாடி வரும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் இந்திய உயர்மட்ட அதிகாரிகள் பேச்சு நடத்தியுள்ளமையானது அரசுக்குக் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அங்கு சென்று இங்குள்ள நிலைமைகளைத் தெளிவுபடுத்துவதற்கு முன்னர், அவை குறித்து இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியிடம் டில்லி நிர்வாகம் கேட்டறிந்துள்ளமை அரசுக்குச் சிக்கலைத் தோற்றுவித்துள்ளது.

அதுவும் ஜெனிவாத் தொடர் நெருங்கும் நிலையில், மேற்படி சந்திப்புகள் இடம்பெற்றுள்ளமை முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகிறது.

அதேவேள்ளை, மார்ச் மாதம் நடைபெறும் ஜெனிவாத் தொடரில் இலங்கை விடயத்தில் எவ்வாறானதொரு நிலைப்பாட்டை எடுப்பது என்பது தொடர்பில் இராஜதந்திர மட்டத்தில் ஆய்வுகளை நடத்திவரும் இந்தியா, கடந்த தடவை நடைபெற்ற 19 ஆவது மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு இந்தியா ஆதரவளித்திருந்தாலும் கடும் போக்குடைய அந்தப் பிரேரணையை அமெரிக்காவுடன் பேச்சுநடத்தி மென்போக்கான பிரேரணையாக மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டமையும் தெரிந்ததே.

இதற்கிடையில், ஜெனிவா இராஜதந்திரச் சமர் ஆரம்பமாவதற்கு இன்னும் சில வாரங்கள் எஞ்சியுள்ள நிலையில் இலங்கை அரசுக்கு நெருக்கடிகளைக் கொடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இராஜதந்திரச் செயற்பாடுகளை முடுக்கிவிட்டுள்ளது.

இதன் ஓரங்கமாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று மனித உரிமைப் பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் உயர்மட்டப் புள்ளிகளுடன் கலந்துரையாடவுள்ளனர்.

அமெரிக்காவின் திரிசூல இராஜதந்திரக் குழு கொழும்புக்கு பயணம் மேற்கொண்ட பின்னரே அதனைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் கூட்டமைப்பு தனது வெளிநாட்டுப் பயணங்களை ஆரம்பிக்கவுள்ளது. (த-சி)

## தமிழ்மொழி..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கள் என்று ஜாதிக ஹெல உறுமயவும் தெரிவித்துள்ளன. நாட்டின் தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டுமே இசைக்கப்படவேண்டும் என கடந்த காலத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்தால் நாட்டில் பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியத் தலைவர்கள், தமிழ் மக்கள் ஆகியோர் இதற்குக் கடும் எதிர்ப்புகளைத் தெரிவித்தனர்.

நாட்டின் தேசிய கீதம் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் தனித்தனியே இசைக்கப்பட்டுவருகின்ற நிலையில், நாட்டில் இன நல்லிணக்கத்தைக் கருத்திற்கொண்டு தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் யோசனையொன்றை முன்வைத்துள்ளார்.

அமைச்சரின் இந்தக் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தேசிய சுதந்திர முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் இசைக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள தேசிய கீதம் எதிர்வரும் நான்காம் திகதி திருகோணமலையில் இடம்பெறும் சுதந்திர தின வைபவத்தின்போது இசைக்கப்படவுள்ளது. இதற்கு அனுமதியைப் பெறுவதற்கான யோசனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது எனத் தேசிய மொழிகள் மற்றும் நல்லிணக்கத்துக்கான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

'ஸ்ரீலங்கா மாதா' என்பதே இலங்கையின் தேசிய கீதமாகும். தேசிய கீதத்தின் சொற்பதங்கள் மற்றும் இசை என்பன குறித்து அரசமைப்பின் ஏழாவது அத்தியாயத்தில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில், அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

தேசிய கீதத்தை தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் பாடுதல் என்று சிறு நடவடிக்கையினூடாக நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்திவிட முடியாது. - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தேசிய கீதத்தில் அரபு இணைக்கப்படும்

இது தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் அத்துரலிய ரத்தன தேரர் தெரிவித்துள்ளமை வருமாறு:-

உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் பல்லின மக்கள் வாழ்கின்றனர். ஆனால், அந்த நாடுகளில் ஒரேயொரு தேசிய கீதம் மட்டுமே இசைக்கப்படுகிறது. அந்தத் தேசிய கீதத்தை அந்த நாடுகளிலுள்ள மக்கள் ஏற்றுக்கொண்டு அதற்கு மதிப்பளிக்கின்றனர்.

ஆனால், இலங்கையின் தேசிய கீதம் மட்டும், தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் இசைக்கப்படுகிறது. தற்போது தேசிய கீதத்தில் தமிழ்மொழியை இணைத்துப் பாடும் திட்டத்தை முன்வைத்துள்ளனர்.

இவ்வாறு செய்தால் எதிர்காலத்தில் முஸ்லிம் மக்கள் அரபுமொழியும் தேசிய கீதத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கக் கூடும் - எனத் தெரிவித்தார். (த-சி)

## கடலில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
10 பேருடன் மீன்பிடிப் படகில் ஏறிக்கடலில் சென்று கொண்டிருந்தபோதே இவர் படகிலிருந்து தவறி கடலில் விழுந்து உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. விசாரணைகளின்பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

(த-4)

## தீர்வு..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
டது. மனித உரிமை மீறல்கள் அப்பட்டமாக மீறப்படுகின்றன. இதனால் நாட்டு மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவுள்ளது.

வடக்கு, கிழக்கில் தமிழ் இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் படையினர், புலனாய்வுப் பிரிவினர், ஒட்டுக்குழுக்கள் ஆகியோரால் தொடர்ந்தும் அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர்; தாக்கப்படுகின்றனர்; கைதுசெய்யப்படுகின்றனர்; கடத்தப்படுகின்றனர்.

### நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவில்லை

வடக்கில் கடந்த 50 நாள்களுக்குள் கைதுசெய்யப்பட்ட 44 பேர் பூஸா முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. இவர்கள் எவரையும் அரசு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவில்லை. அதேவேளை, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ஆகியோர் வெலிக்கந்தை முகாமில் புனர்வாழ்வு என்ற பெயரில் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் நிலங்கள் மஹிந்த அரசின் உத்தரவுக்கமைய படையினரால் அபகரிக்கப்பட்டுவருகின்றன. தாம் நினைத்ததை இந்த அரசு செய்து முடிக்கின்றது; தட்டிக் கேட்க எவரும் இல்லை என்ற ஆணவத்துடன் செயற்படுகின்றது.

அதேவேளை, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயம் பற்றிப் பேசுவதில் மஹிந்த அரசு பின்னிற்கின்றது. தமிழ்க் கூட்டமைப்பின் கருத்துகளுக்கு இந்த அரசு செவிசாய்க்குவதில்லை.

எனவே, அரசியல் தீர்வு விடயத்தில் மஹிந்த அரசு காட்டும் இழுத்தடிப்பு, வடக்கு, கிழக்கில் படையினரின் அராஜகங்கள் குறித்து சர்வதேச நாடுகளுக்கு எதிர்வரும் தினங்களில் தமிழ்க் கூட்டமைப்பினராகிய நாம் எடுத்துரைக்கவுள்ளோம்.

சர்வதேச நாடுகளுக்கு விஜயம் செய்யும் நாம் அந்நாட்டு உயர் அதிகாரிகளிடம், "சர்வதேச மத்தியஸ்தம் ஊடாக ஒரு தீர்வைப் பெற தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள். எனவே, இலங்கை அரசுக்கு தாங்கள் அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும்" - என்பதைக் கூறவுள்ளோம். ஏனெனில், மஹிந்த அரசை நம்பி நாம் இனிப் பேச்சுக்கு செல்ல மாட்டோம்.

இலங்கையில் நடக்கும் காட்டாட்சியால் பொதுநலவாய மாநாடு இவ்வருடம் கொழும்பில் நடப்பது கேள்விக்குறி யாகியுள்ளது. அத்துடன், மார்ச் மாதம் ஜெனி வாவிலும் மஹிந்த அரசுக்குப் பாரிய தலையிடி காத்திருக்கின்றது" - என்று தெரிவித்தார் சுரேஷ். (த-சி)

## புதிய கட்சி..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
வர்களை நியமித்து தமது எதிர்கால அரசியல் திட்டங்களுக்கான வியூகங்களை வகுத்து அதன்படி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்.

ஜனநாயக தேசியக் கூட்டணியின் முக்கிய பதவிகளில் இருந்த டிரான் அலஸ், அர்ஜுன ரணதுங்க ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியிலிருந்து விலகியதையடுத்து அரசியல் களத்தில் பொன்சேகா தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என அரசியல்வாதிகள் கருத்து தெரிவித்தனர்.

பொது எதிர்க்கட்சியொன்றை உருவாக்குவதாகக்கூறி இவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் பலனளிக்கவில்லை. அவரின் நடவடிக்கைக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்கவில்லை.

இதனையடுத்த அண்மையில் குற்றப் பிரேரணையூடாகப் பதவிநீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவையும் தமது அரசியல் பயணத்தில் கைகோர்க்குமாறு பொன்சேகா அழைப்பு விடுத்தார். ஆனால் அவரிடமிருந்தும் சாதகமான பதில்கள் எதுவும் கிடைக்கவில்லை.

இதனையடுத்து, சரத் பொன்சேகா தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே ஐக்கிய ஜனநாயக பிக்குகள் முன்னணி என்ற பெயரில் பிக்குகள் முன்னணியொன்றை அவர் உருவாக்கியுள்ளார்.

குறிப்பிட்ட பிக்குகள் முன்னணியின் பிரதான செயலாளராக நாரஹேன்பிட்டிய தர்மாயதன விகாராதிபதி உலபனே சுமங்கல தேரரும், தேசிய அமைப்பாளராக உடஹமுல்ல ஸ்ரீபோதி பிரிவெனாவின் பியகம சுஸில் தேரரும், இணைப்பாளராக மாகலகமுவே ஞானவிமல தேரரும், பொருளாளராக நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கெட்டகொடவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (த-சி)

## பொதுநலவாய..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தில் நிகழும் கருத்தரங்கிலும் உரையாற்றுவார் எனக் கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகம் தெரிவித்தது.

அமைச்சர் பேர்ட் கடந்த வாரம் பிரிட்டன் மக்கள் பிரதிநிதிகள் சபையில் நடைபெற்ற இலங்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு குறுகிய உரையாற்றினார்.

அப்போது அவர் தமதுரையில், "இலங்கையில் நவம்பரில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் பிரிட்டன் கலந்துகொள்ளுமா? இல்லையா என்பதை முன்கூட்டியே அறிவிக்க இயலாது" என்று கூறினார்.

(த-சி)

## அமெரிக்காவின்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இதற்கமையவே இலங்கைப் படையினருக்கு அமெரிக்கா பயிற்சி அளிக்கிறது.

அமெரிக்காவில் கட்டளை அதிகாரிகள் மட்ட கற்கைநெறிக்கு இலங்கை அரசு பரிந்துரை செய்த மூத்த இராணுவ அதிகாரிகளின் பெயர்கள் நிராகரிக்கப்பட்டமை உள்ளிட்ட சர்ச்சைக்குரிய விவகாரங்கள் குறித்து, கொழும்பு வரவுள்ள அமெரிக்கக் குழுவுடன் கலந்துரையாடவுள்ளேன்.

இலங்கையுடன் நெருக்கமான உறவு தேவை என்று பல சந்தர்ப்பங்களில் தமது குழுக்கள் கூறியதற்கு மாறாகவே, அமெரிக்கா செயற்பட்டு வருகிறது.

தவறான தகவல்களின் அடிப்படையில், அமெரிக்கா எடுத்த முடிவினால் பாதிக்கப்பட்ட முன்னாள் புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க விவகாரம் அதற்கு ஒரு உதாரணம்.

போரின் போது, 53ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக பணியாற்றினார் என்ற அடிப்படையிலேயே, அமெரிக்கப் பயிற்சிக்கான மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்கவின் பெயரை அமெரிக்கத் தூதரகம் நிராகரித்திருந்தது.

ஆனால் அவர், 2009 மே மாதம் போர் முடிவுக்கு வந்த பின்னரே அந்தப் படைப் பிரிவுக்கு தலைமையேற்றிருந்தார்.

தற்போதைய இராணுவச் செயலராக உள்ள மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க நிராகரிக்கப்பட்டது, தனியானதொரு விவகாரம் அல்ல.

அமெரிக்காவின் இந்தக் கொள்கை மாற வேண்டும். இந்தியா தான் பெருமளவில் - 2800 இலங்கைப் படையினருக்குப் பயிற்சி வாய்ப்புகளை வழங்குகிறது. அடுத்து. பாகிஸ்தான் 1000 படையினருக்கும், அதற்கடுத்துச் சீனாவும் பயிற்சிகளை அளிக்கின்றன. இலங்கைப் படையினருக்கான பயிற்சிகளுக்கு அதிக இடங்களைச் சீனா ஒதுக்கவுள்ளது.

அமெரிக்கா இராணுவப் பயிற்சிகளை முற்றாக நிறுத்தினால், இலங்கை அதிகாரிகள் சீனா, இந்தியா, பாகிஸ்தானுக்கே போக வேண்டும். அமெரிக்க அதிகாரிகள் குழுவின் பயணம் முன்னரே திட்டமிடப்பட்டது. கடந்த ஆண்டு டிசம்பரில் நடந்த கலந்துரையாடலில் பங்கேற்கவே இவர்கள் கொழும்பு வரவிருந்தனர்.

அப்போது இவர்களின் பயணத்தைப் பிற்போட்டதற்காக காரணத்தை அமெரிக்கா தெரிவிக்கவில்லை-என்றார். (த)

## உலகறிந்த..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
ளமை தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

போர் நடைபெற்ற காலகட்டத்தில் வன்னியில் வாழ்ந்த சனத்தொகை எவ்வளவு என்பதுகூட இந்த அரசுக்கு ஒருபோதும் தெரிந்து இருக்கவில்லை. இறுதிப் போர் நடைபெற்ற காலத்தில் வன்னியின் சனத்தொகை 70,000 மாத்திரமே என்று இவர்கள் சொன்னார்கள். ஆனால் போர் முடிவுக்கு வந்த போது இவர்களது இடம்பெயர் முகாம்களுக்கே 300,000 லட்சம் மக்கள் வந்து சேர்ந்தார்கள்.

ஆகவே இவர்களது கணக்குப்படியே ஏறக்குறைய 230,000 மக்கள் மேலதிகமாக இருந்துள்ளார்கள். ஆனால், உண்மையில் வன்னியின் சனத்தொகை ஏறக்குறைய 450,000 என்பது புள்ளிவிவரப் பட்டியல்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

இது போரின் போது வன்னியில் இருந்த ஆடு, மாடு, கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கைகள் அல்ல. மாந்தர்களின் கணக்கைத்தான் நாம் சொல்கிறோம். எனவே சனத்தொகை கணக்குத் தெரியாத அரசு கணக்கு போட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

### புதிய கணக்குக் காட்டுகிறது அரசு

கணக்குத் தெரியாத அரசு இன்று புதிய கணக்கு காட்டுகிறது.போரின் போது எவரும் காணாமல் போகவில்லை என இன்று புதுக்கதை பேசுகிறது. இதை நாம் ஏற்று கொள்ள மாட்டோம். உலகமும் ஏற்று கொள்ளாது.

வன்னிப் போரில் இருந்து தப்பி வந்த அனைத்து மக்களும் இந்திய இராணுவ மருத்துவப் பிரிவு நடத்திய மருத்துவமனைகளுக்கும், சர்வதேச செஞ்சிலுவை சங்க மருத்துவமனைகளுக்கும் சென்று அவற்றின் மூலமாகவே அரசு நடத்திய முகாம்களுக்கு வந்து சேர்ந்தார்கள் எனப் பாதுகாப்புச் செயலாளர் கூறுகிறார். இது உண்மை அல்ல. ஒரு பகுதியினர் மாத்திரமே இப்படி வந்தார்கள். ஒரு பகுதியினர் நேரடியாக அரச படைகளால் கைது செய்யப்பட்டார்கள் அல்லது படையினரிடம் சரணடைந்தார்கள்.

இன்று நாம் இலங்கையில் உள்ள இந்தியத் தூதரிடமும், கொழும்பில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடமும் இதுபற்றிக் கேள்வி எழுப்புகிறோம்.

போரில் இருந்து தப்பி வந்து முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்ட அனைத்து தமிழ் மக்களும் தங்கள் அமைப்புகள் மூலமாகவே வந்து சேர்ந்தார்கள் என்பதை இந்திய இராணுவ மருத்துவப் பிரிவினராலும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினராலும் உறுதி செய்ய முடியுமா? இதுபற்றி மக்கள் கண்காணிப்பு குழுவின் சார்பாக நான் எழுத்துமூலம் இவர்களிடம் பதில் கோரியுள்ளேன்.

இறுதிப் போருக்கு முன்னரே தலைநகர் பகுதியில் மாத்திரம் சுமார் 500 க்கும் மேற்பட்டோர் கடத்தப்பட்டார்கள். கடத்தப்பட்டோர் தொடர்பாக முழு விவரப் பட்டியலை நான் அப்போது கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் நாடாளுமன்றத்தில் பிரதமரிடம் கையளித்தேன்.

அப்போதுகூட இந்த அரசு அதை மறுத்து நம்ப முடியாத கதைகளைப் பேசி என்னை அச்சுறுத்தியது.

எனவே கணக்குத் தெரியாத அரசிடம் கணக்கு கேட்டுப் பயனில்லை என்பதால் தான் நமது பிரச்சினைகளை நாம் சர்வதேசத்துக்கு கொண்டு சென்றோம்-என்றார். (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முசலி கிராமத்தின் குறைபாடுகளை நிவர்த்தித்து உதவுமாறு கோரிக்கை

## பிரஜைகள் குழுத் தலைவர் கடிதம்

மன்னார்,ஜன.26

மன்னார் மாவட்டம் முசலிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமங்களில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு முசலிப் பிரதேச பிரஜைகள் குழுவின் தலைவரான ஏ.சுனேஸ் சோசையால் பிரதேச செயலருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் இங்குள்ள கிராமங்கள் ரீதியாகக் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு அவற்றை நிவர்த்தி செய்யுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சிறிபொற்கேணிக் கிராமத்தில் நிரந்தர வீடுகள் மற்றும் காணிகள் வழங்கப்படாமை, வடிகால் அமைப்புக்கள் இல்லாமை, பாடசாலை இயங்காமை, பாலர் பாடசாலைக்குரிய குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தப்படாமை, இங்குள்ள சேமக்காலைக்குரிய சுற்று மதில் அமைக்கப்படாமை ஆகிய குறைபாடுகள் உள்ளதாக இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிலாவத்துறைக் கிராமத்தில் பாலர் பாடசாலைக்குரிய குடிதண்ணீர் வசதி இல்லாமை, கர்ப்பிணித் தாய்மாருக்குரிய கட்டடம் பொலிஸார் வசம் உள்ளமை, கடற்படையினரால் அபகரித்து வைக்கப்பட்டுள்ள மக்களின் காணிகள், மீனவ பாஸ் நடைமுறை, கடற்றொழில் பரிசோதகர் இல்லாமை, மருத்துவ மனையின் வசதியீனங்கள் என்பன தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதுபோன்ற பல குறைபாடுகளைக் கொண்டவையாக கொண்டச்சிகுடா, சவேரியார்புரம் புதிய குடியிருப்பு, அரிப்பு ஆகிய கிராமங்கள் விளங்குவதாகவும் அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)

# பழுதடைந்த நிலையில் குழாய்க் கிணறுகள்

மேலும் தற்போது சுமார் 15 குழாய்க் கிணறுகள் வரை பழுதடைந்த நிலையில் உள்ளன.

அக்கராயன்,ஜன.26

அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகளில் பல தொடர்ந்தும் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாக அந்தப் பகுதிக்கான கிராம அலுவலர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்வுக்கு முன்னர் இருந்த நிலையிலேயே தற்போதும் இந்தக் குழாய் கிணறுகள் பழுதடைந்து நிலையில் உள்ளதாக கிராம அலுவலர் கெங்காதரன் குடியிருப்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது கவலை தெரிவித்தார்.

மேலும் தற்போது சுமார் 15 குழாய்க் கிணறுகள் வரை பழுதடைந்த நிலையில் உள்ளன. இவற்றை புனரமைத்து தரும் பட்சத்தில் இங்கு வசிக்கும் மக்களின் குடிதண்ணீர் நெருக்கடிக்குத் தீர்வு கிடைக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். கெங்காதரன் குடியிருப்புப் பகுதி அக்கராயனில் குடிதண்ணீர் நெருக்கடி நிறைந்த பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இங்கு வசிக்கும் மக்கள் தமது குடிதண்ணீர்த் தேவையை நிறைவு செய்வதற்கு பல்வேறு சிரமங்களையும் எதிர்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. (க-18)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### சதாசிவம் மகேசு (அதிபர் வட்டுக்கோட்டை)



யாழ். கொழும்புத்துறை சுவாமியார் வீதியைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் மகேசு (24.01. 2013)வியாழக்கிழமை வட்டுக்கோட்டை யில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-மாணிக்கம் தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, தங் கம்மா, மனோன்மணி, பொன்னம்பலம், மகா லிங்கம், காமாட்சி ஆகியோரின் அன்புச் சகோ தரரும், காலஞ்சென்றவர்களான இராமசாமி, தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பத்ம ராணி(பாரிஸ்- பிரான்ஸ்), சிவகுமார்(லண்டன்), தர்மராஜ்(றெஜியோ எமிலியா- இத்தாலி), சுந்தரராஜா(லண்டன்), தனராணி(துலூஸ்- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வி.ரி. இலங்கோவன்(பரிஸ்), நேசவதனி(லண்டன்), சுகந்தி (இத்தாலி), தேவகி(லண்டன்), த. சூரியபாலன்(துலூஸ்-பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், அநேகா-சுரேஸ், அம்சா, ஓவியா, ஏகன், சந்தோஸா, சாருகா, சிவானி, சீரோன், சியாரா, விந்தியா, அட்சதா, காவியன், சுகந்தன், கஜன், விசாலன் ஆகியோரின் அன்பு -பேரனும் சந்தோஷின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.01.2013) ஞாயிற்றுகிழமை மு.ப.10.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று சங்கரத்தை வழுக்கையாறு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வட்டுக்கோட்டை தெற்கு, குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி இரஞ்சிதம் நாகராஜா

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரஞ்சிதம் நாகராஜா நேற்று (25.01.2013) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா நாகராஜா அவர்களின் அன்பு மனைவியும், கந்தையா -பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், சுந்தையா- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், விக்னேஸ்வரராஜா (சுவிஸ்), கதிர்காமராஜா (N.K ஜேர்மனி) ஜெயகௌரி, சாந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், பொன்விழி (சுவிஸ்), விஜயலக்ஷ்மி (ஜேர்மனி), செல்வராசா (ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்) திருச்செல்வம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் மீனாம்பிகை (மலேசியா), நடராஜா (பொறியியலாலர், மலேசியா), கதிரவேலு சிவபாக்கியம், சுப்பரமணியம் சுபத்திராதேவி (மலேசியா) மற்றும் ரட்ணசிங்கம் (T.A. மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கந்தசாமி இலட்சுமி, நடராஜா ஞானாமிர்தம் (மலேசியா), சுப்பையா ராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், மாதங்கி, மதுராங்கி, கஜன், அனிதா, லக்ஸ்மன், ரஞ்சீவன், சங்கீதா, உமாசுதன், சிந்துஜா, வீரசுதன், மீரா, மிதுலா, மதிமோகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மிதுலன், அர்ச்சனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (30.01.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 1.00 மணிக்கு திருவடிநிலை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். தகவல்: குடும்பத்தினர். 0217902903.

## விற்பனைக்கு

Lister டீசல் இஞ்சின் 65 கோஸ்பவர் 1500 Rpm England தயாரிப்பு, பாவித்த அலுவலக தளபாடங்கள், ஒயில் வெல்டிங் மிசின் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776566873

## தேவை

நெல்லியடியில் வைத்திய நிலையத்துக்கு பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு- 0757413875

## விற்பனைக்கு

1வயது நிரம்பிய அல்சேசன் ஆண் பெண் நாயும், டல்மேசன் ஆண் பெண் நாயும், பொமேரியன் ஆண் பெண் நாயும், 45 நாள் பூர்த்தியான பொமேரின் குட்டிகளும், டாசோன் ஆண் பெண் குட்டிகளும், மணிதாரா, முயல், வெள்ளடியன்.

தொடர்பு- வி.மயூரன், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஆயக்கடவை பிள்ளையார் கோயில் முன்பாக, பூதராயர் கோயிலடி, டயலொக் ரவர் அருகில்.

## தவறிவிட்டது

சந்திரபாலன் பாக்கியலெட்சுமி ஆகிய எனது பாஸ்போர்ட் யாழ். நகரில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

T.P.: 077 0858291

## வீடு வாடகைக்குத் தேவை

3 பேர் கொண்ட அரச தொழில் புரியும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு யாழ்ப்பாணத்தை அண்டிய பகுதிகளில் தேவை.
தொடர்பு- 0771632578

## கட்டட ஒப்பந்ததாரர் தேவை

கட்டடம் கட்டுவதற்கு கட்டட ஒப்பந்ததாரர் தேவை.

T.P. 077 1368968
077 9789223

மாற்ற முடியாதது எதுவுமே இல்லை மாற்றம் தேவையானது.
எங்கள் மாற்றம் உங்களை வியக்க வைக்கும்

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.



கருமை நிற நீக்கம் (மாநிறத்தில் இருந்அழகிய சிவப்பழகு) கருவளையம் உதட்டுக்கருமை,கழுத்துக்கருமை நீக்கம் மூக்கோரங்களிலுள்ள கொழுப்புக்கட்டிகள் போன்றவற்றிற்கு நிரந்தரதீர்வான ஆயுர்வேத சிகிச்சைகள். ஆயுர்வேத ஓயில்மசாஜ் (முகம்,கழுத்து) முடிசம்பந்தமான அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வுகள். உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல் (இடுப்பு,கை,தொடை) போன்ற தசை குறைப்புக்கள்) வரையான சிகிச்சைகள்.

எமது முகவரி:
இல.262, "சானியா கேபல் கெயர்" நாயன்மார்கட்டு அயுர்வேத வைத்தியசாலை,
செம்மணி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.



முற்பதிவு அவசியம்: 0777351954

## வீடு வாடகைக்கு

கச்சேரி, நல்லூர் வீதியில் இல.221, சகல வசதிகளும் கொண்ட சுத்தமான குடிதண்ணீர் உட்பட வாகன தரிப்பிட வசதி கொண்ட வீடு வாடகைக்குண்டு.
(நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு:0774940523,0212225431. (28739)(6.7.4)

## Personal Class

0776408622. (28740)(6.7.4)

## ஐங்கரன் காகிதாதிகள்

தற்போது புதிய இடத்தில் இயங்கி வருகின்றது.

மலிவு விற்பனை

- அப்பியாசக் கொப்பிகள்
- சிறுவர்களுக்கான புத்தகப்பைகள்
- பாடசாலை உபகரணங்கள்

மேலும் பல பொருள்களும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
● மலிவு விற்பனை குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டுமே நடைபெறும்.

144, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P:-0214900582

## பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே, உமது திருநாமம் அர்ச்சிக்கப் படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி, எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வில் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலதுக்கும் நன்றி கூறி உமைத் துதிக்கிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் என்றென்றும் உம்மிலிருந்து விலகாமல் உம்மீது உறுதியாய் நிலைத்திருப் பேனென உறுதிகூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவருக்கும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன். ஆமென்.

பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி. (28385) (2.6.7) அடியாள்.

## மரண அறிவித்தல்

### திருமதி சுப்பிரமணியம் அபிராமிப்பிள்ளை



காரைநகர், களபூமி விளானையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திருமதி அபிராமிப்பிள்ளை சுப்பிரமணியம் 24.01.2013 வியாழக் கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-காசுபதிபிள்ளை தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ் சென்றவரான முருகேசு - கதிராசிப்பிள்ளை தம்பயரின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், கணபதிப்பிள்ளை, கந்தையா, சபாரட்ணம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் வசந்தகோகிலம், பாலேந்திரன், இராசமலர், யோகேஸ்வரி, மகேந்திரன், சண்முகரத்தினம் ஆகியோரின் அன்பு தாயாரும் தங்கரத்தினம், V.M.P முருகேசு, இரத்தின பூபதி, கிருஷ்ணவேணி, புவனராணி ஆகியோரின் அன்பு மாமி யாரும் சுபிதா, கிருத்திகா, அஷ்வின்பிரகாஷ், மகிழினி, தாரணி, ஞானதாட்சாயினி, உமாதர்சினி, நிலேஸ், கிருசா, நிலக்ஷன், சிவகௌரி, சிவகாந்தன், சிவகுமார் ஆகி யோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொறளை (Borella) ஜயரட்ண மலர்ச்சாலையில் இன்று (26.01.2013) சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்படும் நாளை (27.01.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகன் சுப்பிரமணியம் பாலேந்திரன்

12-3/6, Rohini Road,
Wellawatta, Colombo 06. T.P: 0777760477
C/5815)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## மயில்வாகனம் டிலக்ஷன்



நேற்று (25.01.2013)வெள்ளிக்கிழமை எமது நிறுவனத்தின் சக ஊழியரான மயில்வாகனம் டிலக்சனின்(கடற்கரை வீதி, நாவாந்துறை வடக்கு,யாழ்ப்பாணம்.) திடீர் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதா பங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
அன்னை கடல் உணவு
வாணிபத்தின்
உரிமையாளர், ஊழியர்கள்
(S.K.M.E)

கடற்கரை வீதி,
நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்.
(28742)(5-6-7)

## முதியோர் கௌரவிப்பு

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய நிறுவுநர் அமரர் பொன். நாக மணியின் 16 ஆவது ஞாப கார்த்த தினமும் முதியோர் கௌர விப்பு விழாவும் சன சமூக நிலைய கலை யரங்கில் தலைவர் சி.மதியழகன் தலை மையில் இன்று சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு நடைபெற வுள்ளது.

இதில்பிரதமவிருந் தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் சில்வேஸ்ரி அலென்ரின் கலந்து கொள்வார். (288)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்...



அன்னை மடியில்
05.09.1930

இறைவன் மடியில்
07.02.2012

அமரர் ஆறுமுகம்
அருணாசலம் (நவரத்தினம்)

திதி: 26.1.2013

வேரூன்றி கிளைகள் பலவிட்டு ஆலமரமாய் இருந்தீர் ஐயா!
அதில் விழுதுகளாய் எமை தாங்கி நின்றீர். வேரறுந்த
மரமாய் நீர் விழவே நெஞ்சை விட்டகலாத உம்
நினைவால் காயவில்லை எம் ஈரவிழிகள்
உம் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
மனைவி,மக்கள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்
குடும்பத்தினர்.

சிறுப்பிட்டி தெற்கு.
நீர்வேலி.


Shakthy microtec

நீங்கள் எதிர்பார்த்திருந்த Branded கணினிகளை Computer wholesaler

27.01.2012 ஞாயிற்றுக்கிழமை முதல்
இல.170, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலில்
அமைந்துள்ள எமது காட்சியறையில்
மிகவும் குறைந்த விலையில்
உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

19" Monitor Rs. 7,000/-
17" Monitor Rs. 6,000/-
Keyboard & Mouse Rs.800/-
Web Cammera Rs. 850/-
Head phone Rs. 350/-
15" Monitor Rs. 5,000/-
Dual Core, Core2Due கணினிகள் 12,000 ரூபாவிலிருந்து...
Labtop 18,000 ரூபாவிலிருந்து...

இல.170, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

Hotline : 077 9120842


# இருபத்தோராவது பிறந்த தினமும் இரண்டாம் ஆண்டு நினைவுகளும்



## அமரர் தங்கராசா சுரேந்தினி

மனம் மகிழ
1991.05.16

திதி:2013.01.26

மண்மகிழ
2011.01.19

வைகாசித் திங்கள் பதினாறில்
தாய் மடியில் தவழ்ந்து
பாசமாக உறவுகளை
அரவணைத்து மகிழ்ந்து
நினைவுகளை சிறைப்பிடித்து
நிழலாகத் தந்து
இரண்டு ஆண்டுகளை
இமைப்பொழுதில் மறைத்து
விழிவழியே நீர் சொரிய
எங்களுக்குள் நிலைத்து
மாசித்திங்கள் பத்தொன்பதை
எண்ணங்களில் நிறைத்தவளே
பௌர்ணமி நிலவாய் மீண்டும்
ஒரு முறை எம்முன் வாராயோ...!



க.தங்கராசா குடும்பத்தினர்.

(C/6041) (2.6.7) சுதன் தச்சுத் தொழிலகம், விக்னேஸ்வரா வீதி, சங்கானை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நாட்டு நலனில் நாட்டம் கொள்வரா சிங்கள மக்கள்...?

இலங்கை அரசு அண்மைக்காலமாக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் ஜனநாயக விரோதமானவை என்று சர்வதேச நாடுகள் கடும் கண்டனமும் அதிருப்தியும் தெரிவித்து வருகின்றன. அவற்றுக்கு ஒருவகையில் உள்நாட்டில் வலுச் சேர்க்கும் வகையில் நாட்டின் ஜனநாயகம் முற்றாக அழிந்து போய்விட்டது என்று அதிரடியாகத் தெரிவித்து பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறார் அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு மறைமாவட்டப் பேராயர் அதி .வண. திலோராஜ் கனகசபை.

நாட்டில் ஜனநாயகத்துக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையிலும், ஏனைய மதங்களின் தலைவர்கள் ஓரளவு மௌனப் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றனர். இத்தகைய சூழ்நிலையில், அங்கிலிக்கன் பேராயர் மிகவும் காத்திரமான வார்த்தைகளைப் பயன்படுத்தி வெளியிட்டுள்ள கடிதம் ஊடகங்களில் பிரதான இடத்தைப் பிடித்துள்ளது.

திருச்சபைகளும், ஏனைய மத அமைப்புகளும், குடிசார் சமூகங்களும் மீண்டும் மீண்டும் எச்சரித்த போதிலும், நிறைவேற்றதிகாரமும் நாடாளுமன்றமும் அரசமைப்பை அலட்சியம் செய்துவிட்டன என்றும், இலங்கையில் ஜனநாயகம் நிலைப்பதற்கு இனி வாய்ப்பில்லை என்றும் தமது அத்தியட்சாதீன மதகுருமாருக்கு எழுதிய கடிதத்தில் பேராயர் தெரிவித்திருக்கிறார். நாடு மிகவும் மோசமான நெருக்கடிக்குள் சென்றுகொண்டிருப்பதை அவரது கடிதம் கோடிகாட்டுகிறது.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பு அரசமைப்பு ரீதியில் நாடு எதிர்நோக்கும் பெரும் நெருக்கடியாக அரசியல் ஆய்வாளர்கள் இதனைக் கருதுகின்றனர். எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முதல் நாளான பெப்ரவரி 3 ஆம் திகதியன்று உபவாசமிருந்து பிரார்த்தனை செய்யுமாறும், சுதந்திர தினமான நான்காம் திகதி வெள்ளை உடை அணியுமாறும் தெரிவித்துள்ள பேராயர் மிகவும் கனத்த இதயத்துடன் தாம் இந்தக் கோரிக்கையை விடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

"இலங்கையில் இடம்பெறும் அராஜகங்களைப் பார்த்துக்கொண்டு கிறிஸ்தவ திருச்சபைகள் அமைதியாக இருக்க முடியாது. அவ்விதம் அமைதியாக இருப்பது ஆண்டவரை அவமதிப்பதாகும். அது ஆண்டவரின் மக்களுக்குச் செய்யும் துரோகம் ஆகும்" - என்றும் பேராயர் இடித்துரைத்து உள்ளார்.

நாட்டின் 2500 ஆண்டு கால வரலாற்றில், தேசியப் பிரச்சினைகள் ஏற்படும் போதெல்லாம் பௌத்த குருமாரே முன்வந்து நாட்டைப் பாதுகாத்துள்ளனர். தற்போதைய அரசமைப்பு நெருக்கடியில் நாட்டில் ஜனநாயகத்தையும், சட்ட ஒழுங்கையும், நல்லாட்சியையும் நிலைநாட்ட மக்கள் போராட்டச் சக்திகளுக்குத் தலைமை வகிக்கும்படி முன்னாள் இராணுவத் தளபதியும் சமூக நீதி இயக்கத்தின் தலைவர்களில் ஒருவருமான சரத்பொன்சேகா பௌத்த தலைமைப்பீடங்களுக்கு விடுத்த கோரிக்கை பயன் அளிக்கவில்லை.

அரசின் அதிகார பலம் அவர்களை அடக்கி வைத்துவிட்டது. ஜனநாயகத்தைப் பாதுகாக்க பௌத்த குருமார் முன்வந்திருந்தால், ஏனைய மதங்களின் தலைவர்களும் அவர்களுடன் இணைந்துகொள்ள வழி ஏற்பட்டிருக்கும். அது அரசைச் சிந்திக்க வைத்திருக்கும். 'நோலிமிட்' ஆடை நிறுவனம் முன்பாகவும், பள்ளிவாசல்கள் முன்பாகவும் ஆர்ப்பாட்டம் நடத்துவோருக்கு இந்த நாடு எதனை நோக்கிச் செல்கிறது என்பது இன்னும் புரியவில்லை. தமது சுதந்திரமும் நசுக்கப்படும் காலம் வரும்போதுதான் அவர்கள் அதனைக் கண்டுகொள்வார்கள்; விழித்துக்கொள்வார்கள்.

இலங்கையில் வாழும் சகல மக்களும் சமவாய்ப்புகளையும் சம வளங்களையும் அனுபவிக்கும் உரிமையைப் பெற்றால் மட்டுமே நாட்டில் நல்லாட்சி மலர்வதற்குச் சமன். ஆனால் இன்றோ சட்டமும் ஒழுங்கும் முற்றாகச் சீர்குலைந்த நாடாகவும் சுதந்திரம் அற்ற நாடாகவும் இலங்கை மாற்றப்பட்டுவிட்டது.

தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைகளை அடக்குவதுடன் ஆரம்பமான ஜனநாயக விரோத நடவடிக்கைகளை தென்னிலங்கை மக்கள் அன்று ஆதரித்தார்கள், ஆர்ப்பரிக்கவும் செய்தார்கள். தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக மட்டுமே அது பார்க்கப்பட்டது. சிங்கள மக்களுக்கு இனவெறியூட்டி தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் தாம் அரசபீடத்தில் மாறி,மாறி ஏறிக்கொண்டனர்.

தமிழ் மக்கள் அனுபவித்துவரும், கொழும்பு அரசுகளின் அதர்மங்களை மூடி மறைப்பதிலோ அன்றி ஆதரிப்பதிலோ காட்டிய வேகத்தையும் அவிவேகத்தையும் தளர்த்திக் கொள்வதற்கு சிங்கள புத்திஜீவிகள் முன்வரவில்லை. தமிழ் மக்களுக்கு நேர்ந்துள்ள கதிக்கு அநேகமாகச் சமமான பாதிப்புக்களும், ஆபத்துக்களும் அவர்களை இப்போது நெருங்கிய இவ்வேளையிலும், தங்கள் இனவெறி சார்ந்த சிந்தனைகளை மாற்றுவார்களோ என்பதனை எதிர்பார்க்க முடியவில்லையே.

ஜனநாயகத்துக்கு ஏற்பட்ட ஆபத்துக் குறித்து திரும்பத் திரும்ப விடுத்த எச்சரிக்கைகள் பயன் அளிக்கவில்லை. அநீதிக்கு எதிராகவும், அச்சுறுத்தல்களுக்கு எதிராகவும், வன்முறைகளுக்கு எதிராகவும் பேச சிங்கள மக்களும் அஞ்சும் நிலை இப்போது தோன்றியுள்ளது. நாட்டின் அரசமைப்பைச் சிதைப்பதற்கு இது வாய்ப்பை ஏற்படுத்தி உள்ளது. எந்த அரசமைப்பைப் பாதுகாப்பதாக சத்தியப்பிரமாணம் செய்தார்களோ அதே அரசமைப்பைச் சிதைப்பதற்கு அரச தரப்புக் கதிரைகளில் அமர்ந்திருப்போர் முனைகிறார்கள். அங்கிலிக்கன் திருச்சபை மட்டும் அல்ல, சகல மத ஸ்தாபனங்களும் ஒன்றிணைந்து இதற்கு எதிராகக் குரல் கொடுக்கும் நிலை வரவேண்டும். சொல்வது சுலபம் செய்வது கடினம் என்று தூர விலகிக்கொள்ளலாகாது. இந்த அருமருந்தன்ன நாட்டினது மக்களின் ஜனநாயக நலன்களில் உண்மையான, நேர்மையான பக்குவத்துடன் தென்னிலங்கை மக்கள் கால் பதிப்பரா?; எப்போது?

# பிறப்புச் சான்றிதழ் இல்லாத சிறுவர் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ்.மாவட்டத்தில் பிறப்புச் சான்றிதழ் இல்லாத நிலையில் உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுகளைவிட கடந்த ஆண்டு மேலும் அதிகரித்துள்ளது.

பிரதேச செயலகங்கள் தோறும் நடமாடும் சேவைகள் நடத்தப்பட்டு வருகின்ற போதும், கடந்த ஆண்டு 208 சிறுவர்கள் தமது பிறப்புச் சான்றிதழ் இல்லாமல் இருப்பதாக யாழ்.மாவட்ட செயலக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு 190 ஆகக் காணப்பட்ட இந்த எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டு 140 ஆகக் குறைவடைந்தது. 2012 ஆம் ஆண்டு மீண்டும் அதிகரித்து 208 ஆகக் காணப்பட்டது.

இதில், நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 10 சிறுவர்களும், வேலணை பிரதேச செயலர் பிரிவில் 4 சிறுவர்களும், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 11 சிறுவர்களும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் ஒரு சிறுவனும், யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 10 சிறுவர்களும்-

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 58 சிறுவர்களும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 05 சிறுவர்களும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 54 சிறுவர்களும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 3 சிறுவர்களும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 6 சிறுவர்களும்-

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 2 சிறுவர்களும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 3 சிறுவர்களும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 7 சிறுவர்களும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 25 சிறுவர்களும், மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 9 சிறுவர்களுமாக 208 சிறுவர்கள் பிறப்புச் சான்றிதழ் இல்லாமல் இருப்பது இனங்காணப்பட்டுள்ளது.

(ம-5)

## 30 மொழிச் சங்கங்கள் ஊடாக மொழி உரிமை செயற்றிட்டம்

### மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ்.மாவட்டத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் 30 மொழிச் சங்கங்கள் ஊடாக மொழி உரிமை தொடர்பான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிராம ரீதியில் நிறுவப்பட்டுள்ள இந்த மொழிச் சங்கங்கள் ஊடாக பொது மக்களின் மொழி உரிமை மீறல் தொடர்பான பிரச்சினைகள் கண்டறியப்பட்டு அதற்கான ஆலோசனைகளும், பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது.

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்துடன் இணைந்து தகுதி வாய்ந்த சட்ட ஆலோசகர்களின் வழிகாட்டலில் யாழ். மாவட்டத்தில் தமிழ் மக்கள் மத்தியில் மீறப்படும் மொழிப் பிரச்சினைகள் கண்டறியப்பட்டு, மொழி உரிமை மீறப்படும் துறை சார்ந்த திணைக்களங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக கிராம மட்டத்தில் மக்களிடையே மொழிச் சங்க உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் ஊடாகத் தனிப்பட்ட ஒவ்வொருவருடைய மொழி சார்ந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன.

பொலிஸ் நிலையங்கள், ஏனைய திணைக்களங்கள், அரச கருமபீடங்கள், வைத்தியசாலை என பொது மக்கள் தமது அன்றாடத் தேவைகளுக்காகவும், தனிப்பட்ட தேவைகளுக்காகவும் மொழிப் பரிமாற்றம் செய்யப்படும் இடங்களில் தனிப்பட்ட ஒருவரின் மொழி உரிமை மீறப்படுவது தொடர்பாக அவர்கள் ஊடாகவே முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் முறைப்பாடுகள் பதியப்பட்டு வழக்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக அரச கரும மொழிகளாக தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளும் மக்களின் நலனுக்கு ஏற்ப பயன்பாட்டில் இருக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. (ம-14)

## மாவிட்டபுரத்தில் தைப்பூச இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம்,ஜன.26

மாவிட்டாரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் இலட்சார்ச்சனை பூர்த்தியும், திருமஞ்சப் பவனி நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

தைப்பூசத் திருநாள் இலட்சார்ச்சனை நிகழ்வு நாளை முற்பகல் 10 மணிக்கும், பிற்பகல் 4 மணிக்கும் நடைபெற்று தொடர்ந்து திருமஞ்சப் பவனி 4.30 மணிக்கு நடைபெறும்.

அன்றையதின பூசை வழிபாடுகள் அதிகாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணி வரை இடம்பெறும்.

திருவனந்தல், ஸ்நபனாபிஷேகம், காலை சந்திப்பூசை, இலட்சார்ச்சனை, மகேஸ்வர பூசை என்பன இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து மாலை நிகழ்வுகள் நண்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகி இரவு 7.30 மணி வரை இடம்பெற உள்ளன. (ம-13)

## மறுசீரமைப்பின் பின் செலான் வங்கியின் யாழ்.கிளை திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.26

வாடிக்கையாளர் சேவைத் தரத்தை மேம்படுத்தும் முகமாக மறுசீரமைக்கப்பட்ட செலான் வங்கியின் யாழ். கிளை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்.கிளையின் பிராந்திய முகாமையாளர் வி.சிவகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் செலான் வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளர் கலாநிதி ப.நிரஞ்சன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ம-14)

வர்த்தமானி அறிவிப்பு தாபனவிதிக் கோவைக்கு அமைய

## இணைந்த சேவை உத்தியோகத்தருக்கு இடமாற்றம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.26

அரசால் அறிவிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரமும், தாபன விதிக் கோவைக்கு அமைவாகவும் வடமாகாண சபையின் கீழ்வரும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றங்களை மேற்கொள்ளுமாறு, வடக்கு கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கம், வடமாகாண பொது நிர்வாக செயலாளரைக் கேட்டுக்கொண்டுள்ளது.

வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண சபையாக இருந்து, 2007 ஆம் ஆண்டு வடமாகாண சபை தனியாகப் பிரிக்கப்பட்டபின்னர் முறையான இடமாற்றங்கள் எவையும் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் 2011 ஆம் ஆண்டு கோரப்பட்ட இடமாற்ற விண்ணப்பங்களை ஒழுங்கான முறையில் முன்னெடுக்காமல் திடீரென இடமாற்றக் கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

ஆளணி மீள் பரவலாக்கம் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படினும், பதிலீடுகள் வழங்கப்பட்டும், போதிய கால அவகாசம் இன்றி அவசர அவசரமாக மேற்கொள்வதை நோக்குமிடத்து முறையான இடமாற்றக்கொள்கையின்றி எழுந்தமானமாக நடைபெறுவதை உணரமுடிகின்றது.

வடமாகாண சபையின் கீழ் வரும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றத்துக்கான விண்ணப்பங்களைக் கோரி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தொழிற்சங்கத்தின் பிரதிநிதித்துவத்தை இடமாற்ற சபையில் வழங்கி உத்தியோகத்தர்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில் இடமாற்றம் மேற்கொள்ள வேண்டும்.

எனவே, தற்போது வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்தில் பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மேன்முறையீடு செய்யுமிடத்து அவர்களது விண்ணப்பங்களை சாதகமான முறையில் பரிசீலனை செய்து அவர்களுக்கு பொருத்தமான இடங்களுக்கு இடமாற்றம் வழங்குவதுடன், தாபனவிதிக் கோவையின் பிரகாரம் சரிசெய்யும் படியும் மற்றும் சகல கொடுப்பனவுகளையும் வழங்க வேண்டும்- எனவும் கேட்டுக் கொண்டுள்ளது.

(ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசார உத்தியோகத்தரால் நூல்கள் கொள்வனவு

நெளுக்குளம்,ஜன.26

வவுனியாவில் கடந்த இரண்டு வருடங்களில் பிரசுரிக்கப்பட்ட நூல்களைக் கொள்வனவு செய்வதற்கு வவுனியா கலாசார உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஆய்வு நூல்கள், நாவல், கவிதை, சிறுகதை, நாடகம், சிறுவர் இலக்கியம், மொழி பெயர்ப்பு நூல்கள், கல்வி சார்ந்த நூல்கள் ஆகியவைகளே இவ்வாறு கொள்வனவு செய்யப்படவுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு நூல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் கலாசார அமைச்சின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் தேர்ந்தெடுக்கப்படும் நூல்கள் பரிசுபெறும் பொருட்டு வடமாகாண கல்வி பண்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும், இதற்கான விண்ணப்பப் படிவங்களை வவுனியா பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

## ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சமுர்த்தியின் பெயரில் ஏமாற்று

முல்லைத்தீவு,ஜன.26

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் புதுவகையான மோசடி ஒன்று இடம்பெறுவதாகத் தெரிய வருகின்றது.

சமுர்த்தித் திட்டத்தில் வேலை வாய்ப்பை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கும் சிலர் படித்தவர்களிடமிருந்து கல்விச் சான்றிதழ் மற்றும் பணத்தைப் பெற்றுச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் றிசாத் பதியுதீனின் ஒட்டுசுட்டான் இணைப்பாளரான நா.வன்னியசிங்கம், இதுவொரு ஏமாற்று வேலை என்றும் இதில் எவரும் சிக்க வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளார். (க-500)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்களுக்குக் காயம்

கிளிநொச்சி, ஜன. 26

முரசுமோட்டை ஏ-35 வீதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி முரசு மோட்டையிலுள்ள ஏ - 35 வீதியில் வைரவர் கோயிலுக்கு முன்பாக உள்ள சேதமடைந்த பாலத்திற்குப் போடப்பட்ட வீதித் தடையில் மோதுண்டதால் மோட் டார் சைக்கிளில் சென்ற இந்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த 23 ஆம் திகதி இரவு 10 மணியளவில் இடம்பெற்றது. இதன்போது கள்ளப்பாடு முல்லைத்தீவைச் சேர்ந்த செல்லையா மோகனதாஸ், சு.ரூபன் ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-6)

# அவஸ்தைகளை அனுபவித்து வரும் வவுனியா கற்பகபுரம் பகுதி மக்கள்

### திருட்டுச் சம்பவங்களால் அவர்களில் சிலர் வெளியேற்றம்

நெளுக்குளம்,ஜன.26

வவுனியா கற்பகபுரம் குடியேற்றத்திட்ட மக்கள் பல்வேறு வகையிலும் அவஸ்தைக்குள்ளாகி வருகின்றனர்.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் காணிகள் இல்லாத மற்றும் வேறு வன்னிப் பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு வவுனியாவில் உள்ள கட்சி ஒன்று காணிகளை வழங்கி குடியேற்றத்தை மேற்கொள்ள உதவி வழங்கியது.

பிரதானவீதி கிரவல் மண் வீதியாகக் காணப்படுகின்றது. ஏனைய வீதிகளுக்கு இது கூட இல்லாத நிலையில் மழை காலங்களில் இங்குள்ள மக்கள் அவஸ்தைக்குள்ளாகின்றனர். மேலும் வீடுகளுக்குள் நீர்புகுவதால் இவர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் பிரதான வீதியைத் தவிர ஏனைய இடங்களில் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனால் இருளில் மூழ்கியுள்ள

**சிலருடைய காணிகள் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.**

இந்தக் கிராமத்தில் திருட்டுக்கள் சாதாரணமாகவே இடம்பெறுகின்றன.

இந்தத் திருட்டுச் சம்பவங்களால் அச்சமடைந்த 30க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இங்கிருந்து வெளியேறியுள்ளன. வன்னியின் ஏனைய பகுதிகளிலிருந்து குடியமர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்றதால் அவர்களின் வெறிச்சோடிக்கிடக்கும் வீடுகள் உடைக்கப்பட்டு மரம், கல், தளபாடங்கள், சமையல் பாத்திரங்கள் என்பன திருடப்பட்டுள்ளன. பட்டப்பகல் வேளையிலும் திருட்டுக்கள் இடம்பெறுகின்றன. திருட்டுக்கள் அதிகரித்துள்ளதால் அச்சமடைந்த பலர் இந்தப் பகுதியில் இருந்து படிப்படியாக வெளியேறி வருகின்றனர்.

பொலிஸ் பாதுகாப்பு இந்தக் கிராமத்தில் இல்லாததால் கம்பிவேலிகள் கூட அறுக்கப்பட்டுள்ளன. இந்தக் கிராமத்திலுள்ள மைதானத்துக்குப் பின்புறமாகவுள்ள பகுதி காடாக மாறி வருகின்றது.

மேலும் சிலருடைய காணிகள் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

ஆள்கள் இல்லாத வீடுகளில் கலாசார சீரழிவுகளும் இடம்பெற்று வருவதாகத் தெரிய வருகின்றது. (க-402)



முரசுமோட்டையிலுள்ள விவசாயி ஒருவரின் வீட்டில் சேமித்து வைப்பதற்கு வசதிகள் இல்லாததால் வீட்டுக்கு வெளியே அடுக்கி வைக்கப்பட்டுள்ள நெல் மூடைகளைக் கொள்வனவு செய்வதில் தென்பகுதி வியாபாரிகள் ஆர்வம் காட்டுகின்றனர். (க-6)

## நூல் வெளியீட்டு விழா

கிளிநொச்சி,ஜன.26

கிளிநொச்சியில் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா நாளை இடம்பெறவிருக்கின்றது.

நா.வை.குமரிவேந்தன் எழுதிய "அகனின் விழிப்புக்கதைகள், மதுரை எரிகிறது, தமிழியச் சான்றோர்" ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா நாளை காலை 9 மணியளவில் கரைச்சிப் பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் கலாநிதி அகளங்கன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக முனைவர் பண்டிதர் செ.திருநாவுக்கரசு, கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், முன்னாள் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா, கொழும்பு நோயல் கல்லூரி உப அதிபர் மா.கணபதிப்பிள்ளை, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் ச.லலீசன், வவுனியா அரச வேளாண் பண்ணையின் முகாமையாளர் கவிஞர் க.கணேசலிங்கம், கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆசிரியர் அ.சத்தியானந்தம் ஆகியோர் கலந்து கொள்வர். (க-426)

**மூன்று நூல்களின் வெளியீட்டு விழா நாளை காலை 9 மணியளவில் கரைச்சிப் பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில்**

## கிராம மக்களிடையே சேமிக்கும் பழக்கம் அதிகரிக்க வேண்டும்

### கூறுகிறார் கிளிநொச்சி மீள் எழுச்சித் திட்டப் பணிப்பாளர்

அக்கராயன்,ஜன.26

கிராம மக்களிடையே சேமிப்புப் பழக்கம் அதிகரிக்க வேண்டும்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் கிளிநொச்சி மாவட்ட மீள் எழுச்சித்திட்டப் பணிப்பாளர் அ.விஜயகிருஷ்ணன்.

கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பு கிராமிய அபிவிருத்தி அமைப்பின் அங்கத்தவர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வறுமையைப் போக்க வேண்டுமாயின் அனைவரும் பயிர்ச் செய்கையில் ஈடுபட வேண்டும். கிளிநொச்சியில் பெருமளவு நிலம் உள்ளவர்கள் பயிர்ச் செய்கையில் ஆர்வம் இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர். இந்தநிலை மாற வேண்டும். அனைவரும் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதுடன் இயற்கை உரங்களையும் பயன்படுத்த வேண்டும். அத்துடன் அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் ஒரு பகுதியைக் கட்டாயம் சேமிக்க வேண்டும்.

இதனால் கிராம மக்கள் தமது எதிர்காலத் தேவைகளை இலகுவில் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார். (க-18)

**வறுமையைப் போக்க வேண்டுமாயின் அனைவரும் பயிர்ச் செய்கையில் ஈடுபட வேண்டும். கிளிநொச்சியில் பெருமளவு நிலம் உள்ளவர்கள் பயிர்ச் செய்கையில் ஆர்வம் இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர்.**

## வெள்ளத்தால் பாதிப்புற்ற மன்னார் மக்களுக்கு ஜெர்மன் அரசால் உதவிகள்

### அந்த நாட்டின் தூதுவர் வழங்கினார்





மன்னாரில் வெள்ள இடர் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஜேர்மன் அரசின் நிவாரண உதவிகளை இலங்கைக்கான அந்நாட்டின் தூதுவர் நேற்று முன்தினம் வழங்கினார்.

சீரற்ற காலநிலை காரணமாக அண்மையில் ஏற்பட்ட வெள்ள இடர்களினால் நாட்டிலுள்ள பெரும்பாலான மாவட்டங்கள் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தன. இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலாளர் பிரிவிலும் வசித்த ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் மன்னார் சேவாலங்கா மன்றம் ஜேர்மன் அரசின் நிதி உதவியுடன் மடுக்கரை கிராமத்துக்கான உதவிகளை மேற்கொண்டு வருகின்றது.

மடுக்கரை கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட சுமார் 400ற்கும் அதிகமான குடும்பங்களுக்கு உலர் உணவு தவிர்ந்த இதர உதவிப்பொருள்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

ஜேர்மன் அரசின் இலங்கைக்கான புதிய தூதுவர் கலாநிதி யூர்ரீன் மன்னாருக்கு வருகை தந்தபோது மேற்படி உதவிப்பொருள்களை வழங்கினார். மடுக்கரை கத்தோலிக்க தேவாலய வளாகத்தில் இடம்பெற்ற நிவாரணப்பொருள்கள் கையளிக்கும் நிகழ்வில் 'றுார்' அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பாபரா சிலி, நானாட்டான் பிரதேச செயலாளர் திரு.சி.ஏ.சந்திரய்யா, சேவாலங்கா மன்றத்தின் வட பிராந்தியத்துக்கான விசேட திட்ட உதவிப்பணிப்பாளர் திருமதி.அனற் றொய்ஷ், சேவாலங்கா மன்றத்தின் மன்னார் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் திரு.சி.ஏ. குபேர குமார் மற்றும் அளவக்கை பங்குத்தந்தை அருட்திரு சுரேஸ் றெவ்வல் உட்படபொது மக்கள் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டுவில் ம.விக்கு புதிய வாகனத் தரிப்பிடம்

யாழ்ப்பாணம்,ஜன.25

மட்டுவில் மகா வித்தியாலய மாணவர்களின் நலன் கருதி சுமார் 2 லட்சம் ரூபா செலவில் புதிய வாகனத் தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பாடசாலையின் பழைய மாணவனான கந்தையா மதியழகன் இதற்கான நிதியை வழங்கியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இதற்கான பணிகள் பூர்த்தியாகி மாணவர்களின் பயன்பாட்டுக்கு விடப்பட்டது.

பாடசாலை மாணவர்களுக்கு சீருடைத் துணிகள் மற்றும் வெள்ளிக் கேடயங்களையும் மதியழகன் வழங்கி வைத்தார். (ஜ-16)



நாவற்குழி பாலத்தின் இரு மருங்கிலும் வேகத்தடை தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதிகரித்து வந்த விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில் விசேட பூச்சு கலவை அண்மையில் கொழும்பில் இருந்து எடுத்து வந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பாலத்தில் பூசப்பட்டிருந்தது. அது இப்போது அழிந்து போயுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (ம)

## நல்லூர் பிரதேச சபையால் சிறிய வீதிகள் திருத்தம்

யாழ்ப்பாணம்,ஜன 26

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட 17 சிறிய வீதிகள் தார் போட்டு புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

தற்போது சேதமடைந்து இருக்கும் வீதிகளை விரைவாகப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் செம்பாட்டு ஒழுங்கை, கோண்டாவில் புதுக்கோட்டை ஒழுங்கை, கோண்டாவில் ஆலடி முதலாம், இரண்டாம் ஒழுங்கைகள், கல்வியங்காடு செங்குந்தா முதலாம், இரண்டாம் ஒழுங்கைகள், கொக்குவில் நீதிராஜா குறுக்கு ஒழுங்கை, கோண்டாவில் சிவகாமி அம்மன் குறுக்கு ஒழுங்கை, கோண்டாவில் பத்திரகாளி அம்மன் வீதி, கோண்டாவில் முத்துமாரி அம்மன் வீதி, கோண்டாவில் அம்மன் வீதி முதலாம் ஒழுங்கை,

கொக்குவில் மஞ்சவனப் பதியின் ஒழுங்கை, கோண்டாவில் நாராயணா முதலாம் ஒழுங்கை, கோண்டாவில் அம்மன் வீதி இரண்டாம் ஒழுங்கை, கொக்குவில் வைரவர் வீதி, கொக்குவில் சின்னப்பா வீதி, கொக்குவில் வராகி அம்மன் வீதி, கோண்டாவில் வைத்தியசாலை குறுக்கு ஒழுங்கை போன்ற சிறிய வீதிகளே இவ்வாறு புனரமைப்புச் செய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## வீதி சேதத்தால் பயணிகள் சிரமம்

கொழும்புத்துறை,ஜன.26

கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் பெரிய குழிகள் ஏற்பட்டுள்ளன. இவை போக்குவரத்தில் பெரியளவில் சிரமங்களை ஏற்படுத்தி வருகின்றன என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சந்தைக்கு வரும் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள், வாகனப் போக்குவரத்துகளில் ஈடுபடுவோர் சன நடமாட்டம் கூடிய சந்தை வியாபார நேரங்களில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

அதேவேளை, பெரிய குழிகளில் விழுந்தெழுந்து விபத்துக்கள் இடம்பெறும் சூழ்நிலைகளும் காணப்படுகின்றன. பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இந்தப் பகுதி வீதிகளை விரைவில் திருத்த நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-135)

# அபிவிருத்திப் பணிகளில் கட்சிபேதமின்றிச் செயற்படுவோம்

## வல்வெட்டித்துறை நகரசபை எதிர்க்கட்சி உறுப்பினர் அழைப்பு

வடமராட்சி, ஜன.26

பழையவற்றை மறந்து, கட்சி பேதமின்றி நாமனைவரும் செயற்பட்டு ஒருமித்து ஒத்துழைத்து, நகரத்தை அபிவிருத்தி செய்ய முன்வர வேண்டும்.

இந்தப் புத்தாண்டில் இந்தப் பணிகளை அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுப்போம்.

வல்வெட்டித்துறை நகர சபையின் இந்த ஆண்டுக்கான கூட்டத் தொடர் ஆரம்பமானபோது உரையாற்றிய எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த திருமதி கைலாயினி இந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சபைத் தலைவர் ந.அனந்தராஜ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், திருமதி கைலாயினி தன்சார்பாகவும் கட்சியின் சார்பாகவும் கட்சியின் சக உறுப்பினர் சார்பாகவும் சபையில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய ஆண்டான 2013 இல் முதலாவது அமர்வில் நாங்கள் கலந்து கொண்டு இருக்கின்றோம்.

இந்தச் சபையானது கடந்த காலத் தேர்தல் மூலம் கடந்த வருடம் ஜூலை மாதம் 23 ஆம் திகதிக்குப் பின்னர் ஓர் அரசியல் தலைமைத்துவத்தில் பொறுப்பெடுக்கப்பட்டு 2012 வரை தமது மக்களுக்கான செயலைத் திறன்பட மேற்கொள்ளாமல் மாறாக தமது சபையின் தலைமைக் கதிரை மோகங்களில் இருந்துள்ளது. தெளிவாகக் கூறுவதானால் வெற்றிகரமாக வாக்களித்த மக்களை ஏமாற்றியுள்ளது.

எனவே, கடந்த காலத்தைப் போல் சுடலை, மாட்டிறைச்சி கடை ஊழல், மீனவர்களுடைய கூறுவிலை மடங்களை அபகரிக்கின்ற செயற்பாடுகள், கோழி இறைச்சி, கொல்களங்கள் அமைக்கின்ற முயற்சிகள், மக்கள் பிரதிநிதிகள் தாம் கற்ற பாடசாலைகளுக்கு சேவையாற்றாமல் தடுக்கும் முயற்சிகளை மேற் கொள்ளல், ஊடகங்களுக்கு சபை உறுப்பினர்கள் பற்றியும், சபை பற்றியும் தவறான கருத்துக்களைப் பரப்புகின்ற செயற்பாடுகள் போன்றவற்றை உறுப்பினர்கள் நிறுத்த வேண்டும்.

அவை எல்லாவற்றையும் விடுத்து வல்வெட்டித்துறை நகரை அபிவிருத்தி செய்வதற்கான ஆக்க பூர்வமான கருத்துக்களை முன் வைத்து, அக்கருத்துக்களை ஆராய்ந்து வாக்களித்த மக்களுக்கு நாம் சேவையாற்ற முன்வர வேண்டும்.

இந்தச் சேவைக்கென நாம் அனைவரும் இந்த ஆண்டின் முதல் கூட்டத்திலேயே ஒருமித்து உழைத்து நகர மக்களுக்குச் சேவையாற்ற முன்வர வேண்டும்.

தை பிறந்தால் வழிபிறக்கும் என்பார்கள் எனவே இந்தப் புதுவருடத்தில் எமது சபைக்கு திறம்பட வழி நடத்தக் கூடிய புதிய செயலாளர் கிடைத்துள்ளார்.

கடந்த ஆண்டு போல் மக்களை ஏமாற்றாமல் கட்சி பேதமின்றி மக்களுக்குச் சேவையாற்ற அனைவரும் முன்வர வேண்டுமென மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்துகின்றேன். - என்றார். (ம-8)

## பண்ணை– மண்டைதீவு வீதி பயணிக்க முடியாத நிலையில்



யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ்ப்பாணம் பண்ணைச் சந்தியில் இருந்து மண்டைதீவுக்கான பிரதான வீதி மிகவும் மோசமான நிலையில் உள்ளது. சுமார் ஏழு கிலோமீற்றர் வரையான இந்த வீதியின் சேதமடையாத பகுதி என ஒரு சிறிய இடம் கூடக் கிடையாது.

கடந்த இரண்டு வருடங்களாக இந்த வீதியைத் திருத்தியமைக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. எனினும் வேலைகள் இடம்பெறாத நிலையில் வீதிக்கெனக் கொண்டுவரப்பட்ட மண் திரும்பவும் எடுத்துச் செல்லப்பட்டது.

வீதி திருத்தத்துக்கென இரண்டாவது தடவையும் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. அதுவும் கைகூடாத நிலையில் கைவிடப்பட்ட வீதியாக இந்தப் பிரதான வீதி இன்னமும் காணப்படுகிறது.

வாகனங்கள் மட்டுமன்றி பாதசாரிகளும் வீதியால் பயணிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று சொல்லப்படுகின்றது.

தீவுப் பகுதியில் உள்ள வீதிகளில் மிகவும் மோசமான வீதி இது எனவும் உரியவர்கள் இந்த வீதி புனரமைப்புக் குறித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூறப்படுகிறது. (ம-7)

## மோ.சைக்கிள் திருடிய சிறுவன் பொலிஸில்

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ். நகரப் பகுதியில் ரி.வி.எஸ்.ரக சிறிய மோட்டார் சைக்கிள் ஒன்றைத் திருடிய சிறுவன் மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

நேற்று முன்தினம் நண்பகல் வேளை யாழ். முனீஸ்வரன் வீதிப் பகுதியில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டுச் சென்றவர் மீண்டும் வந்து பார்த்த போது மோட்டார் சைக்கிள் காணாமல் போயிருந்தது.

தவறவிட்டவர் நகரின் ஏனைய பகுதிகளில் தேடிச் சென்ற போது சிறுவன் ஒருவன் ஆஸ்பத்திரி வீதி வழியாகக் குறித்த மோட்டார் சைக்கிளை உருட்டிச் சென்று கொண்டிருந்ததை அவதானித்துள்ளார்.

அதனையடுத்து மக்களின் உதவியுடன் குறித்த மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டது.

அத்துடன் சம்பந்தப்பட்ட சிறுவன் யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான் என்றும் கூறப்பட்டது. (ம-17)

## வடமராட்சி கிழக்குக்கு மின் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.26

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகளுக்கு விரைவில் மின்சாரம் விநியோகிப்பதற்கான முதற் கட்டப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

தற்போது உடுத்துறை, வத்திராயன் போன்ற பகுதிகளுக்கு விரைவில் மின்சாரம் விநியோகிக்கப்படவுள்ளது.

[illegible] இப்பகுதிக்கு மின்சாரம் விநியோகிப்பதற்காக மின்சார இணைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.


இதேவேளை ஆழிய வளைவரைக்குமான பிரதான மார்க்க மின் இணைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பிரதேசத்தில் வத்திராயன் உடுத்துறை பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்கப்படுவதோடு ஏனைய பகுதிகளுக்கும் [illegible] கட்டமாக விநியோகிக்கப்படவுள்ளன என்றும் கூறப்பட்டது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநெல்வேலிச் சந்தையில் மலசலகூடத்தால் அசௌகரியம்

### வியாபாரிகள், பொதுமக்கள் சிரமம்



யாழ்ப்பாணம்,ஜன 26

திருநெல்வேலிப் பொதுச் சந்தையின் மேல்மாடிக் கட்டடத் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள மலசலகூடம் சுகாதாரச் சீர்கேடுகளுடன் காணப் படுகிறது. இதனால் சந்தை வியாபாரிகள் உட்பட பொது மக்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர்.

நல்லூர் பிரதேச சபையால் மேற்பார்வை செய்யப்படும் திருநெல்வேலிப் பொதுச் சந்தையை நாளாந்தம் நூற்றுக் கணக்கான நுகர்வோர் பயன் படுத்துகின்றனர்.

மரக்கறி மற்றும் பழங்கள் விற்பனை செய்யும் வியாபாரிகளும் சந்தையின் மேல் மாடிக் கட்டடத் தொகுதியிலேயே வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் பொது மக்களும், வியாபாரிகளும் பயன்படுத்தும் மலசலகூடம் சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப் படுவதுடன் துர்நாற்றமும் வீசத்தொடங்கியுள்ளது.

பிரதேச சபையால் சந்தையின் சுகாதார நடவடிக்கைகள் சரியான முறையில் பேணப்படாத காரணத்தாலேயே சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுவதாகவும், இதனால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வியாபாரிகள் முறையிடுகின்றனர்.

வியாபாரிகளிடம் இருந்து பெறப்படும் வரிப்பணத்தைக் கொண்டு சந்தையின் சுகாதார நடவடிக்கைகளை ஆரோக்கியமானதாகப் பேண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-14-7)

## பெண்களுக்கு தனி நீதிமன்றம் மேற்கு வங்கத்தில் ஆரம்பம்

மேற்குவங்கத்தில் பெண்களுக்கான தனி நீதிமன்றம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அங்கு அதிகரித்துள்ளன. இந்தநிலையில், மேற்கு வங்க மாநிலத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கொன பெண்கள் நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்க மாநிலம் மால்டா மாவட்டத்தில் முதன் முறையாக அந்த நீதிமன்றம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நீதிமன்றத்தை திறந்து வைத்த கொல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதி அருண் மிஸ்ரா, பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு கடுமையான தண்டனை வழங்க குறித்த நீதிமன்றம் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்தார்.



புதுடில்லியில் நடைபெற்ற வீரச் செயலுக்கான தேசிய விருது வழங்கும் விழாவில் வீரர் ஒருவருக்கு பிரதமர் மன்மோகன்சிங் விருது வழங்கினார்.

## இந்தியா- பங்களாதேஷ் இடையே குற்றவாளிகளை ஒப்படைக்கும் ஷரத்துக்கு அமைச்சரவை ஒப்புதல்

டில்லி, ஜன.26

இந்தியா - பங்களாதேஷ் இடையே குற்றவாளிகளை கைது செய்து ஒப்படைப்பதற்கான உடன்பாட்டில் உள்ள ஷரத்துகளுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அந்த உடன்பாட்டில் இடம்பெற்றுள்ள ஷரத்துகள் குறித்து விவாதிக்க பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. அப்போது உடன்பாட்டுக்கு அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்தது.

மேற்படி ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டால், பங்களாதேஷ் சிறையில் இருக்கும் உல்பா இயக்கத்தின் பொதுச் செயலாளர் அனூப் சேத்தியாவை இந்திய அரசிடம் அந்தநாடு ஒப்படைக்கும். மேலும், வடக்கு, கிழக்கு மாநிலங்களில் தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்ட பின், பங்களாதேஷ் சென்று தலைமறைவாகும் தீவிரவாதிகளைக் கைது செய்து இந்தியாவிடம் ஒப்படைப்பதற்கும் அந்நாடு நடவடிக்கை எடுக்கவுள்ளது. (வ)

# 1996 இல் அணுசோதனைக்கு திட்டம் வகுக்கப்பட்டதாம்

### அப்துல் கலாம் கூறுகிறார்



டில்லி, ஜன.26

1996 ஆம் ஆண்டின் தேர்தல் முடிவுக்கு இரண்டு தினங்கள் முன்பாக இந்தியாவின் முன்னாள் பிரதமர் நரசிம் மராவ் அணு சோதனை நடத்த திட்டமிட்டிருந்தார் என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் கூறினார்.

புதுடில்லியில் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு துறை செயலகம் சார்பில் நடைபெற்ற7 ஆவது ஆர்.என் காவோ நினைவு தின உரையின் போது, கலாம் கூறியதாவது:-

1996 ஆம் ஆண்டு மே மாதம் அப்போதைய பிரதமராக இருந்த நரசிம்மராவிடம்இருந்து எனக்கு அழைப்பு வந்தது. இதனையடுத்து அவரைச் சந்தித்த போதுதான் திருப்பதி செல்ல இருப்பதாகவும், அணுச் சோதனையை நடத்துவதற்கு சிறிது காலம் பொறுத்திருக்கும் படியும் கூறினார். பின்னர் எதிர்பாராத விதமாக தேர்தல் முடிவுகள் வெளி வந்தன. வாஜ்பாய் தலைமையிலான பா.ஜ.க., அரசு 13 தினங்கள் மட்டுமே பதவி வகித்தது. இதன் காரணமாக சோதனையை மேற்கொள்ள வாய்ப்புக் கிடைக்கவில்லை.

தொடர்ந்து பிரதமர்கள் எச்.டி. தேவகவுடா மற்றும் ஐ.கே. குஜ்ரால் ஆகியோர் பிரதமர்களாக பதவி வகித்தனர். நிலையற்ற அரசியல் சூழ்நிலை காரணமாக தொடர்ந்து 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மீண்டும் வாஜ்பாய் பிரதமர் ஆனார் . இதனைத் தொடர்ந்து மீண்டும் அணு சோதனைக்கு உயிரூட்டப்பட்டது. தொடர்ந்து அனைத்துத் தரப்பினரும் முடுக்கி விடப்பட்டனர். ராஜஸ்தான் மாநிலத்தின் பொக்ரான் இடம் தெரிவு செய்யப்பட்டது. இது பாகிஸ்தானின் எல்லைக்கு சுமார் 150 கி.மீ . தூரம் முன்னதாக அமைந்துள்ளது.

அந்தப்பகுதியில் தொடர்ச்சியான ஏவுகணை சோதனை மற்றும் வெடிகுண்டுச் சோதனை நடத்தப்பட்டு உலகின் கவனம் திசை திருப்பப்பட்டு வெற்றிகரமாக அணு சோதனை நடத்தி முடிக்கப்பட்டது-என்றார். (வ)

## தமிழக புதிய தலைமைச் செயலகம் மருத்துவமனையாக மாறும்


### எதிர்த்து தாக்கலான மனு நிராகரிப்பு



புதிய தலைமை செயலக வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட்டுள்ளது. புதிய தலைமைச் செயலகத்தை மருத்துவமனையாக மாற்றுவதை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் நிராகரிதுள்ளது. தலைமைச் செயலகத்தை மருத்துவமனையாக மாற்றுவது அரசின் கொள்கை முடிவு, அரசின் கொள்கை முடிவில் நீதிமன்றம் தலையிட முடியாது என்று நீதிபதிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். சட்டத்தரணி வீரமணி வழக்கை நீதிபதிகள் கே.என்.பாஷா, பால் வசந்தகுமார் ஆகியோர் நிராகரித்துள்ளனர்.

ஓமாந் தூரார் தோட்டத்திலிருந்து சட்டப்பேரவையை மாற்றியதில் விதி மீறல் இல்லை என்றும் ஏழை, எளிய மக்கள் பயன்பாட்டுக்கு பல்நோக்கு மருத்துவமனை தேவை எனவும் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. (வ)

## ஷிண்டே பதவி விலகக் கோரி பா.ஜ.கட்சியினர் ஆர்ப்பாட்டம்



டில்லி, ஜன.26

இந்து பயங்கரவாதத்துக்கு பாரதீய ஜனதாக்கட்சி மற்றும் சங் பரிவார் அமைப்பான ஆர்.எஸ்.எஸ். ஆதரவு வழங்குகிறது என்று கூறிய மத்திய உள்துறை அமைச்சர், சுஷில் குமார் ஷிண்டேயை பதவி விலகக் கோரி, பா.ஜ.க. தொண்டர்கள்நேற்று முன்தினம் வியாழக்கிழமை நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில், அண்மையில் நடைபெற்ற காங்கிரஸ் தலைவர்கள் ஆலோசனை கூட்டத்தில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே-

பா.ஜ.க, மற்றும் சங் பரிவார் அமைப்புகளின் செயற்பாடு குறித்து விமர்சித்தார். ஹைதராபாத் மக்கா மசூதி, மகாராஷ்டிராவின் மாலேகான், பாகிஸ்தான் செல்லும் சம்ஜோதா எக்ஸ்பிரஸ் ரயில் போன்றவற்றில் நிகழ்ந்த குண்டு வெடிப்புகளுக்கு, ஆர்.எஸ்.எஸ்., மற்றும் பாரதீய ஜனதாக் கட்சியே காரணம். ஆனால், பழியை முஸ்லிம் அமைப்புகள் மீது சுமத்தி விட்டன' என்று பேசினார்.

ஷிண்டேயின் குறித்த கருத்துக்கு, பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ்., அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்ததோடு 'காங்கிரஸ் தலைவர் சோனியா மன்னிப்புக் கேட்க வேண்டும்' என்றும் 'வலியுறுத்தின. ஷிண்டேக்கு எதிராக நேற்று முன்தினம் நாடு தழுவிய போராட்டத்துக்கும், பாரதீய ஜனதாக் கட்சிக்கு அழைப்பு விடுத்திருந்தது.

## மும்பைத் தாக்குதல் குற்றவாளி ஹெட்லிக்கு 35 வருட சிறை



சிக்காகோ, ஜன.26

மும்பையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தில் தொடர்புடைய தீவிரவாதி டேவிட் கோல் மேன் ஹெட்லிக்கு அமெ ரிக்க நீதிமன்றம் 35 வருட சிறைத் தண்டனை விதித் துத் தீர்ப்பளித்துள்ளது.

சிக்காகோவில் உள்ள நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை நேற்று முன்தினம் அளித்தது. 2008 ஆம் ஆண்டு மும்பையில் 10 பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவி பெரும் பயங்கரவாத தாக்குதலில் ஈடுபட்டனர். அவர்களை ஏவி விட்டவர்களுடன் நேரடித் தொடர்பு கொண்டவர் ஹெட்லி.

தாக்குதலுக்கு முன்பு இந்தியாவுக்கு வந்து பல இடங்களை வேவு பார்த்துச் சென்ற ஹெட்லி, அமெரிக்காவில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவரை அமெரிக்க அதிகாரிகள் நீதிமன்றத்தில் நிறுத்தி வழக்குத் தொடர்ந்தனர். அந்த வழக்கில் நேற்று முன்தினம் தண்டனை அளிக்கப்பட்டது.

## குற்றவாளியை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு வலியுறுத்து

மும்பைத் தாக்குதல் குற்றவாளி ஹெட்லியை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்:-

டேவிட் ஹெட்லிக்கு விதிக்கப்பட்ட தண்டனை மிகவும் குறைவானது என்று கூறிய அவர் ஹெட்லிக்கு அதிகபட்ச தண்டனை விதிக்க இந்தியா தொடர்ந்து வலியுறுத்தும்.

இந்தியாவில் தாக்குதல் நடத்திய குற்றவாளி ஹெட்லி என்பதால் அவரை இந்தியாவில் வைத்து விசாரிப்பது தான் சரியாக இருக்கும். இதுதொடர்பாக இந்தியா, அமெரிக்காவிடம் பேச்சு நடத்தத் தயாராக உள்ளது-என்றார். (வ)

## அணுமின் நிலையத்திலிருந்து கதிர்வீச்சு கசிவு ஏற்படவில்லை

### கூடங்குளத்தில் புரளியாம்



கூடங்குளம், ஜன.26

கூடங்குளம் அணுமின் நிலையத்திலிருந்து கதிர் வீச்சு கசிவு எதுவும் ஏற்படவில்லை என்று அணுமின் நிலைய வளாக இயக்குநர் ஆர்.எஸ். சுந்தர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் கதிர்வீச்சு கசிவு ஏற்பட்டு 40 பேர் உயிரிழந்ததாக அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்க போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் எஸ்.பி. உதயகுமார் தெரிவித்திருப்பது உண்மைக்குப் புறம்பானது. அந்த வகையில் எவ்வித சம்பவங்களும் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் ஏற்படவில்லை.

அணுமின் நிலைய வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முதலாவது அணு உலையைச் செயற்பாட்டுக்குக் கொண்டுவரும் நடவடிக்கைகள் முன்னேற்றத்தில் இருக்கின்றன. முதலாவது அணு உலையில் மின் உற்பத்திக்கான ஆயத்தப் பணிகளிலும், படிப்படியாக மின் உற்பத்தியை மேற்கொள்ளவும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளிலும் எவ்விதப் பிரச்சினைகளும் எழவில்லை.

அணுமின் நிலையத்தில் பெருமளவு ஒப்பந்தத் தொழிலாளர்கள் நாள்தோறும் பணி செய்கிறார்கள். இந்த நிலையில், பொது மக்களிடையே அச்சத்தை உரு வாக்கும் வகையில் கதிர் வீச்சு கசிவு ஏற்பட்டதாகப் புரளியை பரப்பியிருக்கிறார்கள்- என்றுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவை இலக்கு வைத்தே எமது திட்டங்கள்

## பகிரங்கமாக அறிவித்தது வட கொரியா

பியோங்யாங், ஜன.26

அமெரிக்காவை இலக்கு வைத்தே ஏவுகணை சோதனைகளும், அணுவாயுத சோதனையும் நடத்தப்படுகின்றன என்று வடகொரிய அரசு வெளிப்படையாக கூறியுள்ளது.

வடகொரியா கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நீண்ட தூரம் சென்று இலக்கைத் தாக்கக் கூடிய ஏவுகணைச் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டிருந்தது. அதையடுத்து ஏவுகணைச் சோதனை ஐ.நா. விதிமுறைகளுக்கு எதிரானது எனக் கூறி மேற்குலக நாடுகள் வடகொரியா மீது பொருளாதாரத் தடை விதித்தன. வடகொரியா மீது விதிக்கப்பட்ட தடைகளை ஐ.நா.சபையும் அங்கீகரித்திருந்தது.

இந்த நிலையிலேயே வடகொரியாவின் தேசிய பாதுகாப்புச் சபையால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வடகொரியாவின் தேசிய பாதுகாப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில்-

''நாங்கள் உலகத்துக்கு மறைக்காமல் தெரிவித்துக் கொள்ள விரும்பும் விடயம் ஒன்றுண்டு. நாம் விண்ணுக்குச் செலுத்தி வரும் பல்வேறு செய்மதிகளும் கண்டம் விட்டுக் கண்டம் பாயக் கூடிய ஏவுகணைகளும் உயர் ரக அணுப் பரிசோதனைகளும் அமெரிக்காவை இலக்கு வைத்தே மேற்கொள்ளப்படுகின்றன என்பதே அது.'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சி பிராந்திய நாடுகளிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு இறுதியில் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஏவுகணை சோதனையை நடத்திய வடகொரியா, மீண்டும் அவ்வாறான சேதனை ஒன்றை மேற்கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வடகொரியாவின் இந்த அறிவிப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த தென்கொரியா,

''வடகொரியா மூன்றாவது அணுப்பரிசோதனையை மேற்கொள்வதற்கு தொழிநுட்ப ரீதியாகத் தயாராகியுள்ளது. ஏற்கனவே ஐ.நா சபையின் எதிர்ப்புக்கு மத்தியில் ஏவுகணைப் பரிசோதனையை முன்னெடுத்த வடகொரிய ஜனாதிபதி கிம் ஜங் உன், அடுத்த கட்டத்துக்கு முன்னேறும் உத்வேகத்துடன் இருக்கிறார். இது உலக அமைதிக்கு பாதகமானது'' என்று குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறினால்

# பிரிட்டிஷ் தொழிலதிபர்களை பிரான்ஸ் அரசு வரவேற்கும்

பாரிஸ், ஜன.26

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறும் பட்சத்தில் அங்கு வாழும் தொழிலதிபர்களை பிரான்ஸ் அரசு செங்கம்பளம் விரித்து வரவேற்கும் என்று பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை பிரிட்டனின் பிரதமர் டேவிட் கமரூன் ஒன்றியத்துடனான தொடர்புகள் குறித்து மறுபடியும் பேச்சு நடத்தப் படும். அவை மனநிறைவு தராவிட்டால், பொதுமக்கள் வாக்கெடுப்பை நடத்தி அவர்களின் விருப்பப்படி முடிவெடுக்கப்படும் என்று கூறியிருந்தார்.

அதுகுறித்து பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

ஜேர்மனியின் வெளியுறவுத்துறை அமைச்சரான குய்டோ வெஸ்ட்டர்வெல் கூறுகையில்-

''பிரிட்டன் தேவையான போது சேர்ந்துகொள்வதும் தேவையற்றபோது விலக்கிக் கொள்வதும் ஒரு பிழையான விடயம் என்று கூறியுள்ளார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாக நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றில் 56 வீதமான பிரிட்டன் மக்கள் ஒன்றியத்தை விட்டு விலகிடலாம் என்றும் 30 வீதமானோர் மட்டுமே ஐரோப்பிய ஒன்றியத்துடன் இருப்பது நல்லது என்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# சிரிய அகதிகள் விவகாரம்; சர்வதேசத்துடன் பேசத் தயார்

## ரஷ்யப் பிரதமர் புடின் அறிவிப்பு

ஜெருசலேம், ஜன.26

சிரிய அகதிகள் விவகாரம் தொடர்பில் சர்வதேசத்துடன் கலந்துரையாடும் கூட்டம் ஒன்றை அந்த நாட்டிலேயே ஏற்பாடு செய்வதுடன் அதற்குத் தலைமை வகிக்கவும் தயாராக உள்ளது என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

அண்மையில் ரஷ்யாவுக்கு சென்றிருந்த லெபனானின் முக்கிய அதிகாரியான மிக்கெல் சுலைமானிடம் ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புட்டின் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இத்தகைய கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்வது சிரியாவில் இருந்து வெளியேறிக் கொண்டிருக்கும் பல இலட்சக் கணக்கான அகதிகளின் நிலை குறித்து கவனம் செலுத்த உதவும் என்று லெபனான் வலியுறுத்தியிருந்தது.



இந்தச் சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த புடின்,-லெபனான் அரசின் கொள்கையான சிரியாவின் உள்நாட்டு குழப்பத்தில் தலையிடாத அதேநேரம் லெபனானில் தஞ்சம் புகுந்துள்ள சிரிய அகதிகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க வேண்டும் என்ற உந்துதலை வரவேற்கின்றோம். லெபனானின் வேண்டுகோளை ஏற்று, சிரிய அகதிகள் விவகாரம் தொடர்பாக சர்வதேசத்துடன் கலந்துரையாடும் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து தலைமை வகிக்க ரஷ்யா தயாராக உள்ளது'' என்று தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டு ஆரம்பமான சிரிய உள்நாட்டுப் போரில் இதுவரை 60 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, மில்லியன் கணக்கான மக்களுக்கு உடனடி நிவாரணமும் தேவைப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கராச்சியில் தொடர் குண்டுவெடிப்புகள்

## 4 பேர் சாவு; 12பேர் படுகாயம்

கராச்சி, ஜன. 26

கராச்சியில் அடுத்தடுத்து இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட 4 பேர் உயிரிழந்தனர். 12 பேர் படுகாயமடைந்தனர்.



குப்பைத் தொட்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு குண்டு முதலில் வெடித்தது. சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு விரைந்த பொலிஸார், மீட்புப் படையினர் அங்கு மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். முதலாவது குண்டு வெடித்து 15 ஆவது நிமிடத்தில் மற்றொரு சக்திவாய்ந்த குண்டு ஒன்று மீண்டும் அங்கு வெடித்தது.

அதில் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 12 பேர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்த தாக்குதலுக்கு எந்த இயக்கமும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. முஸ்லிம்களின் பெருநாளான ஈத்-இ-மிலாதுன்-நபி கொண்டாடப் படவுள்ள நிலையில் நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி கண்டன வெளியிட்டுள்ளார்.

# இத்தாலி சென்ற விமானம் தென்துருவத்தில் மாயம்!

## பயணித்த மூவரின் நிலை தெரியவில்லை

ரொறண்றோ, ஜன.26

கனடாவிலிருந்து இத்தாலிக்கு அண்டார்ட்டிகா வழியாகச் சென்ற ட்வின் ஓட்டெர் விமானம் ஒன்று காணாமற் போயுள்ளது.

கேல்கரியில் உள்ள கென் போரெக் ஏர் விமான நிறுவனத்துக்குச் செந்தமான விமானத்தில் மூன்று பேர் பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.

காணாமற் போன விமானத்தை தேடும் முயற்சிகளில் அமெரிக்க மற்றும் நியூஸிலாந்து மீட்புக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது நிலவும் மோசமான காலநிலை காரணமாக தேடும்பணிகள் தாமதமடைந்து வருவதாக மீட்புக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

1970ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் கென் போரெக் ஏர் நிறுவனம், 28 ஆண்டுகளாக தென்துருவமான அண்டார்ட்டிகா வழியாக விமான சேவை நடத்தி வருகிறது.

# பாகிஸ்தான் பிரதமர் மீது மேலும் ஓர் வழக்கு பதிவு

## உயர்நீதிமன்றம் உத்தரவு

இஸ்லாமாபாத், ஜன.26

ஊழல் வழக்கில் சிக்கியுள்ள பாகிஸ்தான் பிரதமர் பர்வேஸ் அஷ்ரப் மீது மேலும் ஒரு வழக்குப் பதிவு செய்யுமாறு அந்நாட்டு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



ஊழல் குற்றச்சாட்டு ஒன்றுடன் தொடர்புடைய அதிகாரி ஒருவர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றமை தொடர்பிலேயே நீதிமன்று இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

பர்வேஸ் அஷ்ரப், மின்துறை அமைச்சராகப் பதவி வகித்தபோது, மின் நிலையங்களை வாடகைக்கு விடும் ஒப்பந்திலேயே ஊழல் நடந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது. அதையடுத்து ஒப்பந்தங்களை ரத்து செய்த உயர்நீதிமன்றம் பிரதமர் அஷ்ரப்பை கைது செய்யும்படி கடந்த வாரம் உத்தரவிட்டது.

இந்தநிலையில் எண்ணெய் மற்றும் எரிவாயு கட்டுப்பாட்டு ஆணைய தலைவராக இருந்த தாகிர் சாதிக் என்பவர் மீது ஏராளமான ஊழல் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதையடுத்து சாதிக்கை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதிமன்ற உத்தரவை அடுத்து சாதிக் அரபு எமிரேட்ஸுக்குத் தப்பிச் சென்றுள்ளார். சாதிக்கை கைது செய்ய பாகிஸ்தான் அதிகாரிகள் உரிய ஆவணங்களை எடுத்துச் செல்லாததால் கைது செய்ய முடியவில்லை.

வழக்கை நேற்றுமுன் தினம் விசாரித்த உயர்நீதிமன்ற அதிகாரிகள், அதிகாரிகளின் அசமந்தப் போக்கைக் கடுமையாக கண்டித்தனர். அத்துடன் சாதிக்கை எண்ணெய் கட்டுப்பாட்டு ஆணையத் தலைவராக நியமித்தமை மற்றும் அவர் தப்பி செல்ல உதவியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் உள்துறை அமைச்சர் ரெஹ்மான் மாலிக் மற்றும் பிரதமர் பர்வேஸ் அஷ்ரப் ஆகியோர் மீது இந்த மாத இறுதிக்குள் வழக்கு பதிவு செய்யும்படி உத்தரவிட்டனர்.

# பாகிஸ்தான் தேர்தலில் எமது கட்சியே வெற்றி பெறும்

## இம்ரான் கான்



இஸ்லாமாபாத், ஜன.26

பாகிஸ்தானில் எதிர்வரும் தேர்தலில் தமது தெஹ்ரிக் இ இன்சாப் கட்சி வெற்றி பெற்று நாட்டில் ஆட்சி அமைக்கும் என்று முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சுவிஸில் நடைபெற்று வரும் உலக பொருளாதார மாநாட்டில் பங்கேற்க வந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த இம்ரான் கான்-

பாகிஸ்தான் மக்கள் மாற்றத்தை எதிர் நோக்கி உள்ளனர், எமது கட்சிக்கு இளைஞர்களின் ஆதரவு உள்ளது. பாகிஸ் தானில் முதல் முறையாக வாக்களிக்க உள்ள 4 கோடி இளைஞர்களின் வாக்குகளில் பெரும்பாலானவை தமது கட்சிக்கே கிடைக்கும் என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - பாக். எல்லைப் பிரச்சினையில் பிரிட்டன் எந்தவிதத்திலும் தலையிடாது

லண்டன், ஜன.26

காஷ்மீர் பிரச்சினையில் பிரிட்டன் அரசு எவ்விதத்திலும் தலையிடாது என பிரிட்டன் அரசு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. இப்பிரச்னைக்கு இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண வேண்டும் என்றும் கூறியுள்ளது.

பிரிட்டன் நாடாளுமன்ற மேலவையில் உறுப்பினராக உள்ள நசீர் அகமது இந்தியா - பாகிஸ்தான் பிரச்சினை குறித்து முன்வைத்த கோரிக்கைக்கே பிரிட்டன் வெளியுறவு மற்றும் கொமன்வெல்த் அலுவலக அமைச்சர் பரோனெஸ் வார்சி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-



"காஷ்மீர் பகுதி மக்கள் விருப்பத்தின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட இரு நாடுகளும் பேச்சு மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்பதே பிரிட்டன் அரசின் நிலைப்பாடு.

இதுவிஷயத்தில் பிரிட்டனோ மற்ற மூன்றாம் தரப்பு நாடுகளோ தலையிட்டால் அது இரு நாடுகளுக்கிடையிலான அமைதிப் பேச்சுக்களுக்குத் தடையாக இருக்கும். அவ்விரு நாடுகளும் நேருக்கு நேர் பேசியே பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

இந்தக் கொள்கையின் காரணமாகவே தொழிலாளர் கட்சி தலைமையிலான அரசும் சரி, இப்போதைய அரசும் சரி காஷ்மீர் பிரச்சினையில் தலையிடாமல் உள்ளன'' என்று தெரிவித்தார்.

## கெமரூனில் இளம்பெண்கள் பலர் படுகொலை



யவுண்டே, ஜன.26

ஆபிரிக்க நாடான கெமரூனில் மர்மமான முறையில் இளம் பெண்கள் படுகொலை செய்யப்பட்டு வருகின்றமை அங்குள்ள மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கெமரூன் நாட்டின் தலைநகரான யவுண்டேவில் கடந்த 2 வாரங்களில் மாத்திரம் சுமார் 18 இளம் பெண்களின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த பெண்களின் வயது 18 இற்கும் 25 க்கும் இடைப்பட்டதென தெரிவிக்கப்படுகின்றது. இதுமட்டுமன்றிக் கண்கள், மார்பகங்கள் ஆகியன வெட்டி எடுக்கப்பட்ட நிலையிலேயே சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மாந்திரீக நடவடிக்கைகளில் நம்பிக்கையுள்ளோரே இச்செயலில் ஈடுபட்டுள்ளனர் என்று விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# ஐ.நா. சபையின் ஒப்பந்தத்தை மீறி மியன்மாரில் சிறுவர் போராளிகள்

### குற்றஞ்சாட்டுகின்றது மனித உரிமைகள் அமைப்பு

லண்டன், ஜன.26

ஐ.நா. ஒப்பந்தத்தை மீறி மியன்மார் இராணுவத்தில் சிறுவர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்படுவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

உலகம் முழுவதும் ஆயுதம் தாங்கி போராடும் போராளிக் குழுக்கள் மட்டுமின்றி, பல்வேறு நாடுகளின் இராணுவத்திலும் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சேர்க்கப்பட்டு ஆயுதப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதனை தடுப்பதற்கு ஐ.நா. பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இது குறித்து ஐ.நா. நடத்திய ஆய்வில், மியன்மார் உள்ளிட்ட 24 நாடுகளில் சர்வதேச சிறுவர்கள் உரிமைச் சட்டத்தை மீறி சிறுவர்களை ஆயுத மோதல்களுக்கு பயன்படுத்தி வருகின்றமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து கடந்த வருடம் ஜூன் மாதம் ஐ.நா. எடுத்த நடவடிக்கை காரணமாக ஜனநாயக சீர்திருத்தம் மற்றும் சிறுவர்களுக்கான பயிற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் திட்டத்தில் மியன்மார் அரசு கைச்சாத்திடப்பட்டது. அதனையடுத்து மியன்மார் இராணுவத்தில் இருந்து 42 சிறுவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் தற்போது ஒப்பந்தத்தை மீறி மியன்மாரில் சிறுவர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக மனித உரிமை அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

**"தெயின் செயின் தலைமையிலான மியன்மார் அரசு, ஐ.நா.வுடன் இணைந்து கூட்டு நடவடிக்கை திட்டத்தில் கையெழுத்திட்டு, ஜனநாயக சீர்திருத்தத்தை விரும்புவதாக தன்னைக் காட்டிக் கொள்கிறது. ஆனால், இராணுவ ஆள்சேர்ப்பு நடவடிக்கை முறையாக நடத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க அதிகாரிகள் தவறிவிட்டனர். கடந்த பத்து ஆண்டுகளில் எந்த மாற்றமும் இல்லாமல் சிறுவர் ஆள் சேர்ப்பு நடக்கிறது'' என்று லண்டனைச் சேர்ந்த மனித உரிமை அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.**

# தனிநபர் பற்றிய விவரங்களை கோருவதில் அமெ. முதலிடம்

### கூகுள் நிறுவனம் தெரிவிப்பு

நியூயோர்க், ஜன.26

தனிநபர்களின் தகவல் பரிமாற்றங்களை ஒப்படைக்குமாறு சர்வதேச நாடுகளிடம் இருந்து வரும் கோரிக்கைகள் அதிகரித்திருப்பதாக கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது.


2012 ஆம் ஆண்டின், இரண்டாவது அரையாண்டுக்கான வெளிப்படைத் தன்மை குறித்த அறிக்கையில் இந்த விவரங்களை கூகுள் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

தனிநபர்களின் தகவல் பரிமாற்றங் விவரங்களைப் பெற்றுக்கொள்வதில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது என்றும் இந்தியா இரண்டாமிடத்தில் உள்ளது என்றும் கூகுள் நிறுவனம் கூறியுள்ளது.

இந்தக் காலகட்டத்தில் அமெரிக்கா சார்பில் 8 ஆயிரத்து 438 கோரிக்கைகள் வந்துள்ளன. இந்திய அரசிடமிருந்து 2 ஆயிரத்து 431 கோரிக்கைகள் வந்துள்ளன.

அவை கேட்ட தகவல்களில் 68 சதவீதத்தை மட்டுமே எம்மால் வழங்க முடிந்தது என்றும் கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதைத் தொடர்ந்து பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்டன், பிரேஸில் ஆகிய நாடுகள் தனிநபர்களின் தகவல்களை அதிக அளவில் கேட்டு வருவதாக கூகுள் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.


நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
தைப்பூச விழா அறிவித்தல் - 27.01.2013

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலில் வழமை போன்று இந்த வருடமும் தைப்பூச விழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

முற்பகல் 11.00 மணிக்கு - விசேட அபிஷேகம்.
நண்பகல் 12.00 மணிக்கு - உச்சிக் காலப்பூசை.
பிற்பகல் 12.30 மணிக்கு - விசேட வசந்த மண்டப பூசை.
பிற்பகல் 1.00 மணிக்கு - அம்பாள் திருமஞ்சத்தில் வீதியுலா வருதல்.

அன்றைய தினம் வழமைபோல் நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபையினரால் இம்முறையும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

வழமைபோல் விசேட படகு சேவையும், விசேட யாழ் - குறிகட்டுவான் போக்குவரத்துச்சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அடியார்கள் வருகை தந்து அம்பாளின் பேரருளைப் பெற்றேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"விசேட மங்கல வாத்தியம்" வி.கே. கானமூர்த்தி அவர்களது புதல்வர்கள்

அன்னையின் சேவையில்
அறங்காவலர் சபை.
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி
அம்மன் கோயில், நயினாதீவு.

(சி/5779) (45.6.7




நயினையின் தைப் பூசத் திருவிழா
ஸ்ரீ நாகம்மாளை நாடிவரும்
அடியவர்களுக்கு
அமுதசுரபியின் சிறப்பு அன்னதானம்
தைப் பூச நன்னாள்
27.01.2013 ஞாயிற்றுக்கிழமை

அனைவரும் வருக அம்பிகையின்
அருளைப் பெறுக.
அமுத சுரபியில் அமுதமுண்டு மகிழ்க.

அடியார்கள் தங்குவதற்கு அன்ன பூரணி இறைபயணிகள்
இல்லம் அமைக்கப்பட்டுள்ளது
என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.
ஓம் சக்தி!

பிரதான சாலை,
நயினாதீவு - 02,
தொ.பே. 021 3213 575

நிர்வாகம்
ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி
அன்னதான சபை (சி/6031)(45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணமழை குறித்து ஆராய

## அமெரிக்கா, பிரிட்டன் ஆய்வாளர்கள் வருகை

கொழும்பு,ஜன.26

இலங்கையில் பெய்து வரும் வர்ண மழை குறித்து ஆராய்வதற்கு அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆராய்ச்சியாளர்கள் அடுத்தவாரம் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

இந்த ஆராய்ச்சியாளர்கள் வர்ண மழை தொடர்பாக தமது அறிக்கையைச் சமர்ப்பிப்பர் என்று இலங்கை மருத்துவ ஆராய்ச்சிக் கழகப் பணிப்பாளர் அனில் சமரநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை ஹவாய் மற்றும் பக்கிங்காம் செயார் பல்கலைக்கழகத்தால் வர்ண மழை தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வின் முடிவுகள் இதுவரை கிடைக்கவில்லை என்று அவர் கூறினார்.

எனினும் பொலநறுவையில் பெய்த வர்ண மழையில் நுண்ணங்கிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பொருள்களின் விலை மேலும் உயர்வடையும்

## லக்ஸ்மன் கிரியெல்ல எச்சரிக்கை



கொழும்பு,ஜன.26

இந்த ஆண்டு பொருள்களின் விலைகள் மேலும் உயர்வடையும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் 15 முதல் 25 வீதம் வரையில் உயர்வடையும். மக்களிடம் வரி அறவீடு செய்வதைத் தவிர வேறு எந்தவொரு வருமான வழியும் அரசுக்கு இல்லை.

ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், இறக்குமதிச் செலவுகள் உயர்வடைந்துள்ளன.

இளைஞர்கள் தொழில் வாய்ப்பு இன்றி அல்லலுறுகின்றனர். அதன் காரணமாகவே உயிரைப் பணயம் வைத்து ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாக படகு மூலம் செல்கின்றனர்.

இந்த ஆண்டு இறுதியில் நாடு அதிக பொருளாதார நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும் என்பதை அரசு தெரிந்து கொண்டுள்ளது.

தொழில் வாய்ப்பின்மை, வாழ்க்கைச் செலவு மற்றும் சட்டம், ஒழுங்கு சீர்குலைவு போன்ற காரணங்களுக்கு அரசிடம் பதில் இல்லை- என்றார். (ச)

## பொதுவான பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வு வழங்கவில்லை

### பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜன.26


கல்வி தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்த பொதுவான பிரச்சினைகளுக்கு அதிகாரிகள் இதுவரை தீர்வு வழங்கவில்லை.

இவ்வாறு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.

பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்காக சகல தரப்பையும் இணைத்துக்கொண்டு விரிவான நடவடிக்கை ஒன்றைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது என்று சம்மேளனத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளை அடுத்து, சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட சில பிரச்சினைகளுக்குக் குறிப்பிடத்தக்க அளவிலான தீர்வுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று அவர் கூறினார்.

எனினும், கல்வி தொடர்பாகச் சம்மேளனத்தால் முன்வைக்கப்பட்ட பொதுவான பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு வழங்கப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார். (ச)



சித்தார்த்த குமாரரின் பிறப்பு முதல் பரிநிர்வாணம் அடைதல் வரையான விசேட சம்பவங்களை உள்ளடக்கிய 'ஸ்ரீ சித்தார்த்த கௌதம' திரைப்படம் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. அந்தத் திரைப்படத்தின் முதல் காட்சியைப் பார்ப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டார். அவருடன் அமைச்சர்களான கெஹெலிய ரம்புக்வெல, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## இலங்கையில் மெரோபெனம் மருந்துக்குத் தடை

கொழும்பு,ஜன.26

இலங்கையில் 'மெரோபெனம்' என்ற திரவ மருந்து வகையின் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மாரவில பொது வைத்தியசாலையில் மருந்துக் குப்பி ஒன்றினுள் இருந்து கண்ணாடித் துண்டு கண்டெடுக்கப்பட்டது.

மெரோபெனம் திரவ மருந்து குப்பியிலிருந்தே கண்ணாடித் துண்டு கண்டெடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மெரோபெனம் மருந்துப் பாவனையைச் சுகாதார அமைச்சு முற்றாகத் தடை செய்துள்ளது. (ச)

## சர்வதேச பாதுகாப்பு மாநாடு செப்ரெம்பர் 3 இல் ஆரம்பம்

கொழும்பு,ஜன.26

சர்வதேச பாதுகாப்பு மாநாடு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி இலங்கையில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு கொழும்பு, கலதாரி ஹோட்டலில் மூன்று நாள்கள் நடைபெறும் என்று இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் 64 நாடுகள் பங்கேற்கவுள்ளன. போர் இடம்பெற்ற காலத்தில் இலங்கை எதிர்நோக்கிய சவால்கள் மற்றும் பிராந்தியத்தின் ஸ்திர நிலைமை போன்றன குறித்து இந்த மாநாட்டில் கவனம் செலுத்தப்பட உள்ளது 'என்று அவர் கூறினார்.

> இலங்கை எதிர் நோக்கிய சவால்கள் மற்றும் பிராந்தியத்தின் ஸ்திர நிலைமை போன்றன குறித்து இந்த மாநாட்டில் கவனம் செலுத்தப்பட உள்ளது

இலங்கைப் படையினரால் வழங்கப்படும் இராணுவப் பயிற்சிகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# மன்னிப்பு வழங்காத பெண்ணை மன்னித்தார் ரிஸானாவின் தாய்

## ரஞ்சன் ராமநாயக்க எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஜன.26

ரிசான்ா நபீக்குக்கு மன்னிப்பு வழங்காத சவூதி அரேபியத் தாயை தாங்கள் மன்னிப்பதாக ரிசானாவின் பெற்றோர் தன்னிடம் தெரிவித்தனர் என்று ஐ.தே.க. எம்.பி. ரஞ்சன் ராமநாயக்க சபையில் தெரிவித்தார்.

சபை ஒத்திவைப்பு வேளை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குழந்தைக்கு 2 வயதாகும் வரை தாயொருவர் தாய்ப்பால் கொடுக்கவேண்டும் என்று சவூதிச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், அந்தக் கருணையற்ற தாய் நான்கு மாதக்குழந்தையை 15 வயதான ரிசானாவிடம் கொடுத்துள்ளார். அப்படியானால் சட்டத்தை மீறிய அந்தத் தாய்க்கு எதிராக நடவடிக்கை எடுக்காதது ஏன்?

சவூதி அரேபிய நிதி வேண்டாம் என ரிசானாவின் தாய் தெரிவித்துள்ளார்.

ஆனால், அரசோ தூதரைத் திருப்பி அனுப்புவதாகத் தெரிவித்துப் போலிப் பிரசாரம் செய்கிறது.

ரிசானா நபீக்கின் பெற்றோரை நான் கடந்த புதன்கிழமை சந்தித்தேன்.

ரிசானாவுக்கு மன்னிப்பு வழங்காத அந்த சவூதி ஆசிரியைக்கு அல்லாவின் நிமித்தம் தாங்கள் மன்னித்துவிட்டதாக அவர்கள் பெருந்தன்மையுடன் தெரிவித்தனர் - என்றார். (ச-சி)

## சிங்கள – முஸ்லிம் உறவை குலைக்க அரசு இடமளிக்காது

### அச்சம் கொள்ள வேண்டாம் என்கிறார் யாப்பா

கொழும்பு,ஜன.26

நாட்டில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நீண்ட காலமாக நிலவி வரும் நல்லுறவை சீர்குலைக்க அரசு ஒருபோதும் இடமளிக்காது.

இவ்வாறு சுற்றாடல் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் சிங்கள -முஸ்லிம் பிரச்சினை ஏற்பட அரசு ஒரு போதுமே இடமளிக்காது. அதனால் ஆங்காங்கே இடம்பெறும் சிறு சிறு சம்பவங்கள் குறித்து முஸ்லிம்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

ஜெனிவா மனித உரிமை சபை மாநாட்டில் முஸ்லிம் நாடுகள் இலங்கைக்கு அளித்து வரும் உதவி, ஒத்துழைப்பைத் தடுக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அவ்வாறான சம்பவங்கள் குளியாப்பிட்டி பிரதேசத்தில் இனிமேல் இடம்பெற ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது .

முஸ்லிம் மக்கள் பெரும்பான்மை இன மக்களுடன் நீண்ட காலமாக சினேகபூர்வமாக வாழ்ந்து வருகின்றனர்.

அவர்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்துவதற்கு வெளிநாட்டு சக்திகள் முயற்சி செய்கின்றன,

ஹலால் சான்றிதழ் விடயத்தில் அரசு தெளிவான நிலைப்பாட்டில் உள்ளது. இந்தச் சான்றிதழைப் பெற்றுள்ள உற்பத்தியாளர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தமது உற்பத்திகளை பிரச்சினைகள் இன்றி ஏற்றுமதி செய்து வருகின்றனர். அதன் மூலம் அதிகளவு அந்நிய செலாவணி எமக்குக் கிடைத்துள்ளது.

ஜெனிவா மனித உரிமை சபை பேரவை மாநாட்டின் போது கடந்த வருடம் முஸ்லிம் நாடுகள் உதவிகளை வழங்கின. அதனை நாம் மறக்கவில்லை. அவ்வாறான நிலையில் ஜெனிவாவில் முஸ்லிம் நாடுகள் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதைத் தடுப்பதற்காகவே உள்நாட்டில் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.



எனவே சிங்கள மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் இடையில் நல்லுறவை சீர்குலைக்க அரசு ஒரு போதும் இடமளிக்காது.- என்றார். (ச)

## விபத்துகளை குறைப்பதற்கு மீண்டும் வேகக் கட்டுப்பாடு

கொழும்பு,ஜன.26

விபத்துக்களை குறைக்கும் வகையில் மீண்டும் வேகக்கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

கடந்த வருடம் நாடுமுழுவதும் 42,088 விபத்துகள் இடம்பெற்றுள்ளதோடு, அதில் 2425 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

> கடந்த வருடம் நாடு முழுவதும் 42,088 விபத்துகள் இடம் பெற்றுள்ளதோடு, அதில் 2425 பேர் உயிரிழந்துள்ளனர்

வேகக்கட்டுப்பாடு தொடர்பிலான விசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி வெளியிட்ப்பட்டது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

வீதி விபத்துகளை கட்டுப்படுத்த வேகக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. அது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆய்வு நடத்தியுள்ளது. ஒவ்வொரு வீதியின் தரமும் கவனிக்கப்பட்டது. அதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்டம்

யாழ்.சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின் 52 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் தலைவர் செ.பேரின்பநாதன் தலைமையில் 27.01.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவ சிகிச்சை மண்டபத்தில் நடைபெறும்.சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

யாழ்ப்பாணம். (28667) (6.7.4) சி.விக்னேஸ்வரன் செயலாளர்.

## உடன் தேவை

எமது நிறுவனத்துக்கு உழவு இயந்திர சாரதி தேவைப் படுகின்றார். பின்வரும் ஆவணங்களுடன் 28.01.2013 திங்கட்கிழமை கீழ்வரும் முகவரிக்கு சமுகமளிக்கவும்.

* தேசிய அடையாள அட்டை
* சாரதி அனுமதிப்பத்திரம்
* குடும்ப பங்கீட்டு அட்டை
* அனுபவச் சான்றிதழ்

கிளீன் வெல் (பிறைவெட்) லிமிட்டெட்,
கரந்தன் வீதி, ஊரெழு.
தொ.பேசி:- 021 7429695
(C/6022) (2.6.7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 06.03.1935

விண்ணில் 28.01.2012

"சீவியத்தில் உங்களை நேசித்தோம் மரணத்திலும் மறவோம்"

**யேக்கப் சூசைதாஸ்**
(ஓய்வுபெற்ற அதிபர்)

ஆண்டொன்று மறைந்தாலும் அப்பா
உங்கள் நினைவு மறையவில்லையே

நன்றித் திருப்பலி 28.01.2013 திங்கட்கிழமை ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் மாலை 5.15 மணிக்கு நடைபெறும்.

ஆறாத்துயரில் கலங்கி நிற்கும்
-குடும்பத்தினர்.

ஏழாலை கிழக்கு, ஏழாலை.
தொ.இல.021 205 9434

## Singapore இல் வேலை வாய்ப்புடன் கூடிய Hotel Management பயிற்சி

**Spot Admission**

ஒரே வேலை நாளில் Offer Letter தரப்படும்.
28 நாட்களில் Student Pass Visa கிடைக்கும்.

Certificate Levelக்கு - ஒரு வருட வீசா.
Diploma Levelக்கு - 1 1/4 வருட வீசா.
HND Levalக்கு - 2 வருட வீசா.

HND Level முடித்தவர்களுக்கு Skill Pass உடன் நிரந்தர வேலை வாய்ப்பு செய்யும் வசதி.
Skill Pass கிடைத்த பின்பு PR கிடைக்கும் வாய்ப்பு.

**Application Closing Date :- 31/01/2013**


**BRISTOL BUSINESS SCHOOL**
5001 Beach Road
#04-03 Golden Mile Complex
Singapore 199588

Regional Manager
No :01, 2nd Lane,
Power House Road,
Jaffna.
T.P - 0212219787

தொடர்புகளுக்கு :- 0777751382 / 0773448706 / 0772521070
(C/5629) (2.6)

## 31ஆவது நாள் நினைவுதினம்

அகவை அறுபது தாண்டினும் பண்பு
என்னவோ பத்துத்தான்
வெட்டெனப் பேசி பட்டெனச் சொல்லினும்
உள்ளொன்று வைத்து புறமொன்று
பேச மறந்தீரே
ஆலயம் தான் சென்று அரன்தனை
பலர்தொழுதெழ அன்பே எல்லாம்
என்று அரன்மனையாய் வாழ்ந்தீரே
அவனியிலே நாம் தவிக்க
அனலிடையே சென்றதேனோ?.......



தோற்றம் 17.10.1950

மறைவு 27.12.2012

அமரர் **வேலுப்பிள்ளை மகாலிங்கம்**

இன்று 26.01.2013 அன்னாரின் இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெறும் மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம்,சாவகச்சேரி. (சி/6021)(5.6.7)

குடும்பத்தினர்
077 353 1689

## தேவை

பில் கிளாக்,சேல்ஸ் மன்,வீட்டுப்பணிப்பெண் (பெண்கள்)தேவை.
தொடர்பு:0771746101 (28677) (6.7.4)

## Car for Sale

Toyota Corolla, AE III Doctor owned, 1998, brand new, auto, petrol,christal power windows& shutters.
Best offer: 0773583677 (5.6.7) (28731)

## TV கள் மலிவு விற்பனை

மிக மிக மலிவு விலையில் SONY Wega Flat TV கள் 21"-13000/=, 29"-16000/= ,பைனியர் அம்பிளிபயர், Box வகைகள் ,DVD என்பன
தொடர்பு:0770440570 (அப்பளம்)
சோனி ரேடற் சென்ரர் (கொமசல் வங்கி எதிரில்)
56, K.K.S வீதி, சுன்னாகம்.
(28388) (2.6.7)

## CAR விற்பனைக்கு

17-XXXX இலக்கமுடைய MAZDA (JAPAN) கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு:0771751393, 0750394828.
(26706) (6.7.4)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் கிழக்கில் உள்ள மூத்ததம்பி வீதியில் (பிரதான வீதியிலிருந்து 300 யார் தூரத்தில்)சகல வசதிகளும் கொண்ட 3 பரப்பு விஸ்தீரணமுள்ள வீடு வளவு விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 396 0224, 075 039 5884. (28548) (6.7.4)

## காணிவிற்பனைக்கு

உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு அருகில் (பிரதான வீதியிலிருந்து 300m தூரத்தில்) ஆறு பரப்பு விஸ்தீணரம் கொண்ட கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 396 0224,075 0395884.
(26549) (6.7.4)

## வீடு வாடகைக்குண்டு

கச்சேரி, நல்லூர் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
N.G.O.விரும்பத்தக்கது.
தொடர்பு:0774705540,0776621654.
(28511) (6.7.4)

## நாஹா மருத்துவ நிலையம்

எலும்புகளை அதிகளவு பாதிக்கும் வாதம், தீராத ஆஸ்மா, புரையோடும் புண்கள், மாதவிடாய் தடைப்படுவது உண்டாக்கும் சிக்கல், குழந்தையின்மைக்கான அதி அற்புத மருந்தியல்
கிழமை நாள்:- 3 Pm - 7 pm - ரவி, ஞாயிறு 8.30 am -2 pm
T.P. 0773212740
வங்கி முன்லேன், சந்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெயபதி வீடு), மாவிட்டபுரம்.
(28723) (6.2.7)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோயில் வீதி ஒழுங்கையில் பொஸ்கோ பாடசாலை அருகில் 2 ½ பரப்பு மற்றும் 3 பரப்பு வீட்டுடனான காணிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0774064773 (28719) (6.2.7)

## மணமகள் தேவை

*86 இல் பிறந்த, 4இல் செவ்வாய், 73 பாவ முடைய, இஞ்சினியர் மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை.

*82 இல் பிறந்த, 8 இல் செவ்வாய், 18¼ பாவ முடைய, M.Sc இஞ்சினியர் சிங்கப்பூரில் பணிபுரிகின்றார். இவருக்கு இஞ்சினியர், M.Sc படித்த மணமகள் தேவை.

*79 இல் பிறந்த, செவ்வாய் பாவமில்லாமல், 55¾ பாவமுடைய, M.Sc இஞ்சினியர்லண்டனில் பணிபுரிகின்றார். இவருக்கு இஞ்சினியர் M.Sc மண மகள் உள்நாட்டிலோ லண்டனிலோ தேவை.

தொடர்பு:கமலக்கண்ணன் திருமணசேவை
இல.345/3 ,கோயில் வீதி,நல்லூர்.
T.P:0776070862.
(28729) (6.7.4)

## வளவாளர் தேவை

மு/ வித்தியானந்தாக் கல்லூரியில் எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள ஆங்கில மொழி விருத்திக் கற்கை நெறிக்கு வளவாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.
ஆங்கிலப் புலமையும் கற்பித்தல் அனுபவமும் கொண்டவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னராகத் தமது சுயவிவரம் அடங்கிய விண்ணப்பத்தினை செயலாளர், ஆங்கில மொழிவிருத்தி மன்றம், மு/வித்தியானந்தாக் கல்லூரி, முள்ளியவளை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
மேலதிக விபரங்களுக்கு: 024 222 1442
(சி/6027) (6.2.7)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## வேலைவாய்ப்பு

காப்புறுதியின் முன்னோடியாகிய இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் தனது 50 ஆவது ஆண்டு நிறைவில் துடிப்பும் ஆர்வமும் உள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து காப்புறுதி ஆலோசகருக்கான விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

* நீங்கள் விற்பனைத் துறையில் ஆர்வமுள்ளவரா?
* பகுதி நேர வேலைவாய்ப்பினைத்தேடி நிற்பவரா?
* துடிப்பும் ஆர்வமும் உள்ளவரா?
* 18 வயதைக் கடந்தவரா?
* குறுகிய காலத்திலேயே அதிக வருவாயை உழைப்பதில் ஆர்வமுள்ளவரா?
* ஒரு குழுவுடன் இணைந்து செயற்படுவதில் ஆர்வமுள்ளவரா?
* சிறந்த தொடர்பாடல் திறன் உடையவரா?
* ஓய்வூதியரா?

இன்றே காப்புறுதியின் முன்னோடியும் அரச நிறுவனமுமான எம்முடன் இணையுங்கள்

தகைமை
G.C.E. O/L 6 பாடங்களில் சித்தி கணிதம், தமிழ் அடங்கலாக

நீங்கள் எம்முடன் இணைந்தால்
* அரச காப்புறுதியில் இணைவதன் மூலம் காப்புறுதி உலகில் ஓர் அங்கீகாரம்
* வெளி நாட்டுச் சுற்றுலா
* ஆரோக்கியமான போட்டிகளும் அதற்கேற்ப பரிசில்களும்
* இலங்கையின் மாபெரும் நட்சத்திர விடுதிகளில் பயிற்சிகள் மற்றும் விருந்துபசாரங்கள்
* வாகன கடனுதவி
* போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு வருடாந்த கௌரவிப்புகள்
* தகைமை காலத்தில் சிறப்பாக செயலாற்றியவர்களுக்கு BANK ASSURANCE, சந்தைப்படுத்தல் அதிகாரி போன்ற நிரந்தர வேலை வாய்ப்பு மற்றும் EPF, ETF, வைத்தியசாலைக் கொடுப்பனவுகள்.

காப்புறுதியில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு விசேட மேலதிக சலுகைகள்

இவற்றில் ஆர்வமுள்ளவர்கள்தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 15.2.2013 இற்கு முன்னர் கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விற்பனை முகாமையாளர்
இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்,
இல.571, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (28554)(6.7.11)

## 8ஆம் ஆண்டு நினைவுகளில்

தோற்றம் 22 * 11 * 1974

மறைவு 25 * 01 * 2005



அமரர்
**செல்லையா ரஜனிகாந்**
[சுரேன்/சங்கமன்]

குடும்பத்திற்கு ஓர் ஒளிவிளக்காய்
எல்லோரும் வியக்கும் நல்நண்பனாய்
உள்ளத்தால், செயலால் உயர்ந்தவனே
இனி உன் இடத்தை நிரப்ப யார் உளர்?

4/2,அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். [28550][5.6.7]

குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14.03.1948

மறைவு 01.02.2011



அமரர்
**தெய்வேந்திரம் பரிமளம்**

எங்கள் அன்புத் தெய்வமே! எங்களின்
வாழ்விற்கு வழி காட்டியாய் துணை நின்றாய்
சிறப்புடன் வாழ வைத்தாய் - உன் மலர்
முகம் காணவில்லையம்மா - கண்கள்
உன்னைத் தேடுகின்றது- உன்னை இனி
எப்போது காண்பதம்மா!

மதவடி, அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

நீங்கா நினைவுடன்
கணவர், பிள்ளைகள்
(சஞ்சீவன், சசிகுமார், துஷ்யந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மட்டக்களப்பு பிரதேச செயலகப் பிரிவில்**

# எல்லை பிரிப்புச் சர்ச்சை நீடிப்பு; இணக்கப்பாடு இன்றி கூட்டம் முடிவு

மட்டக்களப்பு,ஜன.26

மட்டக்களப்பில் பிரதேச செயலக நிர்வாக எல்லைகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள சர்ச்சைக்கு தீர்வு காணும் முகமாக நடைபெற்ற கூட்டத்தில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

தமிழர்களை பெரும்பான்மையாகக் கொண்ட வாகரை மற்றும் கிரான் பிரதேச நிர்வாகங்களிலுள்ள சில கிராமங்களை கோறளை மத்தி மற்றும் ஓட்டமாவடி பிரதேச நிர்வாகத்துடன் இணைக்க பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அமைச்சு உத்தேசித்துள்ளது.

இந்தப் பிரேரணையை முஸ்லிம்கள் வரவேற்றுள்ள நிலையில், தமிழர்கள் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

அதன் காரணமாக கடந்த வாரம் கடையடைப்பும், முஸ்லிம் பகுதிகளில் ஆதரவு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பிரச்சினைக்குத் தீர்வுக் காணும் வகையில் அமைச்சர் ஜோன் செனவிரத்னவால் கூட்டப்பட்ட கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இருதரப்பினரும் தமது வாதங்களை முன்வைத்தாலும் இணக்கப்பாடு ஏற்படாததால் முடிவு எதுவும் எட்டப்படாமலேயே கூட்டம் முடிவடைந்தது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார். (ச)

## ஆற்றுக்குள் விழுந்தது வாகனம்; பயணித்தோர் காப்பாற்றப்பட்டனர்

**வெல்லாவெளி கறுப்புப் பாலத்தில் சம்பவம்**

மட்டக்களப்பு,ஜன.26

மட்டக்களப்பு,வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கறுப்புப்பாலத்தின் கீழாக ஓடுகின்ற ஆற்றில் வாகனமொன்று வீழ்ந்துள்ளது. எனினும் இந்த வாகனத்தில் பயணம் செய்த 20 பேரும் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

அம்பாறை, மத்திய முகாம் பிரதேசத்திலிருந்து திருமண வீட்டுக்கு அனுராதபுரத்துக்குச் சென்றுகொண்டிருந்தவர்களின் வாகனமே நேற்று வெள்ளிக்கிழமை ஆற்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

வாகனத்தில் பயணித்த 20 பேரும் உயிர் ஆபத்தின்றி வெல்லாவெளிப் பொலிஸாரின் உதவியுடன் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

எனினும் ஆற்றில் விழுந்த வாகனத்தை மீட்க முடியவில்லை என்று பொலிஸார் கூறினர்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணையை வெல்லாவெளிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## காத்தான்குடியில் திண்மக்கழிவை பசளைகளாக மாற்றும் திட்டம்



காத்தான்குடி,ஜன.26

திண்மக் கழிவுகளை பசளைகளாக மாற்றும் திட்டத்தை காத்தான்குடி நகரசபை ஐக்கிய நாடுகள் திட்ட நடைமுறைப்படுத்தல் ஸ்தாபனத்துடன் இணைந்து மேற்கொள்ளவுள்ளது.

இந்தத் திட்டம் தினமும் சேரும் திண்மக் கழிவுகளை அகற்றுவது தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும்.

இந்தத் திட்டத்துக்கென 104 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி நகர சபைத் தலைவர் எஸ்.எச்.எம். அஸ்வரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட காணியை யுனெஸ்கோ நிறுவனத்தின் மட்டக்களப்பு, அம்பாறை ஒருங்கிணைப்பாளர் திருமதி சீலியா, காத்தான்குடி நகர சபைத் தலைவர் எஸ்.எச்.எம். அஸ்பர் உட்பட பல அதிகாரிகள் சென்று பார்வையிட்டனர்.

# புகையிலைப் பாவனையில் மட்டக்களப்பு முதலிடம்

**தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறார் அமைச்சர் டலஸ் அழகப் பெரும**

எருவில்,ஜன.26

புகையிலைப் பாவனையில் மட்டக்களப்பு மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. மதுபான பாவனையில் மூன்றாம் இடத்தில் உள்ளது. எனவே அவற்றைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு இளைஞர் விவகார தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் டலஸ் அழகப் பெரும வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை வரலாற்றில் கடந்த கால அரசியலில் பல்வேறு பிழைகள் ஏற்பட்டுள்ளன.

இந்த நாட்டில் இரண்டு மொழி பேசும் மக்கள் இருக்கின்றனர்.

நான் இளைஞர் விவகார அமைச்சராக இருக்கின்றேன். ஆனால் தமிழ்மொழி பேசத் தெரியாத வகையில் உள்ளேன். அதற்காக நான் வெட்கப்படுகின்றேன். நாட்டிலிருந்த முன்னைய அரசியல்வாதிகள் இரு மொழிகள் பயன்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுக்காமையே இந்த நிலைக்குக் காரணமாகும்.

பாடசாலை ரீதியில் உயர்தரம், சாதாரண தரம், புலமைப் பரிசில் ஆகிய பரீட்சைகளில் சித்தியடையும் மாணவர்கள் தொடர்பிலேயே அதிக கவனம் செலுத்தப்படுகிறது. ஏனையவர்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை.

சித்தியடையாதவர்களை சமூகத்தில் இருந்து ஒதுக்கும் நடவடிக்கைகளையே மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் அவர்களுக்குள் பல்வேறு திறமைகள் உள்ளன.

பரீட்சை முடிவை மட்டும் வைத்துக் கொண்டு இளைஞர்களின் வாழ்வை தீர்மானிக்க முடியாது. ஆதனை வைத்து அவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்க முடியாது.

பல்கலைக்கழகம் மட்டும் பட்டம் பெறும் இடமல்ல. இன்று பல தொழில்சார் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

அண்மையில் உலக சுகாதார அமைப்பில் உள்ள நிறுவகம் ஒன்று நடத்திய ஆய்வில் பல சாதனைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அந்த வெற்றிகள் எமது சமூகத்துக்கு உகந்தது அல்ல.

புகையிலை பாவிப் போரில் மட்டக்களப்பு மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. மது பாவனையில் மட்டக்களப்பு மாவட்டம் மூன்றாவது இடத்தில் உள்ளது. முதலாவது இடத்தில் அநுராதபுரமும் இரண்டாவது இடத்தில் காலியும் உள்ளன.

எனவே அவற்றைத் தடுக்க மட்டக்களப்பில் உள்ள அனைத்துத் தரப்பினரும் அக்கறை கொள்ள வேண்டும்.-என்றார். (ச-31)

## யானைத் தாக்குதலால் சோளச் செய்கை பாதிப்பு

எருவில்,ஜன.26

படுவான்கரைப்பகுதியில் செய்கை பண்ணப்பட்ட சோளத்தை காட்டுயானைகள் அழித்து வருகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

தற்போது சோழன் அறுவடை காலமாகையால் இறுதி விளைச்சலை எதிர்பார்த்திருந்த விவசாயிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று. விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ள னர். (ச-31)




மட்டக்களப்பில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் நிவாரணம் வழங்குகிறார்.

## மீன்களை திருடியவருக்கு விளக்கமறியல்

கல்முனை,ஜன.26

மீன்களைத் திருடியதாகக் கூறப்படும் ஒருவரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்ற நீதிவான் எம். ஏ.றிஸ்வி உத்தரவிட்டார்.

சந்தேகநபரை கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அம்பாறை, அன்னமலை பிரதேசத்தில் விற்பனைக்காக வைத்திருந்த மீன்களைத் திருடினார் என்ற சந்தேகத்தில் குறித்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

**மஸ்கெலியாவில்**

## திடீர் பரிசோதனையால் வர்த்தகர்கள் மாட்டினர்

மஸ்கெலியா,ஜன.26

நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைப் பிரிவினர் மஸ்கெலியா, நல்லதண்ணி நகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நுவரெலியா மாவட்ட செயலரின் ஆலோசனைக்கு ஏற்ப திடீர் பரிசோதனை இடம்பெற்றது என்று நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் நுவரெலியா மாவட்ட இணைப்பாளர் ஐ. விமலஸ்ரீ தெரிவித்தார்.

இந்தத் திடீர் பரிசோதனையின் போது பொருள்களின் விலைகள் காட்சிப்படுத்தப்படாமை, நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலையில் பொருள்களை விற்பனை செய்தமை, காலாவதியான பொருள்களை விற்பனை செய்ய முற்பட்டமை, மனித பாவனைக்கு உதவாத பொருள்களை விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பல வர்த்தகர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு இனம் காணப்பட்ட வர்த்தகர்களுக்கு எதிராக ஹற்றன் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

## வெள்ளம் தேங்குவதால் டெங்கு பரவும் அபாயம்

**அக்கரைப்பற்று மக்கள் விசனம்**

அக்கரைப்பற்று,ஜன.26

அக்கரைப்பற்று பிரதான வீதி வடிகால்களுக்குள் தேங்கி நிற்கும் கழிவுநீரால் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று மக்கள் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று மாநகரசபைக்குட்பட்ட பிரதான வீதியின் அருகே அமைந்துள்ள வடிகால்களுக்குள் பல நாள்களாக நீர் தேங்கி நிற்கிறது.

வடிகால்கள் பல மாதங்களாக துப்புரவு செய்யப்படாததால் வெள்ளநீர் வடிந்தோடாமல் தேங்கி நிற்கிறது. அதனால் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகி வருகிறது என்று மக்கள் கூறுகின்றனர்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் மீண்டும் மழை ஆரம்பித்துள்ளதால் டெங்கு நுளம்பின் உற்பத்தி அதிகரித்து வருகிறது என்று மக்கள் கூறுகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் வடிகால்களை துப்புரவு செய்து நோய்த் தாக்கங்களில் இருந்து பாதுகாக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தாயின் உடல் நிலை சீராகும். சகோதரவகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிடைக்கும்.

**இடபம்:** வியாபாரத்தில் இருந்துவந்த சிக்கலுக்கு முடிவு கட்டுவீர்கள். நீண்டநாள் ஆசைகளை பூர்த்தி செய்துகொள்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளியூர் பயணங்களால் சந்தோஷமடைவீர்கள். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும்.

**மிதுனம்:** எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலை வந்து நீங்கும். உறுதிமொழி யாருக்கும் தர வேண்டாம். தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். யாரையும் பரிந்துரை செய்யாதீர்கள். உத்தியோகத்தில் மற்றவர்களை விமர்சித்துப் பேச வேண்டாம்.

**கடகம்:** குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் ஏற்படும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். தாழ்வுமனப் பான்மை வந்து நீங்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம்.

**சிங்கம்:** மனநிறைவுடன் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். உடன் பிறந்தவர்களின் ஆதரவு கிட்டும். முன்கோபம் விலகும். அரச பணிகள் சுமுகமாக முடியும். வேற்று மதத்தினரால் ஆதரவு கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் நீங்கும்.

**கன்னி:** வியாபாரத்தில் அதிரடி முடிவுகளை எடுத்து போட்டியாளர்களை அதிரச் செய்வீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். கடன் பிரச்சினைகளுக்கு மாற்றுவழி காண்பீர்கள். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்கள்.

## நாளை

தை -14 ஞாயிற்றுக்கிழமை 27.01.2013
திதி: பூரணை மு.ப 10.58 வரை
(தைப்பூசம்)
நட்சத்திரம்: பூசம் பி.ப. 05.18 வரை
சுபநேரம்: 09.36- 11.06 வரை
ராகுகாலம்: 05.06- 06.36 வரை

**துலாம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். சகோதர, சகோதரிகளால் உதவி கிடைக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப் படுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** சின்ன சின்ன வேலைகளையும் அலைந்து முடிக்க வேண்டி வரும். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்களின் அணுகு முறையை மாற்றுங்கள். வியாபாரத்தில் லாபம் மந்தமாக இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.

**தனுசு:** தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பணப்பற்றாக் குறை நீங்கும். உடன் பிறந்தவர்களின் ஆதரவு கிட்டும். உத்தியோ கத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் மிகுதிகளை வசூலிப்பீர்கள்.

**மகரம்:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசுவீர்கள். உறவினர்களால் மனநிம்மதி கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வியாபாரத்தில் பரபரப்பான சூழல் ஏற்படும். வேலையாள்களின் ஆதரவு கிட்டும்.

**கும்பம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**மீனம்:** நட்பு வட்டாரம் விரிவடையும். உறவினர்களின் வருகையுண்டு. கனவுத் தொல்லை, தூக்கமின்மை விலகும். பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2 | | | 9 | 1 |
| 9 | 2 | | 1 | 7 | | | | 6 |
| | | 6 | | | 3 | 2 | | |
| 3 | 4 | | 9 | 1 | | 5 | | |
| | | 7 | 5 | | 2 | 1 | | |
| | | 1 | | 6 | 8 | | 2 | 3 |
| | | 5 | 2 | | | 6 | | |
| 2 | | | | 5 | 1 | | 8 | 4 |
| 1 | 7 | | | 8 | | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 1 | 4 | 7 | 6 | 9 | 3 | 5 |
| 9 | 4 | 3 | 8 | 1 | 5 | 2 | 7 | 6 |
| 7 | 6 | 5 | 3 | 2 | 9 | 4 | 1 | 8 |
| 1 | 7 | 4 | 9 | 5 | 2 | 6 | 8 | 3 |
| 6 | 9 | 2 | 7 | 3 | 8 | 1 | 5 | 4 |
| 3 | 5 | 8 | 1 | 6 | 4 | 7 | 2 | 9 |
| 4 | 1 | 7 | 6 | 8 | 3 | 5 | 9 | 2 |
| 2 | 8 | 9 | 5 | 4 | 7 | 3 | 6 | 1 |
| 5 | 3 | 6 | 2 | 9 | 1 | 8 | 4 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## காணிவிற்பனைக்கு

உடுவில் டச்றோட்டில்
அமைந்துள்ள 14 பரப்புக் காணியும்
2 கிணறும் வான் பயிர்களும்
விற்பனைக்கு உள்ளன.
தொடர்புகளுக்கு:077 6736888.
(26570)(6.7.4)

## கடை வாடகைக்கு

A9வீதிக்கு அருகில் கைதடி
நுணாவில் பகுதியில் கடை
வாடகைக்கு உண்டு.
தொடர்பு:0772032709.
(28580) (6.7.4)

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சி நகரத்திற்கு அண்மையில் A 9 பாதையில் உள்ள கந்தசாமி கோயிலுக்கு 500 மீற்றர் தூரத்தில்எல்லா வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:0776337307,
021-4921344.
(28720) (6.7.4)

## வரலட்சுமி பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்

சகல விதமான மோட்டார் வாகனங்களுக்கும் பிளாஸ்ரிக் உடைவுகள் ஒட்டுதல், ஸ்பிறே பெயின்ரிங் செய்தல், பைவர் மோல்டிங், பிளேற்றிங் மொப்பிங், கண்ணாடி பொலிசிங் செய்தல் என்பன சிறந்த முறையில் சீர்செய்து கொடுக்கப்படும். (நல்லூர் பின் வீதி)
இல.286/2,அரசடி வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:கி.கேதீஸ்வரன் 077351 2591
(28228)(6-6-7)

## வீடு விற்பனைக்கு

டாக்டர் சுப்பிரமணியம்
வீதி, சுன்னாகத்தில் மூன்று
பரப்பு காணிக்குள் இருக்கும்
நல்ல நிலையில் உள்ள
மூன்று அறைகளைக்
கொண்ட வீடும், காணியும்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0726093764,
0771021063
(28639)(6.7.11)

# பணிநிலை வெற்றிடம்

01. வெளிக்கள உத்தியோகத்தர் (Field Officer)
02. உதவியாளர் (வெளிக்கள வேலை)

**நேர்முகத்தேர்வு :**
**28.01.2013 திங்கட்கிழமை**
**மு.ப 09.00 மணி - பி.ப 02.00 மணிவரை**
(சுயவிவரக்கோவையுடன் சமுகமளிக்கவும்)

ANDRA Digital Image
379/167, Kasthuriyar Road, Jaffna.
021 7201264 , 0776622981
(C/6015)(2.6)


# 5 ஆம் ஆண்டு நினைவு



தோற்றம்
25.05.1937

மறைவு
22.01.2008

## அமரர் சின்னையா குணரட்ணம்

(லக்கி கிறீம் ஹவுஸ் உரிமையாளர்)

ஆண்டைந்து சென்றாலும் ஆறாது உங்கள் பிரிவின் துயரம்
தீராது எங்கள் சோகம்!
உங்கள் இழப்பை எண்ணியெண்ணி
இதயம் வரைக்கும் இறங்கிய சோகத்தால்
இன்று எங்கள் விழிகளில்
வழிகின்றதே கண்ணீர்த் துளிகள்

பண்பிலே சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
குணத்தாலே பார் போற்றும் குணவாளனாய்
எல்லோர் நெஞ்சங்களிலும் நிலைத்து நின்றீர்கள்
அப்பாவாய் எமக்கு கிடைத்த பெரும் பொக்கிஷமே
நீங்கள் இல்லை என்பது இன்னமும் தான்
ஏற்க மறுக்கின்றது எம்மிதயம்

வற்றாத உங்கள் நினைவுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"செல்வச் சந்நிதி வாசா"
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(28674) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக்கூட்டத் துடன் கூடிய காலநிலை நிலவும்.

## ஆன்மிக பஜனை வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜன.26

வடமாகாண சின்மயா மிஷனால் நடத்தப்படும் இலவச ஆன்மிக வகுப்புகள் பிரதி சனிக்கிழமை தோறும் நடைபெற்றுவருகிறது.

இந்த வகுப்புகள் பிற்பகல் 3.30மணிக்கு பெரியவர்களுக்கும், பிற்பகல் 4.15 மணிக்கு இளையவர்களுக்கும் நடைபெற்று வருகின்றன.

வடமாகாண சின்மயா மிஷனின் இல.09, செட்டித்தெரு, நல்லூரில் அமைந்துள்ள ஆச்சிரமத்தில் நடைபெறும் இந்த வகுப்புகளை பிரம்மசாரி ஜாக்கிரத் சைத்தன்ய நடத்தி வருகிறார்.

இங்கே பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் மாலை 5 மணிக்கு பஜனை வகுப்புகள் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (3-14)

## பொன் விழா நிகழ்வு நடத்த ஏற்பாடு

குருநகர், ஜன.26

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் ஒக்ரோபர் 14 ஆம் திகதி 50 ஆவது வருடப் பூர்த்தியை முன்னிட்டு பொன்விழா நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக, கழகத்தின் செயலாளர் பெனடிக் ராதா தெரிவித்தார்.

பாடும் மீன் விளையாட்டுக்கழகம் 1963 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி குருநகரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது என்று அவர் மேலும் கூறினார். (3-51)

## வெவ்வேறு துறைகளில் மூவருக்கு விருதுகள்

யாழ்ப்பாணம், ஜன.26

வடமாகாணத்தில் பல்வேறு சமூக மற்றும் கவிதை, எழுத்துத்துறையில் தடம்பதித்த மூவருக்கு நவாலி ஹேமலதா செல்வராஜா சிறுவர் ஞாபகார்த்த நிதியம் பட்டங்களையும் விருதுகளையும் பணப்பரிசில்களையும் வழங்கி கௌரவித்துள்ளது.

பசுமைப்புரட்சியாளர் மானியூர் வை. செகராஜசிங்கத்துக்கு பசுமையின் காவலன் எனும் சிறப்புப் பட்டமும் உயர் விருதும், கவிஞர் குமாரசாமி செல்வக்குமாருக்கு ''கவிக்கோர்'' எனும் சிறப்புப்பட்டமும், விருதும், 25 ஆயிரம் ரூபா பணப்பரிசும், நவாலியூர் செல்லத்துரை மகேந்திரத்துக்கு 'சமூகமணி' எனும் கௌரவ பட்டமும் உயர் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (எ-41)

## வள்ளுவர் குருபூசையை முன்னிட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன.26

திருவள்ளுவர் குருபூசை தினத்தை முன்னிட்டு போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கு இடையே இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

பாலர் பிரிவுக்கான திருக்குறள் மனனப் போட்டி, கடவுள் வாழ்த்து 10குறள்கள், மத்திய பிரிவுக்கான கட்டுரைப் போட்டியில் அன்புடைமை குறளின் 10 பொருள்களும், கீழ்ப் பிரிவுக்கான பேச்சுப் போட்டியில் விருந்துபசாரம் 10 குறள்க்ளில் போட்டிகள் நடத்தப்படும். ஒவ்வொரு போட்டிகளிலும் ஒருவர் மட்டுமே பங்குபெறமுடியும்.

பங்குபெறும் மாணவர்கள் தங்களது விவரங்களை திருமதி மா.அனந்தலட்சுமி, இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர், புதிய செங்குந்தா வீதி, சட்டநாதர் றோட், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 10ஆம்திகதிக்கு முன்னர் அனுப்பவேண்டும்.

போட்டிகள் யாவும் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடைபெறும். (3-13)

## மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி, ஜன,26

சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திருமதி ரி.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசாவும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலய பங்குத்தந்தை அருட்பணி யோசப் பிரான்சிஸ் அடிகள் ஆகியோரும் கலந்துகொள்வர். (3-8)

★ ★ ★

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி எதிர்வரும் பெப்ரவரி 16 ஆம்திகதி சனிக்கிழமை பாடசாலை அதிபர் இராமநாதன் ஈஸ்வரதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முன்னதாக இல்லங்களுக்கிடையே உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், பூப்பந்தாட்டம், எல்லே, தாச்சி, கபடி, சதுரங்கம், கரப்பந்து, வலைப்பந்தாட் டம் என்பன நடைபெறவுள்ளன. (3)

★ ★ ★

தென்மராட்சி, ஜன,26

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய இல்ல மெய்வன்மைப்போட்டிகள் பெப்ரவரி முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சிகல்வி வலயத்தின் ஓய்வுநிலை நிர்வாக அலுவலர் க.சரவணபவன் கலந்துகொள்வார். (3-9)

★ ★ ★

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப்போட்டிகள் பெப்ரவரி இரண்டாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொள்வார். (3-9)

## தைப்பூசத் திருவிழாவை ஒட்டி நயினாதீவுக்கு விசேட போக்குவரத்து

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் வருடாந்த தைப்பூசத் திருவிழா, நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம் பெற்று நண்பகல் 12 மணிக்கு திருமஞ்சத்தில் அம்பாள் வீதியுலா வரும் நிகழ்வும் நடை பெறும்.

தைப்பூச விழாவையொட்டி பெருந்திரளான பக்தர்கள் நயினாதீவுக்கு வருகை தர இருப்பதால் நயினைப்படகு உரிமையாளர் சங்கம் விசேட படகுச்சேவையையும் மேற்கொள்ளவுள்ளது. யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து குறிகாட்டுவானுக்குவிசேட போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (3-7)

யாழ் மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.......!
யாழ் மண்ணில் படிப்பு ( 3 months ) மலேசியாவில் சம்பளத்துடனான தொழில் பயிற்சி எம்மிடம் மட்டுமே......!

MCIS


புதிய பிரிவுகள் ஆரம்பம்
30.01.2013 @ 9.00 am
வரையறுக்கப்பட்ட ஆசனங்கள் உள்ளதால்
பதிவுகளுக்கு முந்துங்கள்

SG academy
SkillsMalaysia INVITE

COURSES
- Hotel Management
- Creative Multimedia
- Computer System

நன்மைகள்
- படிக்கும் போதே ரூபா 32,250/= சம்பளம்
- உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டசான்றிதழ்
- மலேசிய மனிதவள அமைச்சின் சான்றிதழ்
- தங்குமிட வசதி,உணவு,சீருடை வழங்கப்படும்
- மலேசிய விரிவுரையாளர்களின் விரிவுரைகள்

மொத்தக்கட்டணம்
Rs, 210,000/=
மட்டுமே






சான்றிதழ்

தொடர்புகளிற்கு
Mind Vishion No.04, Clock Tower Lane Navalar Road, Jaffna, Srilanka 0212219460
(பொருளியல் கல்லூரி அருகில் Science corner ஒழுங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லத்துரை இராசம்மா

வேலணை தெற்கு, துறையூரைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை இராசம்மா 24.01.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமர் செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சாந்தலிங்கம், கனகலிங்கம், செல்வலிங்கம் மற்றும் சிவலிங்கம், காசிலிங்கம் (பிரான்ஸ்), திருவாசலிங்கம் (கட்டடக்கலைஞர்), சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), இராமலிங்கம் (பிரான்ஸ்), அருந்தவமலர் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை தெற்கு,
துறையூர்.　(c/8033)(6.711)

தகவல்:
செ.திருவாசலிங்கம்

## சிவஞானம் (தியாகு) சற்குணவதி



சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் (தியாகு) சற்குணவதி 24.01.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானத்தின் அன்பு மனைவியும், நாகேஸ்வரி, தனேஸ்வரி, கேதீஸ்வரன், கோடீஸ்வரன், யசோதா, ஜெகதீஸ்வரன், மகேஸ்வரன், நந்தினி ஆகியோரின் அன்புத்தாயாரும், கருணாகரன், சச்சிதானந்தன், கலைச்செல்வி, நிசாந்தினி, செல்வலிங்கம், கலைவாணி, நடேசலிங்கம், மேகலா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (28.01.2013) திங்கட்கிழமை அவரது இலலத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

86/1,பிறவுன் வீதி,
கொக்குவில்கிழக்கு, கொக்குவில்.　(28730) (6.7.4)

தகவல்:
குடும்பத்தினர்.
T.P:0773744600

# மரண அறிவித்தல்



## கந்தையா விநாயகம் (கணேஷ்)

(ஓய்வுபெற்ற வவுனியா நகரசபை இலிகிதர்)

புலோலி தெற்கு, சாரையடியைப் பிறப்பிடமாகவும் வவுனியா புகையிரத நிலைய வீதி, வைரவபுளியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா விநாயகம் 23.01.2013 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வைரவப்புளியங்குளத்தில் உள்ள அவரின் இல்லத்தில் நாளை (27.01.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முகவரி:
புகையிரத நிலைய வீதி,
வைரவ புளியங்குளம், வவுனியா.
தொ.பே. 024 2220 469, 077 6143 416　(27629 (45.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## மாகாண சுகாதார நிறுவனங்களின் பதவி நிலை அலுவலர் சொத்து விவரம் கோரல்

யாழ்ப்பாணம், ஜன.26

மத்திய அரசின் கீழ் மாகாண சுகாதார நிறுவனங்களில் பணிபுரியும் பதவி நிலை அலுவலர்களின் சொத்து விவரங்களை பிரகடனப்படுத்துமாறு மாகாண சுகாதார அமைச்சு கோரியுள்ளமை குறித்து பல்வேறு கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளன.

மாகாண சுகாதார திணைக்கள நிறுவனங்களில் பணியாற்றும் அனைத்து பதவிநிலை அலுவலர்கள் தமது சொத்து விவரங்களைப் பிரகடனப்படுத்தி மாகாண பிரதம செயலருக்கு இரகசிய தபால் மூலம்அனுப்பி வைக்குமாறு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இது குறித்து பல்வேறு கருத்துக்கள் சம்பந்தப்பட்ட பதவிநிலை அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத் திணைக்களங்களில் கடமையாற்றும் ஏனைய திணைக்களங்களுக்கு அல்லாமல் சுகாதார திணைக்கள பதவி நிலை அலுவலர்களிடம் சொத்து விவரம் கோரப்பட்டுள்ளது.

ஏனைய மாகாணங்களில் இல்லாத புதிய நடைமுறை வடக்கு மாகாணத்தில் உருவாக்கியுள்ளது.

மத்திய அரசின் கீழ் பணிபுரியும் சுகாதார திணைக்களபதவி நிலை அலுவலர்களை மாகாண சுகாதார அமைச்சு சொத்து விவரங்கள் கோரியுள்ளமை தொடர்பாகவும் பல்வேறு தரப்பிலும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (ம-9)

## அடிப்படை வசதிகளின்றி குடாரியன் இந்து மயானம்

கொடிகாமம்,ஜன.26

வரணி குடரியன் இந்து மயானம் அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் காணப்படுவதால் இங்கு செல்லும் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்..

மயான வளாகத்தில் பழுதடைந்த நிலையில் காணப்படும் இடத்தைத்தவிர வேறெந்தவொரு வசதியும் இல்லாமல் உள்ளது.

இறுதிச் சடங்குக்கு செல்லும் மக்கள் தங்குவதற்கான மண்டபம், எரியூட்டும் மண்டபம் போன்றவை நீண்டகாலம் இல்லாத நிலையில் பெரும் சிரமம் அடைவதாக மயானத்தை பயன் படுத்துபவர்கள் தெரி விக்கின்றனர்.

இந்த மயானத்தின் தேவைகளை நிறைவேற்றுமாறு நீண்டகாலமாக மக்கள் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுவரை சீரமைக்கப்படவில்லை யெனவும் தெரிவிக்கப் பட்டது.

கமநெகும திட்டத்தில் கீழ் மயான புனரமைப்புக்கு பிரதேச செயலகத் தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அந்தத் திட்டம் கைவிடப் பட்டதால் மயானம் புனரமைக்கப்பட வில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## போதை முறித்தது கையை

தென்மராட்சிஜன.26

மது போதையில் நின்ற மைத்துனரை உரிமையுடன் கண்டித்த அத்தானுக்கு அலவாங்கு கம்பியால் அடித்ததில் கை முறிந்தது.

இந்தச் சம்பவம் புதன்கிழமை கொடிகாமம் பருத்தித் துறை வீதியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சின்னராசா வைத்திலிங்கம் (வயது 55) என்ப வரே காயமடைந்தவராவார். (ம-5)

## கொங்கிறீற் கல் விற்பனைக்கு

கண்டாவளை மண், நாகர்கோயில் மண்
½" சல்லி கலந்து இயந்திரத்தினால்
உற்பத்தி செய்யப்பட்ட தரமான
கொங்கிறீற் கற்கள் குறைந்த விலையில்
விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
0773296407/ 021 5670350
(திங்கள் - சனி 8.30 - 6.00 மணிவரை)　(28736) (6.3)

## சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்



35 ஆண்டுகள் ஆசிரிய சேவையில் எமது பாடசாலையில் 23 ஆண்டுகள் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் சேவையாற்றி இன்று 26.01.2013 இல் ஓய்வுபெறுகின்ற எமது பிரதி அதிபர் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

அருணாசலம் ஜெயக்குமார்
(பிரதி அதிபர், S.L.T.S.-I)
யா/அராலி இந்துக் கல்லூரி

ஆசிரிய சேவை விவரம்

| | |
|---|---|
| நு/நுவரெலியா மெதடிஸ்த கல்லூரி | - 02.06.1977 - 20.01.1980 |
| யா/பலாலி ஆசிரிய கலாசாலை | - 21.01.1980 - 31.12.1980 |
| யா/சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி | - 01.01.1981 - 30.06.1982 |
| யா/பலாலி ஆசிரிய கலாசாலை | - 01.07.1982 - 31.12.1982 |
| நு/நுவரெலியா மெதடிஸ்த கல்லூரி | - 01.01.1983 - 03.09.1984 |
| யா/வண்ணை நாவலர் வித்தியாலயம் | -04.09.1984 - 05.09.1989 |
| யா/அராலி இந்துக் கல்லூரி | - 06.10.1989 - 26.01.2013 |

ஆசிரியர் நலன்புரி கழகம்
(28721) (5.6.7) யா/அராலி இந்துக் கல்லூரி.

## யோகா வகுப்புகள்

நடேஷ்வராலயா நுண்கலைக் கல்லூரியின், இந்திய பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவரும் எல்லா வகையான நோய்களுக்குமான யோகா சிகிச்சை செய்தும் வருகின்ற ஆசிரியரி னால் யோகா வகுப்புகளும், நோய் சிகிச்சைகளும் அளிக்கப்படுகின் றன. ஆண்/ பெண் இருபாலாரும் வயதெல்லை இன்றிக் கற்றுப் பயன் பெறலாம். பதிவுகளுக்கு முந்துங்கள். புதிய பிரிவுகள் தைப்பூசதினம் 27.01.2013 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பம்.

தொடர்புகளுக்கு :-
நடேஷ்வராலயா நுண்கலைக் கல்லூரி,
278, யாழ்ப்பாண வீதி, (வில்லியம் மேதர் தேவாலயம் முன்பாக, மானிப்பாய் மகளிர் கல்லூரி அருகில்), மானிப்பாய்.
T.P. 0777713394/ 0716097900/ 021 225 5455　(28478) (2.6.7)




Australia / New Zealand
April/May INTAKES IN PROGRESS

SETTLEMENT VISA

(கணவன்/மனைவி) மூலம் UK, Australia, Canada, U.S.A செல்பவர்களுக்கான வீசா தொடர்பில் ஆவணங்கள் வெற்றிகரமாகச் செய்து தரப்படும்

TOURIST VISA / FAMILY VISIT VISA

உட்பட அனைத்து நாடுகளின் வீசாவுக்களுக்குமான ஆலோசனைகளும், ஆவணங்களைத் தயார்படுத்துதல் தொடர்பில் நிபுணத்துவமான சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்.

100% வீசா உத்தரவாதம் Guaranteed

Eisc EXPRESS
INTERNATIONAL STUDIES & CONSULTANTS
30-1/14, W.A.De Silva Mawatha Colombo-06
(Above Hotel Green Palace)
Tel: 2500207 E-mail: eisc_2007@yahoo.com
Robin-0777 222 422 Selva-0714 299 935
Web: www.expresslanka.com　(C8151) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் மீண்டும் கொட்டுகிறது மழை

## மக்கள் இடம்பெயர்வு: நெற்செய்கை பாதிப்பு





அம்பாறை,ஜன.26

*கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மீண்டும் அடை மழை பெய்து வருவதுடன், பெரும் வெள்ளப் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. கடந்த நான்கு நாள்களாக காலநிலை மாற்றமடைந்து, மழை பெய்துவருவதால் இந்த மாவட்டங்களின் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.*

**அம்பாறையில் இடம்பெயர்வு**

தாழ்ந்த பிரதேசங்களிலுள்ள வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் அவலங்களுக்குள்ளாகியுள்ளனர். அதனால் அம்பாறை, கல்முனைப் பகுதியிலுள்ள மக்கள் வீடுகளை விட்டு நேற்று வெள்ளிக்கிழமை வெளியேறியுள்ளனர்.

நான்கு நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் அம்பாறை மாவட்டத்தின் பெரும்பாலான பிரதேசங்களில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

**நெற்செய்கை பாதிப்பு**

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து கொட்டிக் கொண்டிருக்கும் மழையால் பெரும்போக அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, நிந்தவூர், அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களில் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ள போதிலும், மழையால் அறுவடைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

அடைமழை தொடருமானால் பெரும் போக நெற்செய்கை பாதிக்கப்பட்டு, நஷ்டத்தை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

அடைமழையால் அம்பாறை மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் திடீரென விசம் போல் ஏகிறியுள்ளன. மீனவர்கள் கடலுக்குச் செல்முடியாததால் கடல் மீனுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

**வெள்ளத்தில் மூழ்கும் வீதிகள்**

இந்த மாவட்டத்தின் பல கிராமங்களில் திட்டமிட்ட வடிகால் வசதிகளின்றி உள்ளூர் வீதிகள் கொங்கிறீட் வீதிகளாக நினைத்த மாதிரி மாற்றப்பட்டுள்ளன. அதனால் மழை வெள்ளத்தில் வீதிகள் மூழ்கியுள்ளன. இந்த வீதிகளின் இருமருங்கிலு முள்ள வீடுகளில் வடிந் தோட முடியாது வெள்ளம் தேங்கி நிற்கிறது.

தற்போது ஏற்பட்டுள்ளது போல் கடந்த சில மாதங்களுக்குள் இரண்டு, மூன்று தடவைகள் அம்பாறை மாவட்ட கரையோர மக்கள் வெள்ள இடரை எதிர்நோக்கியுள்ளனர். ஆனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குவதில் பாராமுகம் காட்டப்பட்டுவருகிறது என்று மக்கள் தெரிவித்தனர்.

**மட்டக்களப்பில்**

மட்டக்களப்பில் அடை மழையால் கல்லெல்ல பகுதி நீரில் மூழ்கியுள்ளதுடன், பொலநறுவை - மட்டக்களப்பு வீதி மூடப்பட்டுள் ளது.

இரவில் கடும் மழை பெய்வதால் நித்திரையின்றி குழந்தைகளுடன் மக்கள் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரிய போரதீவுப்பற்று பிரதேச செயலர் பிரிவு, காத்தான்குடி பிரதேச செயலர் பிரிவு உள்ளிட்ட பகுதிகளில் மக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

கல்லாறு, கோட்டைக்கல்லாறு, தேத்தாத்தீவு, களுவாஞ்சிக்குடி, களுதாவளை, வவுணதீவு, புலிபாய்ந்தகல், வாழைச்சேனை, ஏறாவூர் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள வீடுகளில் வெள்ள நீர் உட்புகுந்துள்ளது. வீதிகள் போக்குவரத்து செய்ய முடியாதவாறு வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

**மழை வீழ்ச்சி**

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் நேற்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி வரை மட்டக்களப்பில் 229.2 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளது. இவ்வாறு மட்டக்களப்பு வானிலை அவதான நிலைய கடமை உத்தியோகத்தர் எஸ். சிவதாஸ் தெரிவித்தார்.

இதேவேளை பொத்துவிலில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி வரை 70.2 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது.

எனினும் நிந்தவூர், காரைதீவு, கல்முனை, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களில் மழை வீழ்ச்சிகள் கூடுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச-30-31)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை ஜனாதிபதி நேரில் பார்வையிட வேண்டும்

## சுபைர் வேண்டுகோள்

அம்பாறை,ஜன26

கிழக்கில் அடைமழை, வெள்ள இடரால் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு ஜனாதிபதி நேரில் வந்து பார்வையிட்டு, துரித நிவாரண நடவடிக்கைகளுக்குப் பணிப்புரை விடுக்க வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் பிரதித் தலைவர் எம்.எஸ்.சுபைர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெள்ள இடர் தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கிழக்கில் ஏற்கனவே இரு தடவைகள் ஏற்பட்ட அடை மழை, வெள்ளப் பாதிப்பின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்கள் ஒழுங்காக வழங்கப்படவில்லை.

தற்போது பெய்துவரும் அடை மழையால் முன்னரை விட மட்டக்களப்பு மாவட்டம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.பல பிரதேசங்கள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அதேபோல் அம்பாறை மாவட்டத்திலும் வெள்ள இடரால் மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும்போது நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டது என்று முதல்வர் கூறினார்.



எனவே இன்று ஏற்பட்டுள்ள மிக மோசமான வெள்ளப் பாதிப்பை ஜனாதிபதி நேரில் வந்து பார்வையிட வேண்டும்.

அதன் மூலம் பாதிப்புக்களையும் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அவலங்களையும் ஜனாதிபதி நேரில் கண்டறிந்துகொள்ள முடியும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

# வீடு அமைப்பதற்கு அடிக்கல்

## ரிசானா வாழ்ந்த குடிசையை உடைக்க வேண்டாம் என்கிறார் தாயார்

மூதூர்,ஜன.26

மூதூர், சாபி நகரில் ரிசானா நபீக்கின் பெற்றோருக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கான அடிக்கல் நேற்று வெள்ளிக்கிழமை நட்டு வைக்கப்பட்டுள்ளது.

சவூதியில் மரண தண்டனை விதிக்கப்பட்ட தனது மகளான ரிசானா நபீக் வாழ்ந்த குடிசையை உடைக்காமல் வீட்டை கட்டுமாறு ரிசானாவின் தாயார் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த அடிக்கல் நடும் நிகழ்வு இராணுவத்தின் 22 ஆவது படையணியின் பிரிகேடியர் அருண வன்னியாராச்சி தலைமையில் நடைபெற்றது.

ரிசானாவின் தாய் அஹமது செய்யது பரீனா, தந்தை மொஹமது சுல்தான் நபீக் ஆகியோரே அடிக்கல்லை நட்டு வைத்தனர். (ச)

# சுற்றுலா தகவல் நிலையங்கள் அமைப்பது குறித்து ஆராய்வு

மட்டக்களப்பு,ஜன.26

மட்டக்களப்பில் பாசிக்குடா, அருகம்பே, நிலாவெளி போன்ற இடங்களில் சுற்றுலா தகவல் நிலையங்களை அமைப்பது குறித்து கிழக்கு மாகாண சுற்றுலாத் துறை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் தலைமையில் ஆராயப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வது குறித்து ஆராயும் விசேட கூட்டம் திருகோணமலையிலுள்ள சுற்றுலாத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்திலேயே சுற்றுலாத்துறை தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், ஹோட்டல் உரிமையாளர்கள், சுற்றுலா விடுதி உரிமையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

# அம்பாறையில் மீண்டும் பூமி அதிர்ச்சி

அம்பாறை,ஜன.26

*அம்பாறை, வடினாகல பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மீண்டும் பூமி அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.*

*இதற்கு முன்னரும் இவ்வாறு பூமி அதிர்ச்சி ஏற்பட்ட போதிலும், அது இயற்கையாக ஏற்பட்ட பூமி அதிர்ச்சி இல்லை என்று புவியியல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.*

*பூமி அதிர்வை கண்டறிவதற்கான சாதனங்களை பொருத்திய போதிலும் பூமி அதிர்வதற்கான காரணத்தை புவியியல் ஆராய்ச்சியாளர்களால் கண்டறிய முடியவில்லை.*

*இதேவேளை,அம்பாறை - கண்டி வீதியில் 69 ஆவது மைல்கல்லுக்கு அருகிலுள்ள தற்காலிக பாலம் உடைந்து வீழ்ந்துள்ளதால், அந்த வீதியின் ஊடான போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ச-30)*

# மன்னம்பிட்டி ஊடான போக்குவரத்து துண்டிப்பு

எருவில்,ஜன.26

மட்டக்களப்பு- கொழும்புக்கு இடையிலான மன்னம்பிட்டி ஊடான போக்குவரத்து நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் துண்டிக்கப்பட்டுள்ளது.

மன்னம்பிட்டி மற்றும் கல்லடி பிரதான வீதியில் எட்டு அடிக்கு மேல் வெள்ளம் பாய்வதால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு செல்பவர்கள் வாகரை- பனிச்சங்கேணி, கண்டி ஊடான பாதைகளை பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலையினால் குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டதையடுத்தே, மன்னம்பிட்டி, கல்லடி பிரதான வீதிகளின் குறுக்காக வெள்ளம் பாய்கின்றது.

கடந்த டிசெம்பர் மாதம் முதல் மன்னம்பிட்டி ஊடானபோக்குவரத்து நான்கு தடவைகள் துண்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-31)

# சுயதொழிலுக்கு கடனுதவி




மட்டக்களப்பு,ஜன.26

மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு, மண்முனை மேற்கு பிரதேச மக்களுக்கு கடனுதவிகள் வழங்கப்பட்டன.

சுயதொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு ஆகிய தொழில்களை மேற்கொள்வதற்கு கடனுதவிக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண். கிழக்கு கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் ஆலயம்

**மகாசபைக்கூட்டம் 10.02.2013**

மேற்படி ஆலயத்தின் மகாசபைக் கூட்டம் எதிர்வரும் 10.02.2013 ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00 மணிக்கு மகாமாரி அம்மன் மணிமண்டபத்தில் தலைவர் கலாநிதி. க.குணராசா அவர்களது தலைமையில் நடைபெறும். இக் கூட்டத்தில் முக்கிய விடயங்கள் ஆராயப்பட இருப்பதனால் மகாசபை உறுப்பினர்கள், ஆலய உபயகாரர்கள் ஆகியோரை தவறாது சமூகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர் செயலாளர்.

கலட்டி அம்மன் ஆலயம்,
கலட்டி அம்மன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

## iphone unlock செய்து தரப்படும்

iphone 4S/iphone 5 unlock செய்து தரப்படும்.

தொ.பே: 0777794324

யாழ்ப்பாணம்

## காணி விற்பனைக்கு

யாழ். மாவட்டம் ''செம்மண் கிட் டங்கி'' நிலப்பரப்பு5 குளி16, ''கணவாய் பள்ளம்'' இரண்டு காணிகளும் சேர்த்து ௨1 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

T.P. 077 2220604

# கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜன26

ஜெ.உமாசுதனின் கவிதைகள் தொகுப்பு வெளியீட்டு விழா நாளை பிற்பகல் 2.30 மணிக்கு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி பிரதான மண் டபத்தில் யாழ்ப்பாணம் பாடசாலை வைத்திய அதிகாரி டாக்டர் வை.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறுகின்றது.


யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

நூல் அறிமுக உரையை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு இயக்குநர் திரு.அ.குமாரவேலும், வெளியீட்டுரையை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுகனும், ஆய்வுரைகளை கீரிமலை நகுலேஸ்வராக் கல்லூரி அதிபர் கவிஞர் இயல்வாணனும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு.ந.குகபரனும் ஆற்றுவார்கள்.

நூலின் முதற் பிரதியை திரு.ப.சிவகுமார் பெற்றுக் கொள்வார். நூலில் கவிஞர் ஜெ.உமாசுதனின் ஆக்கங்கள் இருபத்தியெட்டுத் தலைப்புகளில் இடம்பெற்றுள்ளன.

advt@uthayan.com
0215671111

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 01 - 11 - 1936

மறைவு 26 - 12 - 2012

### அமரர் நமசிவாயம் பாலசிங்கம்

ஆறாது ஆறாது அழுதாலும் ஆறாது தீராது தீராது உன் பிரிவுதீராது என்றும்

எமது அன்புச் சகோதரரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (26.01.2013) சனிக் கிழமை எமதுஇல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும்.மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

மாசிவன் சந்தி. நீர்வேலி வடக்கு.
நீர்வேலி

(28744)(6.7.11)

இரத்தினசிங்கம் குடும்பத்தினர்.

## ஐந்தாம் ஆண்டு நினைவு நாள்

தாயின் மடியில் 12 * 06 * 1974



ஆண்டவன் அடியில் 22 * 01 * 2008

அமரர்

### செல்வராசா துளசிதாசன்

(Tulasi cable T.V. உரிமையாளர்)

திதி–தை மாத பூரணை 26.01.2013 சனிக்கிழமை

சின்னதொரு புன்சிரிப்பு
அமைதியான பேச்சு
எளிமையின் வடிவு-எல்லாம்
உன்னிடத்தில் கண்டோம் அண்ணா
அன்புடனே அரவணைக்கும் அம்மாவும்
ஆசையுடன் வரவேற்கும் அப்பாவும்
பாசமுடன் பேசி சிரிக்கும் சகோதரர்களும்
உருகியழ வைத்து விட்டு ஓடி விட்டாய்...

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.
0773144991

(28679)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## மயில்வாகனம் டிலக்ஷன்



சென்மேரிஸ் வீதி நாவாந்துறை வடக்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் டிலக்ஷன் நேற்று (25.01.2013) வெள்ளிக்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (26.01.2013) சனிக்கிழமை பி.ப.03.30 மணிக்கு புனித மரியாள் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கடற்கரை வீதி,
நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்.

(28689)

தகவல் :
குடும்பத்தினர்
(மயில்வாகனம்)

# மரண அறிவித்தல்

# திருமதி சின்னத்துரை வாலாம்பிகை



திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை வாலாம்பிகை கடந்த (23.01.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரையின் (M.L.T)அன்பு மனைவியும், கனகசபாபதி, காலஞ்சென்ற விஸ்வலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், உருத்திரசீலி, (பிரான்ஸ்), நவநீதசீலன்(பிரான்ஸ்), காலஞ்சென்ற பக்தகுணசீலன் மற்றும் புவிராஜசீலன்(பிரான்ஸ்), நவனீதசெல்வி(பிரான்ஸ்), நற்குணசீலன்(பிரான்ஸ்), ஜெயசீலி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜதுரை, கௌரி, வசந்தரூபி, ஜெயமலர், விக்னேஸ்வரன், சுஜாத்தா, சோதிநாதன் ஆகியோரின் அன்பு மாமியும், லிகந்தா, அருள் நேசன், பிஜந்தா, பிரான்சுவா, அருந்துகி, முகுந்தன், றமநீசன், கஜநீசன், ஜெகநீசன், அருன்புஜன்,அருணன், ருத்திலா, சந்துஜன், நிலாஜன், பிரியா, ராஜ்குமார், மயூரியா, நிரோாசன், கௌசலன், பினகா, கவிமிராஜ், புவிமிராஜ், உதித்தா, நற்சுஜன், சுஜனி, சாப்நகின், நிசாட் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், மிலா, லியா, அலெக்சியா, லீலு, ஈலன் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.01.2013) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37, RUE DELYOH, 93800 ETINAY SUR SEINE
FRANCE

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்ட அனுசரணையை பெறமுடியாது

# சட்ட உதவிகள் ஆணைக்குழுவை 2012 இல் நாடிய 50 ஆயிரம் பேர்

கொழும்பு, ஜன.26

வறுமை நிலை காரணமாக சட்டத்தின் அனுசரணையை நாட இயலாது போன சுமார் ஐம்பதாயிரம் பேர் வரயிலானோர் கடந்த ஆண்டில் சட்ட உதவிகள் ஆணைக்குழுவின் தயவை நாடி வந்துள்ளனர் என்று அந்த ஆணைக்குழு தெரிவிக்கிறது.

அந்த நிலைப்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்று ஆணைக்குழுவின் தலைவர் எஸ்.எஸ். விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

குடும்பச் சச்சரவுகள்மீது நிகழும் விவாகரத்து வழக்குகள் மற்றும் பராமரிப்பு வழக்குகள் போன்ற சமூகச் சிக்கல்களுக்கு உள்ளாகும் நபர்களே சட்ட உதவிகள் ஆணைக்குழுவின் தயவை நாடி வருவோரில் அதிக எண்ணிக்கையில் உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அத்தகைய சம்பவங்கள் கூடிய அளவில் வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணப் பிரதேசங்களில் இருந்தே சட்ட உதவிகள் ஆணைக்குழுவின் கிளைகளுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

இன்று தீவிரமடைந்துள்ள நிலைப்பாட்டின் மீது இலங்கையில் நிறுவப்பட்டுள்ள சட்ட உதவிகள் ஆணைக்குழுவின் கிளை அலுவலகங்களின் எண்ணிக்கையை 75-80 வரையில் அதிகரிப்பதற்கும் சட்ட உதவிகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

சட்ட உதவிகள் ஆணைக்குழுவிடம் இருந்து சட்ட உதவிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக வருகை தரும் நபர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள பத்தாயிரம் ரூபா வருமான எல்லையை 15 ஆயிரம் ரூபா வரையில் உயர்த்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் புதிதாகக் கிளைகள் புத்தளம், ஜாஎல, நிக்கவரெட்டிய, மினுவாங்கொடை மற்றும் வலப்பனை ஆகிய பிரதேசங்களில் நிறுவப்படவுள்ளன என்று அவர் மேலும் கூறினார். (ம-22)

## ஒரே நாளில் 200 மாணவருக்கு புதிய கணக்குகள் ஆரம்பம்

### தேசிய சேமிப்பு வங்கி நடவடிக்கை

தென்மராட்சி, ஜன.26

சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் நேற்று 200 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு சேமிப்பு கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மீசாலையில் உள்ள உமாதவா கல்வி நிறுவனத்தில் தரம் 4, 5 ஆகிய வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கே சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டது.

தரம் ஐந்தில் கற்கும் 115 மாணவர்களுக்கு ஆசிரியர் க.தவயோகராசா தனது செலவில் ஒவ்வொரு மாணவருக்கு தலா 500 ரூபாவை வைப்புச் செய்தார்.

வங்கியால் அதே அளவு தொகையை மாணவரின் பெயரில் வைப்புச் செய்யப்பட்டது.

தரம் 4 இல் பயிலும் மாணவர்களுக்கு அவர்களின் பெற்றோரால் வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன.

மீசாலை உமாதவா கல்வி நிலைய ஆசிரியர் க.தவயோகராஜாவின் ஏற்பாட்டில் சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கிக் கிளை முகாமையாளர் எஸ். ஜெனநாதன் தலைமையிலான வங்கி அதிகாரிகள் கல்வி நிலையத்துக்குச் சென்று வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து கணக்குப் புத்தகங்களை கையளித்தனர். (ம-9)

## விவசாயிகளை மிரட்டும் பாம்புகள் அறுவடையில் இருவர் கடியுண்டனர்

தென்மராட்சி,ஜன.26

பாம்புக் கடிக்கு இலக்காகிய இருவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பளை சோரன்பற்றைச் சேர்ந்த வடிவேலு யோகநாதன் (வயது 52), மந்துவில் மேற்கைச் சேர்ந்த நடராசா ஆதித்தன் (வயது 54) ஆகியோரே பாம்பினால் கடியுண்டவர்களாவர்.

காலபோக நெல்வயல்களில் அறுவடை ஆரம்பித்துள்ளதால் பயிர்களுக்குள் மறைந்து வாழும் பாம்புகளால் கடிபடும் அபாயம் உள்ளது.

நெல் அறுவடை காலத்தில் கால் கைகளுக்கு உரிய பாதுகாப்பு சாதனங்களை அணிந்து நெல் அறுவடையில் ஈடுபடுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். இவ்வாறான பணிகளில் ஈடுபடுவோர் வறுமை நிலைக்கு கீழ் உள்ள குடும்பங்களைச் சார்ந்தவர்கள். அதனால் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தாமாக முன்வந்து நெல் அறுவடை மற்றும் சூடு மிதிப்பு பணிகளில் ஈடுபடுவோருக்கு பாதுகாப்புச் சாதனங்களை வழங்க முன்வர வேண்டும்.

அந்தந்த பிரிவு கமக்கார அமைப்புக்கள் ஊடாக பொதுமக்களுக்கு இவற்றை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (3-9)

## கும்பாபிஷேகம்

அராலி தெற்கு உதரான்பதி சிந்தாமணி விநாயகர் ஆலய கும்பாபிஷேகப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.40 மணிக்கு நடைபெறவுள்ளது. இன்று சனிக்கிழமை 3 மணியுடன் எண்ணெய்க் காப்புச்சாத்தும் நிகழ்வு நிறைவுறும்.

## தூய தமிழில் நாள்காட்டி

அச்சுவேலி,ஜன.26

தமிழ் இலக்கங்கள் தூய தமிழ் பெயர்களை உள்ளடக்கிய தமிழர் நாள்காட்டி வெளியிடப்பட்டுள்ளது. நாள்காட்டியின் முகப்பு அட்டையில் திருவள்ளுவரின் முழு உருவப்படம் மற்றும் தமிழ் அறிஞர்கள் 35 பேரின் வர்ணப்படங்களும் அவர்களின் விவரங்களும் அச்சிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சியை சேர்ந்த நா.வை.குமரிவேந்தன் (மகேந்திரராசா) தனது சொந்தச் செலவில் தமிழர் நாள்காட்டியை அச்சிட்டு இலவசமாக வழங்கியுள்ளார். தமிழ் இலக்கங்கள் தமிழ்ப் பெயர்கள் தொடர்பான தகவல் மறைக்கப்பட்டு வருவதோடு இளந்தலைமுறையினர் அவற்றை உரிய முறையில் அறிய முடியாமல் இருக்கின்றனர். இந்த நிலையில் தமிழர் நாள்காட்டி வெளியிடப்பட்டிருப்பதை பலரும் பாராட்டியுள்ளனர்.

தமிழ் இலக்கங்களில் திகதிகள் குறிப்பிடப்பட்டிருப்பதோடு, பன்னிரண்டு மாதங் களுக்கும் உரிய தமிழ் பெயர்கள் மற்றும் பொதுவான பாவனையில் உள்ள விவரங்கள் தூய தமிழில் பன்னிரண்டு தாளில் அச்சிடப்பட்டுள்ளன. (3-11)

## சேவைக்கு மதிப்பளித்து சுவர்க் கடிகாரம்

தென்மராட்சி,ஜன.26

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற ஒருவர் வைத்தியசாலையில் வழங்கப்பட்ட சேவைகளை மதிப்பளித்து சுவர்க் கடிகாரம் ஒன்றினை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த வர்த்தக நிலைய உரிமையாளரே சுவர்க் கடிகாரத்தை வைத்தியசாலை பொறுப்பதிகாரியிடம் கடந்த திங்கட்கிழமை கையளித்தார். அந்த சுவர்க் கடிகாரம் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் பொருத்தப்பட்டுள்ளது. (9)

## மீள் நியமனம் பெற்றார் தாதிய உத்தியோகத்தர்

தென்மராட்சி,ஜன.26

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சின் மீள் நியமனத் திட்டத்தின் கீழ் தாதிய உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் கடந்த திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றார். வைத்தியசாலையில் பத்துக்கு மேற்பட்ட தாதிய உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-9)

# தோலகட்டியை உலகறியச் செய்த இறை பணியாளன் தோமஸ் அடிகள்

அருட்திரு. அ.ம.ஸ்ரீபன் செ.தா
அதிபர், அருள்ஆசிரமம், யாழ்ப்பாணம்

வண. தோமஸ், அ.ம.தி அடிகள் இவ்வுலக வாழ்வை முடித்து இறைபதி சேர்ந்த 49 ஆவது ஆண்டு நிறைவு தினம் ஜனவரி மாதம் 26 ஆம் திகதியாகும். இன்று கோயில் வீதியில் அமைந்துள்ள செபமாலைதாசர் சபையின் அருள் ஆச்சிரமத்தில் காலை 6 மணிக்கு சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இங்கு அமைந்துள்ள அவரின் கல்லறை மண்டபத்தில் ஆசீர் செபமும் இடம்பெறும்.

1964 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை [illegible] மணிக்கு யாழ்.ஆயர் இல்லத்தில் தோலகட்டி செபமாலைதாசர் சபை - செபமாலைக் கன்னியர் தியானயோக சபை ஆகியவற்றின் நிறுவுநர் தவத்திரு வஸ்தியாம்பிள்ளை அந்தோனி தோமஸ் அ.ம.தி.அடிகளார் இவ்வுலகை விட்டு இறைபதம் அடைந்தார்.

இலங்கையில் யாழ். மாவட்டத்தின் வடபகுதியில் அமைந்துள்ள வசாவிளான் என்ற இடத்தில் உள்ள ஓர் சிற்றூர்தான் தோலகட்டியாகும். இன்று தோலகட்டி நெல்லிரசம், தோலகட்டி வைன் எனப்பலராலும் பேசப்படும், வாங்கிப் பாவிக்கப்படும் பானங்களின் விளைநிலம் இதுதான். முன்பு பலராலும் அறியப்படாமலும், பேசப்படாமலும் இருந்த இவ்விடம் 1928 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கை வரலாற்றில் மட்டுமல்ல உலக வரலாற்றிலும் இடம்பிடித்துக் கொண்டு ஒரு சிற்றூராக மாறிவிட்டது.



தந்தை தோமஸ் அடிகளாரின் வாழ்வையும் பணியையும் ஆராயும்போது இவரது மனித மாண்பையும் இறைபற்றையும் தெளிவாக அறியக் கூடியதாக இருக்கிறது. 7.03.1886 இல் யாழ். நகரின் பாண்டியன்தாழ்வு என்னும் இடத்தில் திரு திருமதி பஸ்தியாம்பிள்ளை தம்பதிகளின் இரண்டாவது மகனாக பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை அச்சுக்கூடப் பள்ளிக்கூடம் என அழைக்கப்பட்ட புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்திலும் நான்காம் வகுப்பிலிருந்து உயர் கல்விவரை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பயின்றார். 1904 ஆம்ஆண்டு கேம்பிறிஜ் மேற்றிரிவுப் பரீட்சையில் சிறந்த சித்தி பெற்றதுடன் அரச அலுவலக வேலைக்கான பரீட்சையிலும் சிறந்த வெற்றி பெற்று சமூகத்தில் உயர்ந்த நிலையை பெறக்கூடிய தகுதியைப் பெற்றிருந்தார்.

இறைவனின் சித்தமோ வேறுமாதிரியாக இருந்தது. [illegible] கம்பனி வாழ்[illegible] வழியாக யாழ். மறை மாவட்டத்தில் செபமாலைத்தாசர் சபை, செபமாலைக் கன்னியர் ஆகிய தியான யோக சபைகளை ஆசியாவிலேயே நிறுவப்பட்ட முதல் தியான யோக சபையை தோற்றுவிக்கவும் சித்தம் கொண்டிருந்தார். அவருடைய திட்டப்படியே அனைத்தும் நிறைவேறி இப்போது அவரைப் புனிதர் நிலைக்கு உயர்த்தவேண்டும் என்ற விண்ணப்பமும் வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. தோலகட்டி ஆச்சிரமத்தில் அடக்கம் செய்யப்பட்டிருந்த அவரது உடலின் பாகங்கள் எடுத்துவரப்பட்டு 8.3.2004 ஆம் ஆண்டில் யாழ். கோயில் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரம வளாகத்தில் மீண்டும் நல்லடக்கம் செய்யப்பட்டது. இங்கு மக்கள் ஏராளமாக இதை தரிசித்து செபித்து பல புதுமைகளை பெறுகிறார்கள். பொது மக்கள் ஒவ்வொரு மாதத்திலும் இரண்டாவது சனிக்கிழமை மாலை 2மணியிலிருந்து 3 மணிவரை செப வழிபாடு செய்கின்றனர். மேலும் ஒவ்வொரு செவ்வாய்கிழமைகளிலும் மாலை 2மணியிலிருந்து 3மணிவரை அருள் ஆச்சிரம ஆலயத்தில் இவரின் புனிதப் பட்ட வேலைகளுக்காக சிறப்பு வழிபாடுகள் பொதுமக்களால் நடத்தப்படுகிறது.

இவரின் ஆரம்பக்காலப் பணியின் விளைவாக யாழ். மாவட்டம் பல பணிகளைப் பெற்று மகிழ்ந்திருக்கிறது. இலங்கை மண்ணின் புனிதராக இவரை [illegible] பணிகள் நடை பெறு[illegible] இதற்காக நாமும் வேண்டுவோம். இவர் இங்கு ஏற்படுத்திய இந்தத் துறவு சபையானது இன்று இலங்கையில் யாழ்ப்பாணம், அச்சுவேலி, மிருசுவில், வவுனியா, நீர்கொழும்பு, கொச்சிக்கடை, கண்டி, இரத்தினபுரி ஆகிய இடங்களிலும் இந்தியாவில் தமிழ்நாட்டில் தூத்துக்குடி, திருச்சி, செங்கல்பட்டு, தஞ்சாவூர் மாவட்டங்களிலும், கேரளாவில் வெள்ளிகுலங்கரா, கண்ணூர், சுல்தான் பத்தேரி யிலும், கர்நாடகா பிரதேசத்தில் பெங்களூரிலும்(தலைமையகம்) ஆந்திர பிரதேசத்தில் ஏலூர் மாவட்டத்திலும், வட இந்தியாவில் மத்திய பிரதேசம்,அம்பிகபூர், சசாரம், ஜபல்பூர், ஜல்பைகுறி ஒரிசா ஆகிய இடங்களிலும் இன்னமும் கனடா நாட்டிலும் பரவி இறைபணி ஆற்றப்படுகின்றது.

இதேபோன்று இவர் ஏற்படுத்திய பெண்களுக்கான துறவு சபையானது இலங்கையில் அச்சுவேலி, யாழ்ப்பாணம், பரந்தன், மதவாச்சி, மன்னார், புத்தளம், தலவில்லு, நாகமம், ஆகிய இடங்களிலும் இந்தியாவில் செங்கல்பட்டு, தூத்துக்குடி, சென்னை, திருச்சி, கேரளாவில் திருவானந்தபுரம் வட இந்தியாவில் ஜபல்பூர், அம்பிகபூர் ஆகிய இடங்களிலும் பரவியுள்ளது. இந்த துறவு சபைகளின் பணியின் வளர்ச்சியானது இவைகளை ஏற்படுத்திய தோமஸ் அடிகளாரின் புனிதத் தன்மையையும், இறைவனின் திட்டத்துக்கு இவர் தன்னை முழுமையாக விட்டுக்கொடுத்தார் என்ற உண்மையையும் வெளிப்படையாக காணக்கூடியதாக உள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் பொதுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதன் போது உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவர்கள் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் கௌரவிக்கப்பட்டனர். (ந-422)

# ஞானரூபன் 'ஹட்ரிக்' கோல் ஹென்றிஸ் அபார வெற்றி

மாங்குளம்,ஜன.26

வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் பருத்தித்தறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஆட்டமொன்றில் இளவாலை யங் ஹென்றிஸ் அணி அபார வெற்றியீட்டியது.

இந்தத் தொடரின் ஆட்டங்கள் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் இளவாலை ஹென்றிஸ் அணியை எதிர்த்து வல்வை 'பி' அணி மோதியது.

ஆட்டம் தொடங்கிய சில நிமிடங்களிலேயே பந்தினை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது ஹென்றிஸ் அணி. அந்த அணி வீரர்கள் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி பந்தினை முன்னோக்கி நகர்த்திச் சென்று கொண்டிருந்தனர். குறிப்பாக ஹென்றிஸ் அணியின் முன் மத்திய வீரர் ஞானரூபனின் அதிரடி ஆட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வல்வை 'பி' அணி திணறியது.

ஆட்டம் தொடங்கி 3 ஆவது, 5ஆவது, 9ஆவது நிமிடங்களில் ஹென்றிஸ் அணி வீரர் ஞானரூபன் அடுத்தடுத்து 3 கோல்களைப் அடித்தது ''ஹட்ரிக்'' சாதனை படைக்க, நிலைகுலைந்தது வல்வை 'பி' அணி. அதன் பின்னர் தமது கோல் போடும் முயற்சிகளைக் கைவிட்ட வல்வை 'பி' அணியினர் தற்காப்பு ஆட்டத்தில் இறங்கினர். ஆனால் வல்வை அணி பலமான வியூகங்களை அமைத்த போதும், அவற்றை உடைத்தெறிந்து கொண்டு வெற்றிகரமாக தொடர்ந்தும் முன்னிலை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது ஹென்றிஸ் அணி. அந்த அணியின் இரு மும்முனை வீரர்களான பயஸ், யோகலீதன், ஞானரூபன் ஆகிய மூவரும் ஒன்றிணைந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வல்வை 'பி' அணியின் பின்கள வீரர்களின் தடுப்பாட்டத்தை தவிடுபொடியாக்கினர்.

இதனால் முதற்பாதியாட்டத்தின் 10 ஆவது மற்றும் 25 ஆவது நிமிடங்களில் தமக்குக் கிடைத்த வாய்ப்பை சரியான முறையில் பயன்படுத்திய ஹென்றிஸ் அணி வீரர்களான பயஸ், யோகலீதன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களை அடித்தனர். இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப் பட்ட போது 5:0 என்ற கோல் கணக்கில் ஹென்றிஸ் அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் எதிரணியின் கோல் மழையைத் தடுப்பதற்காக பலமான வியூகத்தோடு களமிறங்கினர் வல்வை 'பி' அணியினர். ஆயினும் பந்து மீண்டும் ஹென்றிஸ் அணி வீரர் ஞானரூபனின் கால்களில் வந்துசேர பார்வையாளர்கள் மத்தியில் ஆரவாரம் எழுந்தது.

பார்வையாளர்களின் எதிர்பார்ப்பை ஏமாற்றவில்லை ஞானரூபன். இரண்டாம் பாதியாட்டத்தின் 29 ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோலை அவர் போட்டார். அதன் பின்னர் வெற்றியில் தாமும் பங்கெடுப்பதற்காக ஹென்றிஸ் அணியின் வீரர் சதீஸ்கரன் 31 ஆவது நிமிடத்தில்இன்னொரு கோலைப் போட வெற்றியின் உச்சிக்கே சென்றது ஹென்றிஸ் அணி.

இறுதியில் 7:0 என்ற கோல் கணக்கில் இளவாலை ஹென்றிஸ் அணி வல்வை'பி' அணி வீழ்த்தியது. (422-23)

# குறுக்கறுத்தோடும் போட்டியில் வெற்றியீட்டிய வீராங்கனைகள்



வலி. வடக்கு, ஜன.26

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினால் வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான குறுக்கறுத்தோடும் போட்டி சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

பெண்களுக்கான இந்தப் போட்டி 8 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்டதாக அமைந்தது.

போட்டியை சண்டிலிப்பாய். பிரதேச செயலாளர் எஸ்.முரளிதரன் ஆரம்பித்து வைத்தார். மருத்துவ பரிசோதனையை வைத்திய கலாநிதி திருமதி சிவசங்கர் திருமகள் மேற்கொண்டார்.

போட்டியில் வெற்றி பெற்ற வீராங்கனைகளின் விபரம் வருமாறு-

முதலாமிடம்- யோகேந்திரன் மங்கையற்கரசி (சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்)

இரண்டாமிடம்- மரியதாஸ் தாரணி (சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்)

மூன்றாமிடம்- நாகேஸ்வரன் சுமதி (சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்)

நான்காமிடம்- ஜஸ்ரின் [illegible] (ஊர்காவற்றுறை பிரதேச செயலகம்)

ஐந்தாமிடம் -தயாளன் மிதுனா (கோப்பாய் பிரதேச செயலகம்)

ஆறாமிடம்- விக்கினேஸ்வரன் வனஜா (தெல்லிப்பழை பிரதேச செயலகம்)

வெற்றியீட்டிய வீராங்கனைகள் வட மாகாண மட்டத்தில் இடம் பெறும் இரண்டாம் சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ளத் தகுதி பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ந-86-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண ஊர் சுற்றும் போட்டி இன்று

மன்னார்,ஜன.26

வடமாகாண ஊர் சுற்றும் போட்டி மன்னாரில் இன்று சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. மேற்படி போட்டியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி,முல்லைத்தீவு,மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர்.

நிகழ்வில் மன்னார் மாவட்டக் கல்வி வலயப் பணிப்பாளர் சியான், மன்னார் மாவட்ட அரச அதிபர் ஜெ.ஏ. சரத்ரவீந்திரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-23)

## இன்றைய ஆட்டங்கள்

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தினால் யாழ்.மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கிடையே 22 ஆவது ஆண்டாக நடத்தப்பட்டுவரும் 30 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட ,கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆட்டங்கள் யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானங்களில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.

இந்த ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விபரங்கள் வருமாறு:-

**கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்.**

காலை 8.30 மணி

தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழகம் எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகம்.

பிற்பகல் 1 மணி

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகம் எதிர் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம்

**கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானம்.**

காலை 8.30 மணி

அரியாலை மத்திய விளையாட்டுக்கழகம் எதிர் கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம்.

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணி

★வல்வை விளையாட்டுக்கழக 'ஏ' அணி எதிர் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம்.

பிற்பகல் 4.30 மணி

★ மனோகரா விளையாட்டுக் கழகம் எதிர் உடுப்பிட்டி, சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம்.

★ ★ ★

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் முன்னாள் கழக வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமான 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

மாலை 6 மணி

★ சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் எதிர் வா தாரகை விளையாட்டுக்கழகம்.

★ ★ ★

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது என விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் மயூரன் தெரிவித்துள்ளார்.

★ ★ ★

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுமதியுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சி போட்டி இன்று சனிக்கிழமை அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் மோதவுள்ள அணிகள் விபரம் வருமாறு

பிற்பகல் 3மணி

காவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழகம் எதிர் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழகம்


பிற்பகல் 4மணி

பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக் கழகம் எதிர் சண்டிலிப்பாய் நியூ உதய சூரியன் விளையாட்டுக்கழகம்.

★ ★ ★

யாழ்.மத்திய கல்லூரி, மாத்தளை சென்.தோமஸ் கல்லூரி 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான நட்புரீதியிலான கிரிக்கெட் ஆட்டமொன்று இன்று சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது (ந-86-23-288)

# தேர்வுக்குழுத் தலைவர் சனத்?



இலங்கைக் கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழுத் தலைவராக இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சனத் ஜெயசூரிய நியமிக்கப்படவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த மாத இறுதியில் இலங்கைக் கிரிக்கெட் அணியின் தேர்வாளர்களின் எண்ணிக்கையில் ஒருவர் அதிகரிக்கப்படவுள்ளார். இவரே குழுவின் தலைவராகவும் செயற்படவுள்ளார். இதற்காகப் பரிந்துரைக்கப்பட்ட நபர்களின் விவரங்கள் இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் சனத் ஜெயசூரியவின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்வுக்குழுவுக்கு இதுவரை 11 பேரின் விவரங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இந்தப் பட்டியலில் அடுத்ததாக இன்னொருவர் இணைக்கப்பட்டு, அவருக்கே இலங்கைக் கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழுத் தலைவர் பதவி வழங்கப்படவுள்ளது. அநேகமாக அந்தப் பதவி ஜெயசூரியவுக்குக் கிடைக்குமென்றே நம்பப்படுகிறது.

சனத் ஜெயசூரிய இலங்கையின் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் விளையாட்டுத்துறை அமைச்சரால் புதிய உறுப்பினராக சனத் ஜெயசூரிய நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய தேர்வாளர்களின் பதவி இந்த மாத இறுதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் புதிய தேர்வுக்குழுவும் இந்த மாத இறுதியில் அறிவிக்கப்படவுள்ளது.

(நு)

# 5000




ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் பிராட் ஹொட்ஜ் '20/20' போட்டிகளில் 5000 ஓட்டங்களைக் கடந்த முதல் வீரர் என்ற புதிய வரலாற்றைப் படைத்தார்.

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் பிராட் ஹொட்ஜ். கடந்த 2008 இல் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வை அறிவித்த இவர், தற்போது பங்களாதேஷ் பிறீமியர் லீக் (பி.பி.எல்.) தொடரில், பாரிசால் பேர்னர்ஸ் அணியின் அணித்தலைவராக உள்ளார்.

நேற்றுமுன்தினம் சிட்டகாங் கிங்ஸ் அணிக்கெதிரான போட்டியில் 34 ஓட்டங்கள் எடுத்த இவர், 25 ஆவது ஓட்டங்களைக் கடந்தபோது, '20/20' அரங்கில் 5000 ஓட்டங்களைக் கடந்த முதல் வீரர் என்ற புதிய சாதனையைப் படைத்தார்.

இதுவரை இவர், '20/20' போட்டிகள் 171இல் பங்கேற்று 2 சதம், 34 அரைச்சதம் உட்பட 5009 ஓட்டங்களை எடுத்துள்ளார். இதில் 8 முறை ஆஸ்திரேலியாவுக்காக சர்வதேச '20/20' போட்டியில் விளையாடியுள்ளார்.

தவிர 38 வயதான இவர், ஆஸ்திரேலியா ஏ, விக்டோரியா, ஆக்லாந்து, நார்தன் டிஸ்டிரிக்ட்ஸ், லன்காஷயர், லீசெஸ்டர்ஷயர், துர்ஹாம், பாரிசால் பேர்னர்ஸ், கொச்சி டஸ்கர்ஸ் கேரளா, கொல்கத்தா நைட்ரைடர்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ், மெல்போர்ண் ரெனிகேட்ஸ், பாஸ்னாஹிரா உட்பட 13 அணிகளுக்காக உள்ளூர் '20/20' போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இவரை அடுத்து, மற்றொரு ஆஸ்திரேலிய வீரர் டேவிட் ஹசி, 198 போட்டிகளில் 4821 ஓட்டங்கள் எடுத்து, 2 ஆவது இடத்தில் உள்ளார்.

(நு)

# ஷரபோவா தோல்வி...

ஆஸ்திரேலிய பகிரங்க கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டி மெல்போர்ண் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று நடந்த மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டம் ஒன்றில் உலகின் 2 ஆம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷரபோவா, தரவரிசையில் 6 ஆவது இடத்திலிருக்கும் நா லீயுடன் மோதினார்.

இதில் எவருமே எதிர்பாராத வகையில் ஷரபோவா அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.





சீன வீராங்கனை நா லீ 6:2, 6:2 என்ற நேர்செற் கணக்கில் ஷரபோவாவை எளிதில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

கடந்த முறை இறுதிப்போட்டியில் தோற்ற ஷரபோவா தற்போது அரையிறுதியிலேயே வெளியேறியுள்ளார். ஷரபோவா ஆஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் பட்டத்தை ஒருமுறை மாத்திரமே வென்றிருந்தார்.

நா லீ 2 ஆவது முறையாக ஆஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார். இதற்கு முன்பு 2011 ஆம் ஆண்டும் அவர் தகுதி பெற்றிருந்தார்.

நா லீ இறுதிப்போட்டியில் முதல்நிலை வீராங்கனையான பெலாரஸின் அசரென்காவை சந்திக்கவுள்ளார்.

(நு)

# இலங்கை முதலிடம்




சர்வதேச '20/20' போட்டியில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலைச் சர்வதேச கிரிக்கெட் சபை டுபாயில் நேற்று வெளியிட்டது.

இதில் முதலிடத்தை இலங்கை (127 புள்ளி) பிடித்துள்ளது. மேற்கிந்தியத் தீவுகள் (122) அணி 2ஆவது இடத்திலும் இந்திய அணி 119 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் நீடிக்கின்றன. இங்கிலாந்து (118), தென்னாபிரிக்கா (117) அணிகள் முறையே 4 ஆவது, 5 ஆவது இடங்களைக் கைப்பற்றியுள்ளன.

துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில், ஆஸ்திரேலியாவின் ஷேன் வொட்சன் (798 புள்ளி), மேற்கிந்திய தீவுகளின் கிறிஸ் கெய்ல் (792), நியூசிலாந்தின் பிரண்டன் மெக்கலம் (787) முதல் மூன்று இடங்களில் உள்ளனர்.

இந்திய வீரர் விராட் கோஹ்லி 5ஆவது இடத்தில் உள்ளார். மற்றொரு இந்திய வீரர் சுரேஷ் ரெய்னா, 9ஆவது இடத்தை எட்டிப்பிடித்தார். யுவராஜ் சிங் (13ஆவது இடம்), கவுதம் கம்பீர் (17ஆவது) ஆகியோர் முதல் 20 இடங்களுக்குள் உள்ளனர். பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில், முதல் மூன்று இடங்களில் பாகிஸ்தானின் சயீட் அஜ்மல் (56 புள்ளி), இலங்கையின் அஜந்த மெண்டிஸ் (46), இங்கிலாந்தின் சுவான் (20) உள்ளனர். எனினும் இதில் முதல் 10 இடங்களில் ஒரு இந்திய பந்துவீச்சாளர் கூட இடம் பெறவில்லை. தமிழக சுழற்பந்துவீச்சாளர் அஷ்வின், 16ஆவது இடத்தில் உள்ளார்.

இவரை அடுத்து, ஹர்பஜன் சிங் 30 ஆவது இடத்தில் உள்ளார். சகலதுறை வீரர்களுக்கான வரிசையில், ஆஸ்திரேலியாவின் ஷேன் வொட்சன், பாகிஸ்தானின் ஹபீஸ் முதலிரண்டு இடங்களில் உள்ளனர். இந்தியாவின் யுவராஜ் சிங் 3 ஆவது இடத்தில் உள்ளார்.

(நு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வாரிசு

நட்சத்திரவீரர் சச்சினின் மகனைப் போன்று மேற்கிந்தியத்தீவுகள் வீரர் சந்தர்போலின் மகனும் முதல் தர கிரிக்கெட்டில் களமிறங்கியுள்ளார்.

இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கரின் மகன் அர்ஜுன் சமீபத்தில், 14 வயதுக்குட்பட்ட மும்பை அணியில் தெரிவு செய்யப்பட்டார்.

அதேபோல தற்போது, உலகின் சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் இரண்டாவது இடத்திலுள்ள, சந்தர்போலின் மகன் டேகநரைன் (வயது 16) கிரிக்கெட்டுக்கு வந்துள்ளார்.

கயானா அணியில் இடம்பெற்றுள்ள டேகநரைன், லீவார்ட் ஐலண்ட் அணிக்கெதிரான நான்கு நாள் உள்ளூர் போட்டியில் வரும் பெப்ரவரி 9 ஆம் திகதி தொடக்க வீரராகக் களமிறங்க உள்ளார். (ந)


## தவறிவிட்டது

வசந்தநகர், திருமுருகண்டியில் வசித்துவரும் இரத்தினசிங்கம் சதாசிவம் என்பவருடைய முச்சக்கர வண்டியின் உரிமைப்புத்தகம், வரிப்பத்திரம் ஆகியவை விசுவமடுவிற்கும் புளியம் பொக்கணைக்கும்இடையில்தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:077 3315185.
(26330)(8.7.4)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

(SAT&SUN)

**aat(SriLanka)**

FOUNDATION, INTERMEDIATE, FINAL.
Medium:Tamil, English
க.பொ.த(சா.த) பரீட்சையில் 6 சித்திகளுடன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

**External degree**

GAQ, B.AI,BA (Final)
1st in Com,B.Com.(part 1), B.Com (part 11), B.Com (final)

further Details:
**JAFFNA COLLEGE**
UNDERGRADUATE Dept.
464, Hospital Road,Jaffna.
021 222 3382

## யாழ்.நகரில் Diploma in Mass Media
### அறிவிப்பாளர் பயிற்சி

(2ஆவது பிரிவு 16 மாணவர்களுடன் வெற்றிகரமாக நிறைவு பெற்றதைத் தொடர்ந்து 3 ஆவது பிரிவு ஆரம்பம் 10.02.2013 காலை 9.00) வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளராக ,தயாரிப்பாளராக,நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வருவதற்கு ஆசைப்படுகிறீர்களா!

இதோ...

வடமாகாணத்தில் (திறமையின் தேடல்) ஊடகத் துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை தலை சிறந்த அறிவிப்பாளர்களாக உருவாக்கிவரும் Sun British College பெருமையுடன் அறிமுகப்படுத்தும் யாழ். மற்றும் வவுனியா மாணவர்களுக்கான அறிவிப்பாளர் பயிற்சி நெறி.

(Diploma in Mass Media)

வானொலி அறிவிப்பு, நிகழ்ச்சி தயாரிப்பு- நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, விளம்பரத்தயாரிப்பு ,நேரடி வர்ணனை, செய்தி வாசிப்பு,பத்திரிகை வாசிப்பு இன்னும் பல (பயிற்சியினை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு 05 நாள் மழைFM வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்ற சந்தர்ப்பம்) *தயாராகுங்கள். பதிவுகளுக்கு விரையுங்கள்.*

| வவுனியா,முல்லைத்தீவு மாணவர்கள் | யாழ்ப்பாணம்,கிளிநொச்சி மாணவர்கள். |
|---|---|
| Sun British College | IISEEE NALLUR CAMPUS |
| No-26 Station Road | No-72,Point Pedro Road, |
| Vavuniya | Nallur, Jaffna |
| 0777929473. | 0777929475, 0212224728. |

(27627)(6.7.4)

எமது நிறுவனத்தில் அறிவிப்பாளர் பயிற்சியினை மேற் கொண்ட மாணவர்கள் அரச ,தனியார் , வானொலி, தொலைக் காட்சிகளில் அறிவிப்பாளராக கடமையாற்றுகின்றார்கள்.

## FRENCH LANGUAGE CENTRE
சர்வதேச தரத்திலான FRENCH வகுப்புக்களை வழங்கும் ஒரே ஒரு நிறுவனம்.

**FRENCH CLASSES**
ஆசிரியர்: Mr.V.Jegan
(Teaching Training in France-2007)
FOR BETTER FRENCH 0779789456
பதிவுகளை இன்றிலிருந்து மேற்கொள்ளலாம்...

| ஆரம்பம்: 29.01.13 Tue 11am | ஆரம்பம்: 01.02.13 Fri 11am |
|---|---|
| No.23, Palaly Road, Jaffna. (அம்மன் வைத்தியசாலை முன்பாக) ஆரியகுளம். | No.26, Station Road, Vavuniya. |

German (Deutsch) வகுப்புகளும் நடைபெறுகின்றன.

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**A/L ICT 2015**
**O/L - Gr. 10 ICT**
MIS Open Source College
Call : 0776577359
for 11 years in IT Education
சிறந்த பெறுபேற்றினைப் பெறுவதற்காக.....
**R.Kumaran-B.Sc.**
74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்-இராமநாதன் வீதியிலிருந்து 150 m
கொக்குவில் பூநாறி மரத்தடி KKS வீதியிலிருந்து 200 m


# மரண அறிவித்தல்

## சிற்றம்பலம் தங்கரத்தினம்



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் தங்கரத்தினம் நேற்றுமுன்தினம் (24.01.2013) வியாழக் கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (திரியாய் அம்மன் கவுண்மேன் கொன்றாக்டர்)- நாகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற சபாபதி சிற்றம்பலம் (மல்லிகா ஸ்ரோர்ஸ், ஆவரங்கால் ) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வாலாம்பிகை, சண்முகராஜா மற்றும் அமுதலிங்கம் (சாவகச்சேரி), யோகாம்பிகை (அச்சுவேலி), பத்மநாதன் (கனடா), கமலாதேவி (கனடா), பாமா (இயக்கச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலநாதன், மல்லிகா (மட்டக்களப்பு), மஞ்சுளா, மோகனா, விஜியன் (சுவிஸ்), மேனகா (லண்டன்), சிறி, இந்திரன் (சுவிஸ்), தயாளன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், சிவேஸ்வரி, பரஞ்சோதியார், காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் தயாளநிதி, சுகுணா (சுவிஸ்), சிவராசா (லண்டன்), மல்லிகாதேவி, கலாஜினி (சுவிஸ்), சாமினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரசன்னா, மகிந்தன், கௌசிகா, சுபேகா, ஹேமா, விவிதா, ஷர்மிளி, ஷோபிதா, காலஞ்சென்ற தர்ஷிகா மற்றும் அரிபவன், தீவிகா, கிரோஷி, நிரோஷ், கிரிறாஜ், ஆதவன், சுருதி, தாரகா, நிலாந், திசா, அதிதரன், ஜீவன்ஜா, நிருஷா, ராகவி, பிரணீத், ஜனோத், அனிஸ், ஹரிஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஹேசாந்தின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.01.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மல்லிகா ஸ்ரோர்ஸ்,
சோபிதா ஸ்ரோர்ஸ்,
ஆவரங்கால்,
புத்தூர்.

தகவல்
குடும்பத்தினர்.

(C/6037)(2.6.7)


## BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS

### முதன் முறையாக அறிமுகப்படுத்தும் Advanced Diploma in English

இக்கற்கை நெறியானது:-

உயர்தர ஆங்கில Diploma வும் ஆங்கில மொழி கற்பதும் 6 மாதங்கள் அடங்கிய நிறைவான பல அம்சங்களைக் கொண்ட ஒரு கல்விநெறி. இந்நெறி ஆங்கில இலக்கியத்தினையும் பிரயோக மொழியினையும் பேச்சையும் உள்ளடக்கிய ஒன்றாகும். இவை பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- ஆங்கில மொழியையும் ஆங்கில இலக்கிய அறிவையும் பெற்றுக்கொள்ள வாஞ்சிப்பவர்களுக்கும் மேலும் மொழியைச் சிறப்பாகக் கற்று அதற்கு வேண்டிய தகமையை ஏற்படுத்த உதவி செய்யும்.
- மேலும் ஆங்கிலத்தினைப் பகுத்து வகுத்து விரிவாக்கி ஆங்கில இலக்கியத்தினூடாகவும் அவையல்லாத ஏனைய நூல்களுக்கூடாகவும் அறிவைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்கும்.
- ஆங்கில அறிவைப் பெற்று மேலும் அதை விருத்தியாக்கி அதோடு சேர்த்து ஏனைய துறைகளும் அடங்கிய மொழியியல், ஆங்கிலம் கற்பித்தல் போன்றவற்றை உருவாக்க உதவி செய்யும்.
- இந்த நெறி ஆங்கிலத்தில் சரிவர விளங்கிக் கொள்ளவும் அத்தோடு ஆங்கில அறிவையும், இலக்கியத்தினையும் விருத்தி செய்ய உதவும்.

### விசேடமாகக் கவனிக்க வேண்டியவை

- ஆங்கிலத்தில் உயர்தரத் தகமை பெற்றுக்கொள்ள முடியும்.
- அரசாங்க நிறுவனங்களில், தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பைப் பெற உதவும் கற்கை நெறி.
- எதிர்காலத்தில் ஆங்கில ஆசிரியராக வர இருப்பவர்களுக்கான கற்கை நெறி.
- ஆரம்பநிலை ஆங்கில ஆசிரியர்கள் உயர்தர நிலைக்கு இக்கற்கை நெறியைக் கற்பதன் மூலம் தம்மை மாற்றிக் கொள்ள முடியும்.

**காலம் : 6 மாதம்**

Week Days 9.00 - 12.00, 3.00 - 5.00
Week Ends 11.30 - 1.30, 3.00 - 5.00

புதிய வகுப்புக்கள் Batch I - 27.01.2013 Batch II - 28.01.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

## AATகற்கை நெறி தொடர்பான இலவச அறிமுக வகுப்பு

இடம்: Spectra Skills Hall.
19, Stanley Road.
(People's Bank 2nd Floor) Jaffna.

காலம்: 27.01.2013 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: காலை 9 மணி.

குறிப்பு: எமது நிறுவனத்தில் AAT கற்கை நெறியை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பை நாமே பெற்றுத் தருகிறோம்.

பதிவுகளுக்கு முந்துங்கள்.Tel :021 222 1422/1423

(28661)(6.7.4)

## CHEMISTRY
### S.Vasu

புதிய பிரிவுகள் ஆரம்பம்

2013 A/L
- மின் இரசாயனம், அவத்தைச் சமநிலை சனி, ஞாயிறு (4-5 p.m.)
- தொழில்முறை இரசாயனம் சனி, ஞாயிறு (5-6 p.m.)
- Paper Class திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி (5-6 p.m.) (2000 தொடக்கம் 2012 வரையான கடந்தகால M.C.Q. வினாக்கள் தெளிவான விளக்கங்களுடன்)

2014 A/L
- அசேதன இரசாயனவியல் சனி, ஞாயிறு (12.30- 1.30 p.m.)
- சக்தியியல் செவ்வாய், வியாழன்(4-5 p.m.)

2015A/L
இரசாயனக் கணிப்பீடுகள் சனி, ஞாயிறு (8.30-9.30 a.m.)

தொடர்பு- 0774696695, 0750391482

NEC ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## புதிய விசா ஆலோசனைகள்

நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, மலேசியா, சைப்பிரஸ், கனடா, Student Visa
குடும்ப விசா, VisitVisa
திசைகார்டு (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். 0212219016

(28734)(6.7.11)

எல்லா நாள்களும் காலை 8.30 - பி.ப 6.30 வரை


## 45ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
27.09.1954

இறப்பு
13.12.2012

அமரர் **தம்பையா சண்முகநாதன்**
[முன்னாள்,கிராம அலுவலர்-துனுக்காய்]

*13.12.2012 அன்று இறைபதம் எய்திய எமது அன்புத் தெய்வத்தை நினைவு கூருகின்றோம்.*

இல.464. திருநகர். யோகபுரம்.
மல்லாவி.

குடும்பத்தினர்.

(28744)(6.7.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

திறமை உள்ளவனுக்கே மீண்டும் உதவி செய்பவன், கொல்லன் வீதியில் ஊசியை விற்கும் வைத்தியக்காரனை போன்றவன்.- விவேகானந்தர்

# வார வசந்தம்

01

உதயன் | 26 ஜனவரி 2013 | சனிக்கிழமை | பக்கங்கள்: எட்டு

# மறப்போம் மன்னிப்போம்

தமக்கு தீமை செய்தவர்களையும் மன்னித்து விடும் குணம் உள்ளவர்களே மனிதர்களில் உயர்வானவர்கள் என்று சான்றோர் கூறுவர்.

இயேசுபிரான், புத்தபெருமான், மகாத்மா காந்தி ஆகியோரும் இதனை வலியுறுத்திக் கூறியதோடு தமது வாழ்விலும் கடைப்பிடித்தனர்.

இந்த மன்னிக்கும் குணம் எல்லோருக்கும் எளிதில் வந்து விடக் கூடியதொன்றல்ல. அப்படியே வந்து விட்டாலும் இன்றைய சமுதாய அமைப்பில் அது போற்றப்படுவதும் இல்லை.

உதைக்கு உதை, அடிக்கு அடி, வெட்டுக்கு வெட்டு என்ற சூத்திரத்தை இம்மியும் பிசகாது கடைப்பிடித்து வரும் இன்றுள்ள மனித சமுதாயம் இதனைக் கருத்தில் கொள்வதாகவும் தெரியவில்லை.

மாறாக மன்னிக்கும் பண்பு உள்ளவர்கள் ஏமாளிகள் என்றும், வெகுளிகள் என்றும், புத்தி பேதலித்தவர்கள் என்றும் இகழப்படுகின்றனர். இதிலிருந்து விடுபடும் பொருட்டு இயல்பாகவே மற்றவர்களை மன்னிக்கும் பண்பு உள்ளவர்களும் அதனை வெளிக்காட்டாமலேயே இருந்து விடுகின்றனர்.

எது எப்படியிருப்பினும் ஒருவன் மற்றவர்களின் குறைகளையும், குற்றங்களையும் மன்னித்து விடும் குணத்தைக் கொண்டிருப்பதால் அவனது மனமும், உடலும் எப்போதுமே ஆரோக்கியமான நிலையில் காணப்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

இதை விடுத்து தனக்குத் தீமை செய்த ஒருவனை எவ்வாறு தண்டிக்கலாம் என்று ஒருவன் சிந்திப்பானேயாகில் அவன் முதலில் தனது தூக்கத்தை இழந்து விடுகின்றான். பின்னர் மன அமைதி குலைந்து இறுதியில் நோய்வாய்ப்படுகின்றான்.

மக்களைத் தவறான வழியில் இட்டுச் சென்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு சிலுவையில் அறையப்பட்ட இயேசு பிரான் தமது வாழ்வின் இறுதித் தருணத்திலும் தமக்குக் கொடுமை இழைத்தவர்களை மன்னிக்கும் பண்பை இழந்து விடவில்லை. ஆண்டவரே பாவிகளை மன்னித்தருளும் என்றுதான் அவரது வாய் முணு முணுத்தது".

இதைப் போன்றுதான் அந்நியரிடமிருந்து இந்தியாவுக்கு விடுதலை தேடித் தந்த தேசபிதா மகாத்மா காந்தி கோட்சேயினால் சுடப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்த போதும் தமது மன்னிக்கும் பண்பை வெளிக்காட்டினார்.

ஆதரவற்ற அநாதைக் குழந்தைகளின் தாயாக விளங்கிய அன்னை திரேசா அந்தக் குழந்தைகளுக்குத் தேவையான உதவிகளைப் பெறும் பொருட்டு வசதி படைத்தவர்களை நாடினார். அப்போது அவர்களுள் ஒருவன் அவரது நீட்டிய கரங்களுக்கு எச்சிலை உமிழ்ந்தான். அந்த வேளையிலும் அவர் நிதானத்தை இழக்கவில்லை. ஆத்திரப்படவும் இல்லை. மாறாக உமது உதவிக்கு நன்றி என்றுதான் கூறினார். அந்தக் கணமே எச்சிலை உமிழ்ந்தவன் தனது தவறை உணர்ந்து கொண்டான். அன்னையிடம் மன்னிப்பும் கோரினான்.

தவறு செய்வது மனித இயல்பு. சந்தர்ப்ப சூழ்நிலையைப் பொறுத்தும் சிலர் தவறு இழைக்கின்றனர். தமக்குத் தாங்க முடியாத தொல்லைகள் நேரும்போது தவிர்க்க முடியாத நிலையில் சிலர் தவறுகள் செய்கின்றனர். அவர்களால் பாதிக்கப்பட்டவர்கள் இவற்றை ஒரு கணம் சீர்தூக்கிப் பார்க்கும் போது உண்மை நிலை தெரிய வரும். பழி தீர்க்கும் எண்ணமும் மனதிலிருந்து மறையும்.

நவீன விஞ்ஞான வளர்ச்சி எவ்வளவோ மாற்றங்களை ஏற்படுத்திய போதிலும் மதவாதிகள் மாறியதாகத் தெரியவில்லை. மத ரீதியான வேறுபாடுகள் பலரது உயிர்களைப் பறிக்கும் அளவுக்கு விஸ்வரூபம் எடுத்துள்ளன. ஆண்டவனை அணுகுவதற்கான மார்க்கத்தை தெளிவுபடுத்துவதற்காகவே மதங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் இன்று அந்தக் குறிக்கோள் திசை மாறிச் செல்கின்றது. ஏனைய மதப் பிரிவினரை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவம் இன்னமும் ஏற்பட்டு விடவில்லை. மதங்கள் எத்தனை இருந்த போதிலும் இறைவன் ஒருவர் தான் என்ற உண்மை ஏனோ இந்த மதவாதிகளின் மனங்களில் உறைப்பதில்லை. பஞ்சாப்பிலுள்ள பொற் கோயிலுக்குள் இராணுவத்தை அனுப்பினார் எனக் குற்றம் சாட்டப்பட்ட இந்தியப் பிரதமராக இருந்த இந்திராகாந்தி அவரது சீக்கிய மெய்க்காப்பாளராலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து ஆயிரக் கணக்கான அப்பாவிச் சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். சீக்கிய மதத்தைச் சார்ந்தவர்கள் என்பதனாலேயே இந்தக் கொலைகள் நிகழ்த்தப்பட்டன.

ஒருவரை ஒருவர் மன்னிப்பதில் இருந்து தவறியதன் விளைவே இந்தக் கொடிய சம்பவங்கள். ஒரு சில குடும்பங்களில் கூட இத்தகையதொரு நிலை காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

மனைவியால் பரிமாறப்படும் உணவில் உப்பு அல்லது காரம் சற்றுக் கூடுதலாக இருந்து விட்டால் கணவன் பொங்கி எழுந்துவிடுவார். மனைவியைக் கண்டபடி திட்டுவார். சில வேளைகளில் உணவு வீசி எறியப்பட்டு விடும். இதனால் அந்தக் குடும்பத்தின் அமைதியே மறைந்து விடும். பல வருடங்களாக அந்தக் குடும்பத்துக்காக உழைத்து ஓடாகத் தேய்ந்திருக்கும் அந்த அம்மா ஏதோ ஞாபகத்தில் தவறுதலாக இதனைச் செய்திருக்கலாம். ஏனைய நாள்களில் அவரது சமையலைப் பாராட்டியவாறு வயிறு புடைக்க உண்டவர் தானே இந்தக் கொதியர். அன்று ஏற்பட்ட அந்தச் சிறு தவறு அவரால் மன்னிக்கப்பட்டிருப்பின் அந்தக் குடும்பமே நிம்மதியை இழந்திருக்காது.

யூதனான தேநீர்க்கடை உரிமையாளன் ஒருவன் (உணவுக்காக இரந்து நின்ற ஜேர்மனியப் பெண்ணின் முகத்தில் கொதி நீரைக் கொட்டியதன் விளைவே 60 லட்சம் யூதர்கள் விஷ வாயுக் கூண்டில் அடைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதற்குக் காரணமாயிற்று. சர்வாதிகாரி ஹிட்லர் முன்னைய சம்பவத்தை மறந்து மன்னித்திருந்தால் இந்தக் கொடுமையே நிகழ்ந்திருக்காது.

இவ்வாறு பல சம்பவங்களை எடுத்துக் கூறலாம். மற்றவர்களை மன்னிப்பது என்பது மனதின் ஆழத்திலிருந்து வெளிக்கிளம்பும் ஒரு புனிதமான பண்பாகும். இதனை ஒருவர் மீது மற்றொருவர் திணிக்க முடியாது. தானாகவே உருவாக வேண்டும்.


சிறுவயதில் தவறான சிந்தனையுள்ள ஒருவன் தனது முதிர்ந்த பிராயத்திலும் அதனைக் கொண்டிருப்பான் என நாம் எதிர்பார்க்க முடியாது. வாழ்க்கைப் போராட்டத்தில் அவன் கற்றுக் கொண்ட பாடங்கள் அவனை நல்வழிப்படுத்தி நல்லவனாக மாற்றிவிடும் சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுண்டு.

போர் வெறி கொண்ட பல அரசர்கள் போரால் ஏற்பட்ட கொடிய விளைவுகளைத் தெரிந்து கொண்ட பின் மனம் மாறிய சந்தர்ப்பங்களும் அதிகம் உள்ளன. அசோக மன்னன் இதற்கொரு முக்கிய உதாரணமாகத் திகழ்கின்றான்.

கலிங்க நாட்டின் மீது அவன் தொடர்ந்த போரால் பலர் உயிரிழந்தும் ஏராளமானோர் அங்கங்களை இழந்தும் இருந்தமை அவனது மனதிலே பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. இதன் விளைவாக புத்த மதத்தைத் தழுவியதோடு உலகின் வேறு நாடுகளிலும் அதனைப் பரப்புவதற்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டான். நமது இலங்கைத் தீவிலும் அதிக எண்ணிக்கையான புத்த மதத்தினர் வாழ்வதற்கு இதுவே வழி அமைத்துக் கொடுத்தது.

ஆகவே நாம் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு எமது மனங்களில் நல் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மற்றவர்களின் தவறுகளை மறந்து மன்னிக்கும் சுபாவம் எம்மிடையே நிலைத்து நிற்க வேண்டும். ஒவ்வொரு மனிதனிடத்திலும் இத்தகைய மன மாற்றம் ஏற்படுமாயின் இந்த உலகமே ஓர் அமைதிப் பூங்காவாக மாறிவிடும் என்பதில் ஐயமே இல்லை.

உலகமே அழிவின் விளிம்பில் இருப்பதாகக் கூறப்படும் இந்த வேளையில் மனிதர்களிடத்திலும் மாற்றங்கள் ஏற்படத்தான் வேண்டும்.



எது எப்படியிருப்பினும் மனிதன் மற்றவர்களின் குறைகளையும், குற்றங்களையும் மன்னித்து விடும் குணத்தைக் கொண்டிருப்பதால் அவனது மனமும், உடலும் எப்போதுமே ஆரோக்கியமான நிலையில் காணப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இதை விடுத்து தனக்குத் தீமை செய்த ஒருவனை எவ்வாறு தண்டிக்கலாம் என்று ஒருவன் சிந்திப்பானேயாகில் அவன் முதலில் தனது தூக்கத்தை இழந்து விடுகின்றான். பின்னர் மன அமைதி குலைந்து இறுதியில் நோய்வாய்ப்படுகின்றான்.



■ ராஜராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாடுகளில் தியானம்



** க.நாகேஸ்வரா,**
**சண்டிலிப்பாய்.**

மனித வாழ்வு மகத்தானது. கிடைத்தற்கரியது. மனிதன் தன் ஆற்றலால் அதனை மெம்படுத்திக் கொள்ளாமல் ஆளுமையின்றி வீணே வாழ்நாளின் பெரும் பகுதியைக் கடத்திக் கொண்டிருக்கின்றான். நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் காரணகாரியமுண்டு. மனநலமும், உடல்நலமும் எம்மை ஆட்கொள்ளும் சக்தியாக விளங்குகின்றன. மனம் மகிழ்ச்சியடையும் போது நரம்பு மண்டலங்கள் கிளர்ச்சியடைகின்றன. எதிர்மாறான விளைவுகளைச் சந்திக்கும் போது அதே மனம் அசாதாரண சேர்க்கைகளால் உந்தப்பட்டு சிதைவடைந்து போகின்றது.

இப்படியான மனதை சீர் செய்வதற்கு மனவளக்கலை, யோகாப்பியாசம், பிராணாயாம் போன்றவை தேவைப்படுகின்றன. மனதை ஒருநிலைப்படுத்த சில பல்வேறு ஆன்மிகப் பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். யோகிகளும், சித்தர்களும் இந்தப் பயிற்சியை உலகுக்கு அறிமுகப்படுத்தி மனிதனை நல்வழிப்படுத்த முற்பட்டனர். ஆயினும் இன்றைய அவசர உலகில் இவைகள் புறக்கணிக்கப்பட்டு புறந்தள்ளப்பட்டு வருகின்றன.

உடல்நலமும், மனநலமும் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. உடல் நலத்துக்கு அப்பியாசங்கள் தேவைப்படுவது போல மன நலத்துக்கும் சில அப்பியாசங்கள் தேவைப்படுகின்றன. இதில் பிராணாயாமம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இதனை முறைப்படி செய்தால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து எந்தவொரு நோயும் எம்மை அணுகமாட்டா. நாட்பட்ட பல வியாதிகளும் நாளடைவில் இல்லாமல் அடியோடு மறைந்து போகும்.

உடலில் ஏழு சக்கரங்கள் உள்ளன. இவை தம் தொழில்பாட்டைச் செவ்வனே செய்வதால் உடல் நிலை சீராக்கப்படுகின்றது. இந்த ஏழு சக்கரங்களில் முதல் சக்கரம் ஆசனப் பகுதியில் இருந்து ஆரம்பித்து சிரசு இருக்கும் இடத்துக்கு ஒவ்வொரு பகுதியாகக் கடந்து தொழில்பட்டு இறுதியாக சிரசையடைகின்றது. இது உடலை ஒரு சங்கிலிப் பிணைப்பாக்கி இறுதிச் சக்கரமாகிய சிரசினையடைவதால் உடல் பூரணமாகத் தொழிற்படுகின்றது. இவ்வாறு ஏழு சக்கரங்களும் தொழிற்படுவதால் நம் உடல் பூரணமாக மன நலத்துடன் செயற்படும். இது தியான முறைகளின் ஒரு படிமுறை வளர்ச்சி எனலாம்.

நாம் இன்ப துன்பங்களைச் சரிசமனாக எடைபோட்டு வாழப் பழக வேண்டும். வெற்றியை மட்டும் குறிக்கோளாகக் கருதி ஆணவப்பட்டு அழிந்து போகாமல் இருக்க வழிபாடு பயன்படுகிறது. மன அழுத்தத்தையும், இறுக்கத்தையும் இல்லாது ஒழிக்க தியான முறைகள் பல்வேறு வடிவங்களில் நமக்குப் பயன்படுகின்றன. இப்படி நம் மன வளர்ச்சிக்குப் பயன்பட்டு வந்த தியானமும் தத்துவமும் பரிணாம வளர்ச்சியில் உலகியலாக மாறியுள்ளன.

தியானம் மிகவும் வேண்டத்தக்க தொன்று. தியானம் செய்பவர்கள் மான் தோலின் மீதிருந்து ஜெபிப்பதால் இதன் பலன் பூமியையடையாது தடுத்து ஜெபம் செய்யப்படும் நபரை நேரிடையாகச் சென்றடைகிறது. புண்ணியம் செய்த மான், புலியின் தோலே ஜெபத்துக்கு உகந்தது. மோட்சம் பெறுகின்றது. ஏனையவை வேறு தோல் பொருள்களுக்குப் பயன்படுவதாக ஐதீகம் கூறுகின்றது. எனவே மான்தோலில் தியானம் செய்வது மகத்தானது.

தியானம் பலபடி முறைகளில் செய்யப்படுவதாயினும் குறிப்பாக வேதாத்திரி மகரிஷியின் ''காயகல்பம்'' என்னும் நூலிலும், ஸ்ரீ பரமஹம்ஸ சுவாமி சச்சிதானந்த யோகேஸ்வரரின் யோகாப்பியாசம் பற்றிய நூலிலும் இவை மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

வலது இடது நாசிகளில் மூச்சை நிறுத்துதல், படிப்படியாக ஆயிரத்துக்கும் மேலான எண்ணிக்கையுடன் மூச்சை நிறுத்துதல் இறுதியாக யோகாப்பியாசத்தையால் உயிரை உடலிலிருந்து பிரித்தல் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புதல், நீரின் மீது படுத்திருந்து பத்மாசனத்துடன் சயனித்து உபந்நியாசம் செய்தல், இவற்றின் ஆரம்ப இறுதி நிலைகளை சுவாமி சச்சிதானந்த யோகீஸ்வரர் யோகாப்பியாசப் பயிற்சி நூலில் விளக்கியுள்ளார்.

எனவே நிம்மதியைத் தேடியலைபவர்களுக்கு அவர்களின் ஆற்றலை மெம்படுத்தி நிலையான ஆரோக்கியத்தையும் நிம்மதியையும் தரும் மனதை ஒருநிலைப்படுத்துவது தியான வழிபாடுதான் என்பது உண்மை. இதனடிப்படையில் இறை வழிபாட்டுடன் தியானத்தையும் கடைப்பிடித்து ஆன்ம ஈடேற்றத்துக்கு வழி சமைப்போமாக. ★

# நட்பு



**கு.பிரிந்தா,**
**சாவகச்சேரி**



மனிதன் மகத்துவமான ஜீவன். தாம் பிறந்த மண்ணில் சூழலுக்குக் கட்டுப்பட்டு வாழும் மனிதன் ஒரு கட்டமைப்புக்குள் தனித்துவத்தைப் பேணி நியமங்களுக்கும் சட்டங்களுக்கும் கட்டுப்பட்டு வாழ வேண்டியவனாகின்றான். சூழலுக்கு ஏற்ப நல்லவனாகவும், தீயவனாகவும் மாறுகின்ற விலங்காகவும் அமைகின்றான்.

மனிதன் மனிதனாக வாழ நல் விழுமியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அந்த வகையில் சிறப்பு நட்பு ஒருவனை நல்லவனாக உலகுக்கு உருவாக்குகின்றது.

நட்பு என்பது விலை மதிக்க முடியாத தொன்று. ஒருமித்த இணைப்பால் உருப்பெறுவது நட்பு, சுயநலமிக்கது நட்பு. நல் எண்ணங்களை மனதில் சுமந்து நியமங்களுக்குக் கட்டுப்பட்டு வாழும் ஒருவனின் நட்பானது என்றென்றும் எல்லோராலும் விரும்பப்படும் நட்பாகும்.

எம்மோடு பழகும் எல்லோரையும் நம் நண்பர்கள் என்று எண்ணிவிடக்கூடாது. அவர்களின் குணங்களை நன்றாக ஆராய்ந்து அவர்கள் நட்புக்கு ஏற்றவர்கள் தானா என்பதைத் தெளிவுபடுத்திக் கொண்ட பிறகே அவர்களுடன் நட்புக் கொள்ள வேண்டும். அவ்வாறன்றி ஆராயாமல் நட்பு கொண்டால் அந்த நட்பு துயரத்தில் தான் முடியும். அந்தத் துயரமே மரணத்தை தரத்தக்க துயரமாகவும் ஆகிவிடும். ஆகவே ஒருவருடன் நட்புக் கொள்ளும் போது அவற்றைப் பற்றி எல்லா விவரங்களையும் ஆராய்ந்த பிறகே நட்புக் கொள்ள வேண்டும். இதனையே வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி வகுத்த தெய்வப் புலவர் திருவள்ளுவரும்

**ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை**
**கடைமுறை தான் சாந்துயரம் தரும்.**

என்று கூறினார். நமக்கு நண்பர்களாக இருக்கக் கூடியவர் நாம் தீய வழியில் செல்லும் போது அதிலிருந்து நம்மை விலக்கி உலக முறைக்கு ஏற்றபடி புத்தி சொல்லி நல்ல பாதையில் அமைத்துச் செல்பவர்களாக இருக்க வேண்டும். சிலர் ஆசை காட்டித் தீய வழிகளுக்கு நம்மைத் தூண்டி விடுவார்கள்.

அவர்களால் ஏற்படும் துன்பத்துக்கு அளவேயில்லை. உலகின் நடைமுறைப் போக்குகளை அறிந்து தீயவைகளை விலக்கி நல்ல பாதையில் நாம் செல்வதற்கு நம்மைக் கண்டிக்கும் நண்பர்களும் இருப்பார்கள். அவர்களுடைய செய்கை நமக்கு கோபமூட்டலாம். நாளடைவில் அவர்களின் கண்டிப்பு நல்ல பாதையில் நாம் செல்வதற்கு வழிவகுக்கும். எனவே அத்தகைய நண்பர்கள் எமக்கு வழிகாட்டிய நல்ல நண்பர்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நமக்குக் கெடுதல் வரும்போது நம்மைக் கைவிட்டு விடுபவர்களின் நட்பானது நாம் மரணம் அடையும் காலத்தில் கூட நம் முடைய உள்ளத்தைச் சுட்டுக் கொண்டேயிருக்கும். நாம் நன்றாக வாழும் போது நம்மைச் சூழ்ந்து கொண்டு உறவு கொண்டாடுவார்கள். நட்பு பாராட்டுவார்கள். ஆனால் நமக்கு கஷ்டம் வரும் போது அதுபற்றியொன்றே சுமும்கவலைப்படாமல் எம்மைவிட்டு விலகி தூர ஓடி விடுவார்கள்.

இத்தகையவர்களின் நட்பு நெஞ்சத்தைச் சுடுகின்ற நட்பு. இவர்கள் சந்தர்ப்பவாதிகள். தடாகத்தில் நீர்வற்றியவுடன் தடாகத்தை விட்டு பறந்து செல்லும் பறவைகளைப் போன்ற இவர்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் அருகில் வைத்துக் கொள்ளக் கூடாது. ஆபத்துக் காலத்தில் உதவாதவர்களின் நட்பு சாகும் காலத்தில் நினைக்கும் போதுகூடத் துன்பத்தையே தரும். ஒருவரைப் பார்க்கும் போது அவர் நம்மைப் பார்த்துச் சிரித்துப் பேசுகின்றார் என்பதாலேயே அவர் நமக்கு நண்பராகி விடமாட்டார். வாய் சிரிக்கலாம். மனதில் நட்பு இல்லாமலும் இருக்கும். ஆகவே சிரித்துப் பேசுபவர்கள் எல்லோரும் நண்பர்களாகி விடமாட்டார்கள். உள்ளத்தால் நேசிப்பவரே உண்மையான நண்பராவர். அத்தகைய நண்பர்கள் போலியாக பழக மாட்டார்கள். சிரித்துப் பேசி எம்மை ஏமாற்றமாட்டார்கள். நடிப்பின் மூலம் நண்பர்களாகி விடமாட்டார்கள்.

**உடுக்கை இழந்தவன் கைபோலாங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு**

என்ற சான்றோரின் கூற்றுக்கிணங்க நடந்து கொள்பவர்கள் உள்ளத்தால் நேசிப்பவரே உண்மையான நண்பராவர். அத்தகைய நண்பர்கள் போலியாக பழக மாட்டார்கள். சிரித்துப்பேசி எம்மை ஏமாற்றமாட்டார்கள். நடிப்பின் மூலம் நண்பர்களாகக் காட்டி நம் மனம் கவர முயற்சி செய்யமாட்டார்கள். நண்பர்களைக் கண்ட மாத்திரத்தில் அவர்களுடைய உள்ளம் ஓடி உறவாடும். மனதால் நேசிப்பவர்கள் அவர்கள். அவர்களுடைய நட்பே உண்மையானதாக இருக்கும். நிலைத்து நீடிக்கும். ஆகவே சிரித்துப் பேசுவதால் ஒருவரை நண்பர் என்று எண்ணி விடக்கூடாது. அன்பாய் உள்ளம் கலந்து உறவாடுபவர்களே உண்மையான நண்பர்கள். இதனையே வள்ளுவரும்

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு.**

என்றார். அன்பாய் உள்ளம்கலந்து உறவாடுகின்றவர்களே உண்மையாக நண்பர்கள் என்றார்.

ஒரு நல்ல புத்தகத்தை ஒரு முறைக்குப் பல முறை விரும்பிப் படிக்கின்றோம். காரணம் என்ன? ஒவ்வொரு முறை படிக்கும் போதும் அதில் புதுப்புது விடயங்கள் தோன்றி நமக்கு இன்பமூட்டும். அதனால் மனதுக்கு உற்சாகம் தேவைப்படும் போதெல்லாம் அந்தப் புத்தகத்தை எடுத்துப் படிக்கின்றோம். அதைப் போற்றிப் பாதுகாக்கின்றோம். பண்புடையவர்கள் நட்பும் அது போன்றது தான். அவர்களோடு பழகப் பழக நமக்கு ஒரு நிம்மதி கிடைக்கிறது. மனமகிழ்ச்சி ஏற்படுகிறது. அவர்களை நெருக்கமாக்கிக் கொள்ளத் துடிக்கின்றோம். எண்ணங்கள் இணக்கமாக இருந்தால் நட்பு எந்த நிலையிலும் உறுதியாக இருக்கும்.

எனவே, நம்மைப் புரிந்தவர் நட்பு துன்பத்தில் உதவுவோர் நட்பு, ஆபத்தில் கைகொடுப்போர் நட்பு, எமக்கு ஒரு துயர் வந்த போது தமக்கே அந்த துயர் வந்ததாக எண்ணித் துயருறுவோர் நட்பு, தன்னையே தியாகம் செய்து காப்பாற்றுவோர் நட்பு, காலம் காலமாக உள்ளத்தில் மாறாத உத்தம நட்பாகும். வெளி வேடத்தால் நட்பு என்னும் பெயரில் தம் சுயநலத்துக்காக கொள்ளும் நட்பு ஒருவர் வாழ்வையே அழித்துவிடும்.

எனவே ஆய்ந்தறிந்து என்றும் நட்புக் கொள்ளல் வேண்டும். உயிர் காப்பான் தோழன் என்ற உயர்ந்த வாசகத்தை தாமதாக்கி வாழும் உத்தமர் நட்டை நாமும் தேடுவோம். நிம்மதியைத் தேடுவோம் நட்பு என்பது நல்ல உள்ளங்களின் சங்கமம். எனவே நாமும் அனைவருடனும் நட்புடன் வாழ முயற்சிப்போம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உலகைப் பிரிக்கும் எல்லைகள்

சு.தரண்யா, 7 ஜி,
கொக்குவில் இந்துக் கல்லூரி

1. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான எல்லைக்கோடு-மக்மோகன்கோடு
2. ஜேர்மனியையும் போலந்தையும் பிரிக்கும் எல்லைக்கோடு-ஒடின் ன் பாற்க் கோடு
3. ரஷ்யாவையும் ஃபின்னிஷ் பார் டை யும் பிரிக்கும் கோடு-மேனர் ஹிம் கோடு
4. இந்தியாவுக்கும் (தற்போதைய பாகிஸ்தான் பகுதி) ஆப்கானிஸ்தானுக்கும் இடையேயான எல்லைக் கோடு- டூரான்ட் கோடு
5. ஜேர்மனியை கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனி என பிரிக்கும் சுவர்-பேர்லின் சுவர்

## நீரிணைகள்


டோவர் நீரிணை
பிரான்சிலிருந்து பிரித்தானியாவுக்கு




பனாமா நீரிணை
வட ஆபிரிக்காவிலிருந்து தென் அமெரிக்காவுக்கு



பாக்குநீரிணை
இந்தியாவிலிருந்து இலங்கைக்கு



# ஔவியம் பேசேல்



ஒருவனிடத்தில் உள்ள கல்வி செல்வம் செல்வாக்கு குணம் முதலியவற்றை கண்டபோது அவன் மேல் பொறாமை கொண்டு அவனை சீரழித்து இழிவாகப் பேசுதல் மிகுந்த தீமையை விளைவிக்கும்.

இந்தச் செய்கையால் இம்மையில் பாவமும் மறுமையில் நரகமும் உண்டாகும் என்பார்கள். பொறாமைப் பேய் பிடித்தவர்கள் பிறருக்கு தீங்கிழைப்பதோடு தமக்கும் தீமையை உண்டாக்கிக் கொள்வார்கள். 'ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு'என்று இதன் தீமையை ஔவையார் எடுத்துக் காட்டினார்.

பாண்டுவின் மனைவியாகிய குந்தி ஆண் குழந்தை பெற்ற விவரம் கேள்விப்பட்டு அஸ்தினாபுரத்தின் அரசனான திருதராஷ்டிரன் மனைவி காந்தாரி குந்தியின் மேல் பொறாமை கொண்டு தான் பல வருடங்களாக சுமந்திருந்த கர்ப்பத்தை சிதைத்துக்கொண்டாள்.

அப்படி அவள் செய்யாதிருந்தால் அவள் வயிற்றில் பிறக்கும் குழந்தை ஏகசக்ராதிபதியாய் மூன்று உலகங்களிலும் தன்னாண்மை செலுத்தி அரசாட்சி செய்யும் மகாசூரனாயிருந்திருப்பான்.அப்படி இல்லாமல் சிதைந்த கர்ப்பம் வேதவியாசர் அருளால் ஒருவாறு கூடப்பெற்று அதனால் பொறாமைகிருப்பிடமான துரியோதனன் பிறந்தான்.

துரியோதனன் செல்வத்திலும் சௌகர்யத்திலும் மிகுந்து விளங்கும் பாண்டவர் மேல் பொறாமை கொண்டு அவர்களை வஞ்சகமாக அழைத்து மாயச்சூதாடி நாடு நகரம் முதலியவற்றை கவர்ந்து கொண்டதுமன்றி திரௌபதியை நடுச்சபையில் இழுத்து வந்து துகிலுரிந்து மானபங்கமும் செய்தான்.அதனால் துரியோதனன் மகாபாரத யுத்தத்தில் புத்திர மித்திர பந்து வர்க்கங்களோடு மரணமடைந்தது மட்டுமல்லாது நரக வேதனை களையும் அனுபவித்தான் என்று நூல்கள் கூறுகின்றன.

இதனால் பொறாமையால் இம்மை, மறுமை இரண்டிலும் கேடு உண்டாகும் என்பது தெளிவாய் விளங்குகிறது. ஔவியம் பேசேல் என்பதற்கு வீண் பெருமை பேசக்கூடாது என்றும் பொருள் கூறுவோரும் உண்டு.

# பொது அறிவு

★ லீப்னிட்ஸ் மலைகள் சந்திரனில் எந்தப் பகுதியில் உள்ளது?
சந்திரனின் தென்துருவப் பகுதியில்
★ பாகிஸ்தானின் தலை நகர் எது?
இஸ்லாமபாத்
★ தென்னிந்தியாவின் மான்செஸ்டர் எது?
கோயம்புத்தூர்
★ உலகில் மிக நீண்ட காலம் ஆட்சி புரிந்த பெண் பிரதமர் யார்?
இந்திராகாந்தி
★ ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலக மொழிகள் எவை?
அராபிக், சீனம், ஆங்கிலம், பிரெஞ், ருஷ்யன் மற்றும் ஸ்பானிஷ்.

நா.ஸ்ரீவித்தியாதரன், தரம் 7பி,
யாழ்ப்பாணக் கல்லூரி.

மனித உடலில் உள்ள மிக நீளமான எலும்பு?
தொடை எலும்பு
சுறா, திமிங்கிலம் குட்டி போடும் மீனினம்
முதலைக்கு 68 பற்கள் உண்டு.
பூனை ஒரு நாளில் 16 மணி நேரம் தூங்கும்
மனித மரபணு தொகுப்பில் 310 கோடி உட்பிரிவுகள் உள்ளன.
கர்ப்பிணிகளுக்கு தேவையான விற்றமின் அஸ்கார்பிக் அமிலம்.
ஒரு வருடத்தில் மனிதனின் இதயம் 35 மில்லியன் தடவை துடிக்கிறது.
(1 மில்லியன் என்பது 10 இலட்சம்)

சிந்து சிவதாஸ்,
சுதுமலை




# நோபல் பரிசு

" அல்பிரெட் நோபல் என்பவரினால் 1901 ஆம் ஆண்டு இப்பரிசு உருவாக்கப்பட்டது. பௌதிகம், இரசாயனம், மருத்துவம், இலக்கியம், சமாதானம், பொருளாதாரம் ஆகிய ஆறு துறைகளில் அந்த ஆண்டு அளப்பெரிய சேவை புரிந்தவர்களுக்கு இந்தப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் 10 ஆம் திகதி வழங்கப்படும்.

நோபல் [1833-96] சுவீடன் தேசவிஞ்ஞானி, பிரம்மச்சாரி 1866 இல் டைனமைற்றைக் கண்டறிந்தார். இந்தப் பரிசு ஒன்றின் பெறுமதி 6.5 மில்லியன் குறோனர் [7 கோடி] ஆகும். டாக்டர் லின்னஸ் கார்ல் போலிங் என்பவர் 1954 இல் இரசாயனத் துறைக்கும், 1962 இல் பௌதிகத் துறைக்கும் இவரது கணவர் பியரி கியூரி 1911 இல் இரசாயனத் துறைக்கான பரிசிலையும் பெற்றுள்ளனர். 1979 இல் சமாதானத்திற்காக அன்னை திரேசா நோபல் பரிசு பெற்றார்.


செ. டானியல் சுபர்சன்
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.

# அறிந்து கொள்ளுவோம்

இலங்கையின் பழைய பெயர்கள்-செரண்டிப் சிலோன், தப்ரோபேன், ஈழம், இலங்காபுரி
இலங்கையின் முதலாவது பிரதமர்-டி.எஸ்.சேனநாயக்க
இலங்கையில் தூங்காத நகரம் -தம்புள்ள
இலங்கையின் புனித நகரம்-கண்டி, அனுராதபுரம்
இலங்கையின் சமாதான நகரம்-திருகோணமலை
இலங்கையின் மரபுரிமை நகரம்-கண்டி
கிழக்கு இலங்கையின் சொர்க்கம்-பாசிக்குடா (மட்டக்களப்பு)
இலங்கையின் சுவிற்சர்லாந்து நகரம்- நுவரெலியா

சி.ஹரிஹரன்
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை

# 'வ' எழுதி முயல், பூனை வரையுங்கள்




உ.சாருமதி, தரம் 1, வட்டு மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லீரல் நோய்க்கான அறிகுறிகள்.......!

- கங்கா



உடலில் உள்ள உறுப்புகளில் கல்லீரல் மிகவும் முக்கியமான ஒரு உறுப்பு. ஒரு வேளை கல்லீரல் சரியாக இயங்காவிட்டால், உடனே அதற்கு சரியான சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.

**வாய் துர்நாற்றம்**

கல்லீரலானது சரியாக இயங்கவில்லையெனில், வாயிலிருந்து கடுமையான நாற்றம் வரும். ஏனெனில் அப்போது உடல் அம்மோனியா அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கும்.

**கருவளையம் மற்றும் சோர்வான கண்கள்**

கல்லீரல் சரியாக இயங்காவிட்டால், சருமத்தில் பாதிப்பு மற்றும் சோர்வு போன்றவை ஏற்படும். அதிலும் குறிப்பாக கண்களைச் சுற்றி கருவளையங்கள் ஏற்பட்டு, சுருக்கங்களோடு காணப்படும்.

**செரிமானப் பிரச்சினை**

கல்லீரலில் கொழுப்பு அதிகம் சேர்ந்திருந்தால், தண்ணீர் கூட சரியாக வெளியேறாமல் இருக்கும். இத்தகைய பிரச்சினை உடலில் தெரிந்தால், அது கல்லீரல் பழுதடைந்துள்ளதற்கான அறிகுறியாகும்.

**வெளுத்த சருமம்**

கல்லீரலில் பாதிப்பு இருந்தால் சில சமயங்களில் சருமத்தில் உள்ள நிறமிகள் நிறமிழந்து, சருமத் தோலானது திட்டுத் திட்டாக ஆங்காங்கு வெள்ளையாகக் காணப்படும்.

**அடர்ந்த நிற சிறுநீர் மற்றும் கழிவுகள்**

உடலில் இருந்து வெளியேறும் கழிவுகள் அடர்ந்த நிறத்தில் இருக்கும். இந்தமாதிரி எப்போதாவது ஏற்பட்டால், அதற்கு உடலில் வறட்சி என்று கருத முடியும். ஆனால் தொடர்ச்சியாக இருந்தால், அது கல்லீரல் பழுதடைந்ததற்கான அறிகுறியாகும்.

**மஞ்சள் நிறக் கண்கள்**

கண்ணில் உள்ள வெள்ளைப் பகுதி மஞ்சள் நிறத்தில் காணப்பட்டால் அது மஞ்சள் காமாலையாக இருக்கலாம். அதாவது கல்லீரலில் தொற்றுநோய் ஏற்பட்டுள்ளது. எனவே அதற்கேற்ப முறையான சிகிச்சை செய்ய வேண்டும்.

**வாய் கசப்பு**

கல்லீரலில் பைல் என்னும் நொதியானது உற்பத்தி செய்யப்படும். அந்த பைல் நொதி தான் கசப்பான சுவையை ஏற்படுத்துகிறது. எனவே வாயில் அதிக கசப்பு இருந்தால், கல்லீரலில் பாதிக்கப்பட்டுள்ளது என்று கருதமுடியும்



- மயூ

# அதிகமாக கோபப்படும் மீன்..!

மீன் வகைகளில் ஒன்று sarcastic fringeheads என்ற பெயரைக் கொண்ட மீன் ஆகும். மிகவும் ஆழமான பகுதியில் காணப்படும் இந்த மீன் மிகவும் கோபம் கொண்டதாகும்.

sarcastic fringehead பெரிய வாய் மற்றும் ஆக்கிரமிப்பு பிராந்திய நடத்தை கொண்ட ஒரு மூர்க்கமான மீன். இரண்டு மீன்கள் பிராந்திய போர் ஒன்றின்போது அவர்கள் ஒருவருக்கொருவர் எதிராக விரிவடைந்து வாய் அழுத்தி மல்யுத்தம் செய்து ஆதிக்கத்தை நிறுவி அதில் பெரிய மீன் தான் என நிரூபிக்கிறது.

இந்த மீன் 30 சென்ரி மீற்றர் அளவுடையது. பெரும் pectoral துடுப்புகள் மற்றும் குறைந்த இடுப்புத் துடுப்புகள் பெரும்பாலும் இதற்கு உள்ளன. உயர் அழுக்கத்தை உடல்களில் தாங்கி கொள்ளக் கூடியது. விலாங்கு போன்ற தோற்றம் அளிக்கக் கூடியது ஆகும்.

சான் பிரான்சிஸ்கோ, கலிபோர்னியா, மத்திய பாஜா கலிபோர்னியா, வட அமெரிக்கா கடற்கரை , பசுபிக் போன்ற இடங்களில் காணப்படுகிறது. இந்த மீன் இனம் வரை 3 73 மீற்றர் (9.8 முதல் 240 அடி) ஆழப்பகுதியில் காணப்படும்.

# ஆதிகால வணிகத்தில் தமி... பயன்படுத்திய நாணயங்க...

மனித நாகரிகத்தின் தொடக்க காலத்தில் உலகத்தின் அனைத்து பகுதிகளிலும் ஒரு ... வதற்கும், விற்பதற்கும் பண்டமாற்று முறைதான் இருந்து வந்தது. இம்முறையில் ஒரு... நெல்லைக் கொடுத்து மற்றொருவரிடமிருந்த பருப்பை வாங்கினார். பிறிதொருவர் தம்மி... கொடுத்து பால், தயிர் போன்றவற்றைப் பிறரிடமிருந்து வாங்கினர். இம்முறை... பொருள்களைப் பண்டமாற்றம் செய்கையில் அவர்களுக்கு இடர்பாடு ஏற்பட்டது.



எனவே ஒரு பொருளை மையப்பொருளாகக் கொள்ளத் திட்டமிட்டனர். ஆரம்பத்தில் மாடு அமையப் பொருளாக இருந்தது. இந்தக் காலக் கட்டம் அரப்பன்நாகரிக காலமாக இருக்கலாம். அரப்பன் களிமண் முத்திரைத் தகடுகள் கூட அந்தக்கால நாணயங்களாக இருக்கலாம். ஏனெனில் அரப்பன் களிமண் தகடுகளில் காளை உருவம்தான் மிகப்பெரியதாகக் காணப்படுகிறது.

மாடு மிகுந்தளவில் பொருள்கள் வாங்க மட்டுமே பயன்பட்டது. குறைந்தளவில் பொருள்கள் வாங்குவதில் இடர்பாடு ஏற்பட்டது. ஆதலால் - கோழிகளை- மையப் பொருளாகப் பின்னாளில் பயன்படுத்தினர்.

.-மிது



# ஹிட்லரையே ...

# ஒரு த...

எத்தனையோ வரலாற்று உண்மைகள் உலகில் மறைக்கப்பட்டிருப்பது மறுக்க முடியாத ஒன்று. அதிலும் தமிழினத்தின் வரலாறுகளைக் கேட்பார் அற்றதால் விழுங்கிக் கொண்டிருக்கிறது இந்த உலகு. உலக சர்வாதிகாரியான ஹிட்லரையே மன்னிப்புக் கோரச்செய்தவன், அடிபணியவைத்தவன் ஒருவன் உள்ளான். அதனை நம்புவீர்களா? அதுவும் அவன் ஒரு தமிழன் என்பதை எத்தனை பேர் அறிவீர்கள். அந்த வீரன் வேறுயாருமல்லன். அவன் தான் மாவீரன் செண்பகராமன். மாவீரன் செண்பகராமனை எத்தனை பேர் அறிவீர்கள்? ஒரு வேடிக்கையான விடயம் தமிழக அரசே 2009 ஆம் ஆண்டு தான் மாவீரன் செண்பகராமனை இனங்கண்டு கொண்டு அவரை கௌரவித்து சிலை ஒன்றை நிறுவியது.

இத்தனைக்கும் செண்பகராமன் ஒரு சுதந்திர போராட்டத் தியாகி என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய சுதந்திரத்திற்காய் போர்க்களமாடிய வீரர்கள் யார் என்று எமது தமிழ் சகோதரர்களிடம் ஒரு கேள்வி கேட்டால்; உடனே சுபாஸ் சந்திர போஸ், பகத்சிங் என ஒரு பட்டியலைத் தருவார்கள். அவர்களிடம் நான் கேட்கிறேன் தமிழர்கள் ஒருவரும் போராடவில்லையா? அல்லது அவர்களின் போராட்டத்தில் வீரியம் இல்லையா? எண்ணற்ற தமிழ் மறவர்கள் விடுதலைக்காக வீரகாவியமானார்கள். வெள்ளையனின் பீரங்கிகளுக்கும், துப்பாக்கிகளுக்கும் முன்னால் வாளும் வேலும் கொண்டு போராடினால் சாவு நிச்சயம் என்று தெரிந்தும்; அடிமையாக வாழ்வதைவிட செத்துமடிவதே மேல் என்று போராடிய வீரபாண்டிய கட்டப்பொம்மன், தீரன் சின்ன மலை, வேலு நாச்சியார் போன்ற எண்ணற்ற தமிழ் மறவர்களையெல்லாம் பார்க்க உங்களுக்கு வீரர்களாக தெரியவில்லையா? இப்படி தமிழர்கள் இருப்பதால் தான் தமிழினத்தின் வரலாறு மண்ணோடு மண்ணாகிப் போகிறது. தமிழர்களாகிய நாங்கள் கூட தமிழ் வீரர்களை நினைவுகூரா விட்டால் வேறு எவன் நினைவுகூருவான்? கேரளாவிலோ அல்லது ஆந்திராவிலோ போய் கேட்டுப்பாருங்கள் வீரபாண்டிய கட்டப்பொம்மன் யார் என்று? ஒரு பத்து பேராவது சரியான பதில் தருவார்களா? இல்லை நாங்கள் தான் எங்கள் வரலாற்றை பாதுகாக்கவேண்டும். இல்லையென்றால் காலம் எம் வரலாற்றை மறந்துவிடும். இன்னும் ஓர் ஆச்சரியத்தை உங்களுக்கு தருகிறேன்.

இந்தியக் குடியரசின் உயிர் மூச்சாகத் திகழும் ஜெய்ஹிந்த் என்னும் தாரக மந்திரத்தை, முதன் முதலில் உச்சரித்தவர் ... சுபாஸ் சந்திரபோஸ் என்று தான் பலர் கருதுகின்றனர். அவர் நிறுவிய ...த்தின் போர் முழக்கம் ஜெய்ஹிந்த் என்... அவருக்கு முன்பே ஜெய்ஹிந்த் மந்திர... தேசிய ராணுவத்தை உருவாக்கிய பெ... என்ற ஒரு தமிழனுக்குத்தான் உரியதென்... கிறதல்லவா? யார் அந்த செண்பகராம...

பாரத மாதாவின் அடிமை விலங்குக... விட வேண்டும் என இந்திய மக்கள் அ... ஷத்தால் குமுறிக் கொந்தளித்துக் கொ... பால்மணம் மாறாத பள்ளி மாணவர்... தில் குதித்து விட்டனர். பாரதத்தைக் காக்... ரக் கணக்கான பள்ளி மாணவர்களுக்... விளங்கினான் பதினைந்து வயது சிறுவ... மண் பெற்றெடுத்த நாயகன் செண்... திறமைகளையும் ஆற்றலையும் கண்டு ... போனார்கள். சிறிது காலம் தலைமறைவ... பந்தும்; அதனால் ஜேர்மனிக்கு பயணமான... அதிர்ச்சி இந்த சிறுவனால் இது எப்படி ...

ஜேர்மனியிலே உயர்கல்விகளை... கலாநிதி பட்டம் பெற்றுக்கொண்ட... மிளிரத்தொடங்கினார். ஜெர்மனி... அப்போதிருந்த கெய்சர் மன்னன், தன்... செண்பகராமனை ஏற்றுக்கொண்ட... விளக்கம் தேவையில்லையல்லவா? ... கலந்து கொள்ளாத ராஜாங்க வைபவ... மனியில் கிடையாதென்ற நிலைமை...

தாயகத்தை விட்டு வெளியேறியதன்... தானே நிறைவேற வேண்டும் என்ற... தான். இந்திய தேசியப் போராட்டத்... நிகழ்த்தி சரமாரியான சொற்பொழி... இவை ஜெர்மனியில் எதிரொலியப்பட்... ராமனே இவற்றுக்கும் தலைமை ... குழுவின் உதவியோடு, ஐரோப்பி... இந்தியாவைப் பற்றி நிலவிய தவறான... தவிடுபொடியாக்கிய செண்பகராம... அந்தக்குழுவை வெற்றிகரமாகப் பய...

தனது எண்ணங்களை ஐரோப்பிய... வாக எடுத்துக் கூறுவதற்காக டாக்டர் ... புரோ இந்தியா ( PRO INDIA ) எ... ரிகை இந்தியாவை நிர்மாணிக்கப் போகு...

**ஹிட்லர் மன்னிப்பு...**

ஒருநாள் டாக்டர் செண்பகராமனும், ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

…ர்
…ள

…ாருளை வாங்கு
… தம்மிடமிருந்த
…மிருந்த மீனைக்
…ல் மிகுதியான



# பிரிந்தன காதல் கிளிகள்
## சேர்த்து வைத்தது நீதிமன்றம்


பாலா

பங்களாதேஷில் காதலனிடமிருந்து பிரிக்கப்பட்ட கிளி, நீதிமன்றத்தின் மூலம் மறுபடியும் காதலனுடன் இணைந்துள்ளது. பங்களாதேஷைச் சேர்ந்தவர் இக்ரம் சலீம். அவர் பிரேசில் நாட்டைச் சேர்ந்த பஞ்சவர்ணக் கிளிகளை வளர்த்து வந்தார். வாடகை வீட்டில் அந்தக் கிளிகளை வளர்க்க போதிய இடவசதி இல்லாமை, சிறிது காலத்துக்கு டாகா நகரில் உள்ள தனியார் உயிரியல் பூங்காவில் விட்டிருந்தார். உயிரியல் பூங்காவில் ஆண் பஞ்ச வர்ணக் கிளியுடன், அந்த ராணி கிளிக்குத் தொடர்பு ஏற்பட்டு மூன்று குஞ்சுகள் உருவாகின. ஒரு கிளியை உயிரியல் பூங்கா உரிமையாளர் விலை கொடுத்து வாங்கிக் கொண்டார்.

இதற்கிடையே வேறு வீட்டுக்குக் குடிபெயர்ந்த சலீம் தனது செல்ல பெண் கிளி ராணியை உயிரியல் பூங்காவிலிருந்து அழைத்து வந்தார். ஆனால் தனது காதலனை விட்டுப் பிரிந்திருக்க முடியாமல் கடந்த ஒருவாரமாக அது பட்டினி கிடந்தது.

உயிரியல் பூங்கா உரிமையாளர் அப்துல் வதூத், ஆண் கிளியைக் கொடுக்க மறுத்து விட்டார். இது தொடர்பாக சலீம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். ஆண் கிளியைப் பிரிந்திருக்கும் ராணி, பட்டினி கிடப்பதால் அதன் இணையுடன் சேர்ந்து வாழ உத்தரவிட வேண்டும் என கோரியிருந்தார். அந்த மனுவை விசாரித்த நீதிபதி உயிரியல் பூங்காவில் உள்ள ஆண் கிளியை, சலீமிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். இதன் மூலம் இரண்டு கிளிகளும் ஒன்று சேர்ந்துள்ளன.

# …அடிபணிய வைத்த
# …மிழன்


- இணையவன்

பாரத மாதாவின் அடிமை விலங்குகளை அடித்து நொருக்கிவிட வேண்டும் என இந்திய மக்கள் அத்தனைபேரும் ஆக்ரோஷத்தால் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்த காலம் அது. பால்மணம் மாறாத பள்ளி மாணவர்கள் கூட, போராட்டத்தில் குதித்து விட்டனர். பாரதத்தைக் காக்கப் புறப்பட்ட பல்லாயிரக் கணக்கான பள்ளி மாணவர்களுக்கு, ஒரு தலைவனாய் விளங்கினான் பதினைந்து வயது சிறுவன். அவன் தான் நாஞ்சில் மண் பெற்றெடுத்த நாயகன் செண்பகராமன். அவரது திறமைகளையும் ஆற்றலையும் கண்டு வெள்ளையர்கள் வியந்து போனார்கள்.

…திய தேசிய இராணு
…உண்மையே. ஆனால்
…த உச்சரித்து இந்திய
…மை செண்பகராமன்
…ம், ஆச்சரியமாக இருக்
…என்று பார்ப்போம்.
…ள அடித்து நொருக்கி
…னைபேரும் ஆக்ரோ
…டிருந்த காலம் அது.
… கூட, போராட்டத்
… புறப்பட்ட பல்லாயி
… ஒரு தலைவனாய்
…அவன் தான் நாஞ்சில்
…கராமன். இவனது
…ள்ளையர்கள் வியந்து
…வாழவேண்டிய நிர்ப்
… ஆங்கிலேயர்களுக்கு
…தியாம்? வியந்தார்கள்.
…யல்லாம் முடித்து
… அறிவிலே சிறந்து
… சக்கரவர்த்தியாக
…ந்தரங்க நண்பனாக
…என்றால், மேலும்
…டர் செண்பகராமன்
…ா, விருந்தோ ஜெர்
…ருவாகியது.
…நாக்கமே, இனிமேற்
…உழைக்க ஆரம்பித்
… பற்றி ஜெர்மனில்
…ளைத் தொடர்ந்து,
…. டாக்டர் செண்பக
…ங்கினார். இந்தக்
… நாடுகளிடையே,
…பிப்பிராயங்களைத்
… இந்திய நலனுக்கு
…டுத்தினார்.
…டுகளுக்குத் தெளி
…ண்பகராமன் நடத்திய
…ம் ஆங்கிலப் பத்தி
…ற்சிக் குரலாகியது.
…ரல்
…லரும் அவருடைய

சகாக்களும் ஓர் இடத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது அகங்காரம் பிடித்த ஹிட்லர், ஆணவத்தோடு இந்தியாவையும், இந்தியத் தலைவர்களையும் பற்றி இழிவாகப் பேசினார்.

''சுதந்திரம் பெறக்கூடிய யோக்கியதை இந்தியர்களுக்கு கிடையாது என்றாராம் ஹிட்லர். இதைக் கேட்டதும் கொதித்தெழுந்து, சிங்கம் போல் கர்ஜித்தார் செண்பகராமன். இந்தியாவின் பாரம்பரிய பெருமை பற்றியும் இந்தியத் தலைவர்களின் மேதா விலாசம் பற்றியும் ஆணித்தரமான வாதங்களை எடுத்து ஹிட்லர் முன் விளக்கினார். டாக்டரின் கர்ஜனையைக் கேட்ட ஹிட்லர் உண்மையிலேயே ஸ்தம்பித்து விட்டார். டாக்டர் செண்பகராமனின் மனோசக்தி முன், தன்னால் நிற்க முடியாது அடங்கியதோடு, தான் செய்த பிழையையும் உணர்ந்து உடனே செண்பகராமனிடம் மன்னிப்புக் கோரினார். வார்த்தையளவில் மன்னிப்புக் கேட்டால் போதாது எழுத்திலும்; மன்னிப்பைத் தரவேண்டும் என்று வாதாடினார் பிடிவாதக்காரரான டாக்டர் செண்பகராமன். அதன்படியே, எழுத்தில் மன்னிப்புக் கோரினார்.

(வளரும்)

# பல மில்லியன் வருடங்களாக பூமியில் வாழும் குதிரை நண்டு...

பெண் குதிரை நண்டுகள் ஒரே நேரத்தில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் முட்டைகள் வரை இடுகிறது. இனச்சேர்க்கையின் பின்னர், பெண் குதிரை நண்டு மணலில் 15-20 செ.மீ. (6-8 இல்) ஆழத்தில் (பொந்துகள்) ஒரு கூட்டை அமைக்கும்.


குதிரை நண்டு, 'கிங் நண்டு' என்றும் இது அழைக்கப்படுகிறது. இது பல மில்லியன் வருடங் களாக பூமியில் வாழ்கிறது, இது ஒரு ''நாடு படிமம்' என்று அழைக்கப்படுகிறது. தட்பவெப்பமான கடல் தரையில் காணப்படும். இது நண்டு என்று அழைக் கப்பட்டாலும், தேள் அல்லது சிலந்தி குடும்பத்தைச் சேர்ந்தவை. குதிரை நண்டில் நான்கு இனங்கள் உள்ளன. மூன்று இனங்கள் இந்தியா, ஜப்பான், மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளைச் சூழவுள்ள நீரில் வாழுகின்றன.

நான்காவது இனம், பொலிஃபெமஸ். வடக்கு மெயின் யுக்காட்டன் தீபகற்பம் வட அமெரிக்கா கிழக்கு கடற்கரை கடல் பகுதியில் வாழ்கிறது. ஆண் குதிரை நண்டு பெண் குதிரை நண்டை விட சிறியதாக இருக்கும். இது 2 அடி நீளம் இருக்கும். உயிருடன் இருக்கும்போது அது பழுப்பு, பச்சை நிறத்தில் இருக்கும். அது இறந்த பின்னர் கரும் பழுப்பு நிறமாக இருக்கும். குதிரை நண்டின் தோற்றம் 500 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததற்கு மிகவும் சிறிதளவே மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று கருதப்படுகிறது. அவை அடிவயிற்று கால்களின் இறுதி ஜோடியில் இணைக்கப்பட்ட செல்கள் மூலம் சுவாசிக்கிறன.

வாய், உடலின் மையத்தில் உள்ளது. கண்கள் ஷெல்லின் முன் பகுதியின் மேல் உள்ளன. குதிரை நண்டு ஒரு கடினமான வெளிப்புற ஷெல், ஐந்து சோடி கால்கள் உள்ளன. குதிரை நண்டுக்கு மாறாக ஒரு தற்காப்பு ஆயுதமாக விடா நீச்சல் அதே நேரத்தில் திசை மாற்றப் பயன்படுத்தும் ஒரு நீண்ட, மெல்லிய வால் கொண்டிருக்கிறது. குதிரை நண்டுகள் பாலியல் முதிர்ச்சி அடைய 9-10 ஆண்டுகள் ஆகின்றன. 16-17 ஆண்டு வரை உயிர் வாழும். அவைகள் 2 அடி மற்றும் 10 பவுண்டுகள் எடை வரை வளரும். அவைகள் பெரும்பாலும் கடலின் கீழ்ப்பகுதியில் இருக்கும். குதிரை நண்டுகள் இருளில் வெளியில் உணவு தேடும். புலால் உண்ணுகிற விலங்குகளைப்போல், குதிரை நண்டுகள் கடல் புழுக்கள், சிறிய மெல்லுடலிகள் மற்றும் ஓட்டுமீன்கள் உட்பட சாப்பிடுகின்றன.

பெண் குதிரை நண்டுகள் ஒரே நேரத்தில் 60 ஆயிரம், முதல் ஒரு லட்சத்து 20 ஆயிரம் முட்டைகள் வரை இடுகிறது. இனச்சேர்க்கையின் பின்னர், பெண் குதிரை நண்டு மணலில் 15-20 செ.மீ. (6-8 இல்) ஆழத்தில் (பொந்துகள்) ஒரு கூட்டை அமைக்கும். அந்தக் கூடுகளைப் பொதுவாக கடற்கரை, குறைந்த மற்றும் உயர் அலைகளிடையே அமைக்கிறது. சில பகுதிகளில் குதிரை நண்டு நீர் மாசுபடுத்தல் மற்றும் அதிகமான மீன்பிடித்தல் அதிகளவில் பாதிக்கப்பட்ட போதிலும், குதிரை நண்டு இன்னும் உலகின் வெப்பமான கடற்கரைகளில் பரவலாக காணப்படுகிறது.

-றஜி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மற்றவர்களுடன் எப்படிப் பேச வேண்டும்

ஒவ்வொருவருக்கும் உடல் நலம் எவ்வளவு முக்கியமோ, அதே போல் மனநலமும் முக்கியமானதாகும். உடல் நலத்தைப் பாதுகாக்கப் பல்வேறு வழி முறைகள் இருப்பது போல, மனநலத்தைப் பாதுகாக்கவும் பல வழிகள் உள்ளன. அவற்றுள் சிறந்த உரையாடல் முறையும் ஒன்றாகும்.

இன்றைய அவசர உலகில் உணர்வுகள் பாதிக்கப்பட்டு உறவுகள் சிதைவடையும் சந்தர்ப்பங்கள் அதிகம். உறவுகளைப் பாதுகாப்பது என்பது நம் கடமைகளில் ஒன்றாகும். ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் எதற்காகவோ எல்லைமீறியமால் உணர்ச்சி வசப்பட்டுப் பேசிவிடும் போது உறவுகள், நட்புகள் சிதைவடைந்து விரிசல் ஏற்படா வகையில் நடந்து கொள்ள மற்றவர்களுடன் எப்படிப் பேச வேண்டும் என்பதை அறிந்திருத்தல் வேண்டும்.

பிறருடன் ஒருவர் எப்படிப் பேச வேண்டும் என்பதைச் சிறுவயது முதல் பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு எடுத்துரைக்க வேண்டும். "தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை" என்பதற்கு அமைய சிறுபராயத்திலிருந்தே பழக்கவழக்கங்கள் ஊட்டப்படுவது சிறந்ததாகும். அவற்றால் எதிர்காலத்திலும் எதிர்பார்க்கப்படும் விடயங்களை வெற்றிகொள்ள முடியும். பேசும் திறனைக் கற்றுக்கொள்வது இலகுவாக வாழ்வில் வெற்றியடைய வாய்ப்பாக அமையும்.

மாணவர்களைப் பொறுத்தவரை கற்றலில் ஈடுபடும் அதேவேளையில், சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பேச்சுக் கோலங்களையும் கற்றுத் தேர்ச்சி பெற வேண்டும். இதன்மூலம் நீ சொல்லப் போகும் வார்த்தை, மௌனத்தை விட சிறந்ததென்று திடமாகத் தெரியும் வரை வாயைத் திறவாதே என்பதும் விளங்கி நடந்து கொள்ள முடியும்.

மற்றவருடன் பேசுவது எப்படி என்பதனை அறிந்து பேசுவதும் இந்தக் காலத்தின் தேவையாக உள்ளது. கலாசாரத்தைத் தொலைத்துவிட்டு, கலாசாரம் எது எனத் தெரியாது வாழ்பவர்கள் இவற்றையும் அறிந்து ஒழுகுவதன் மூலம் ஆரோக்கியமான , மகிழ்வான , பிரச்சினைகளற்ற குடும்பம், சமுதாயத்தை உருவாக்க முடியும்.



- ★ கடவுளிடம் நன்றியுணர்வுடன் பேசுங்கள்
- ★ தந்தையிடம் உள்ளவாறு பேசுங்கள்.
- ★ தாயிடம் அன்பாகப் பேசுங்கள்
- ★ துணைவியிடம், கணவனிடம் உண்மையாகப் பேசுங்கள்
- ★ குழந்தையிடம் ஆர்வமாகப் பேசுங்கள்.
- ★ சகோதரனிடம் அடக்கத்துடன் பேசுங்கள்.
- ★ சகோதரியிடம் அளவோடு பேசுங்கள்.
- ★ ஆசிரியரிடம், அதிபரிடம் , பெரியோரிடம் பண்பாகப் பேசுங்கள்
- ★ உறவினரிடம் பரிவோடு பேசுங்கள்.
- ★ அதிகாரியிடம் பணிவாகப் பேசுங்கள்.
- ★ நண்பனிடம் உரிமையுடன் பேசுங்கள்.
- ★ வியாபாரியிடம் கறாராகப் பேசுங்கள்.
- ★ அயலவரிடம் அன்னியோன்னியமாகப் பேசுங்கள்.
- ★ தொழிலாளியிடம் மனித நேயத்துடன் பேசுங்கள்.
- ★ ஊரவரிடம் உஷாராகப் பேசுங்கள்.
- ★ சமூகத்தவருடன் சகஜமாகப் பேசுங்கள்.

வாய்ச் சொல்லின் வடு ஆறாது. எனவே அனைவருடனும் புரிந்து பேசுங்கள், புரியும்படி பேசுங்கள். அமைதியாக மரியாதையோடு பணிவுடன் [illegible] நினைத்தால் வாழலாம். வழியா இல்லை பூமியில்..?

■ சி.நற்குணலிங்கம், கரவெட்டி.

# புத்தகசாலை

## நூல்: 20 ஆவது ஆண்டு மலர்

### [ஸ்ரீ பழநி சிக்கனக் கடனுதவுக் கூ.ச.]




சாவகச்சேரி ஸ்ரீ பழநி சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 20 ஆவது ஆண்டு மலர் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மலரைச் சிறப்பிக்கும் வகையில் சங்கத் தலைவரால் சங்கத்தின் வரலாறும் அதன் வளர்ச்சியும் விரிவாக முன்வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட பிரதேச மக்களின் பல்வேறு ஆக்கங்களும் இந்த மலரில் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறிப்பாகச் சர்வதேச கூட்டுறவு ஆண்டு - 2012, வறுமையை ஒழிக்க ஒன்றாக இணைவோம், மாடுவளர்ப்பின் முக்கியத்துவமும் பராமரிப்புத் தேவைகளும், கிராம அபிவிருத்தி, சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களின் தோற்றம் மற்றும் அதன் செயற்பாடுகள் - ஓர் நோக்கு, இலாப நோக்கமற்ற நிறுவனங்கள், வேதமே இந்திய இசையின் நதி மூலம், சிறுவர் உரிமைகள், இலங்கையின் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியும் அண்மைக்காலத்தில் சுற்றுலாப் பயணத் துறைக்கு ஏற்பட்டுள்ள சவால்களும், நீல் ஆம்ஸ்ரோங் [ நிலவில் கால் பதித்த முதல் மனிதன்], பெரியபுராணத்தின் பெருமை போன்ற தலைப்புகளில் கட்டுரைகளும், உறுதி பூணுவோம், சொர்க்கமா, நரகமா சிந்தித்து செயற்படு நேரத்துடன், கூட்டுறவில் கோடி நன்மை போன்ற தலைப்புகளில் கவிதைகளும், அமுதாவின் வாழ்வில் வசந்தம் எனும் தலைப்பில் சிறுகதை போன்ற பயனுள்ள ஆக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை சங்க உறுப்பினர்கள், கணக்காய்வு குழு - 2012, மலர் குழுவினர்கள் ஆகியோரின் வர்ணப் புகைப்படங்களும் கடந்த 20 வருடங்களில் சங்கத்தை வழி நடத்திய நிர்வாக சபை உறுப்பினர்களின் விபரங்கள், கணக்காய்வு விபரங்கள், சங்கத்தால் செயற்படுத்தப்பட்ட நிகழ்வுகளின் தொகுப்பு போன்ற தகவல்களும் படங்களுடன் விளக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நூல்: மலரும் நினைவுகள்




46 சிறுகதைகளைத் தாங்கி வெளியாகியுள்ளது மலரும் நினைவுகள் என்னும் சிறுகதைத் தொகுப்பு. உரும்பிராயைச் சேர்ந்த தவபாக்கியம் கிருஷ்ணராஜா இதனை ஆக்கியுள்ளார்.

46 சிறுகதைகளும் 46 குண சித்திரங்களை வெளிக்காட்டும் வகையில் உள்ளன. தனது உடன் பிறப்புக்குச் சமர்ப்பணமாக இந்த நூலை வெளியிட்டுள்ளார்.

விரைவில் படித்து முடிக்கக் கூடிய சிறிய கதைகளாக இது வெளியிடப்பட்டுள்ளமை பெரிதும் வரவேற்கத் தக்கதாகவே உள்ளது.



வலி. மேற்கில் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பன்முக சேவையாளர்கள் 10 பேர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். கௌரவிக்கப்பட்ட சேவையாளர்கள் விருந்தினருடன் மேடையில் அமர்ந்துள்ளனர். [ம 50]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் வாழ்க்கை

ஒரு சமயம் வயதான ஒருவர் புத்தரிடம் வந்து சேர்ந்தார். சிறிது காலம் அங்கு இருந்தார். உண்மையான துறவியாக ஆகி விட்டார் அந்த சீடரும்! ஒரு நாள், புத்தர் அவரைக் கூப்பிட்டார்.

"துறவியாரே! உங்களுக்கு இப்பொழுது வயது என்ன?" என்று கேட்டார். அதற்கு அந்த சீடர், "ஐந்து வயது ஆகின்றது!" என்று பதில் கூறினார்.

இதைக் கேட்டதும் புத்தருக்கு ஆச்சரியம் ஏற்பட்டது!

"உங்களுக்கு எழுபது வயதுக்கு மேல் இருக்கும் போல் இருக்கிறது! ஆனால் ஐந்து வயது என்று சொல்கிறீர்களே! என்ன காரணம்?" என்று கேட்டார்.

அதற்கு அந்த சீடர்;

"ஏன் அப்படி சொல்கின்றேன் என்றால்.... உண்மையான ஞானம் எனக்கு கிடைத்து ஐந்து வருடம் தான் ஆகின்றது ! அன்பு என் உள்ளத்தில் தோன்றியிருப்பதும் இந்த ஐந்து வருடத்தில்தான். இதற்கு முதல் நான் வாழ்ந்த வாழ்க்கை ஒரு கனவு போல் எனக்குத் தெரிகின்றது! அந்த வாழ்க்கையால் எந்த பயனுமும் இல்லை என்று தான் தோன்றுகிறது! அதனாலேதான் எனக்கு வயது ஐந்து என்று கூறினேன்" என்றார்.

அவர் ஐந்து வருடம்தான் இந்த உலகத்தில் வாழ்ந்ததாக நினைக்கிறார்.

அது உண்மைதான்.

இந்த உலகத்தில் உயிரோடு வாழ்பவர்கள் எல்லோரும் உயிர்வாழ்பவர்கள் என்று ஏற்றுக் கொள்ள முடியாது.

வள்ளுவர் இதை ஏற்றுக் கொள்வதில்லை!

**"வசைஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசைஒழிய வாழ்வாரே வாழா தவர்"**-என்கிறார் அவர்.

பழி உண்டாகாமல் வாழவேண்டும். அதுதான் வாழ்க்கை.

அடுத்தவர்களுக்கு உதவி செய்து அதனால் வந்த புகழுடன் வாழ வேண்டும். அடுத்தவர்களுக்கு கெடுதல் செய்தால் பழிவரும். அந்தப் பழியுடன் வாழ்பவர்களை வாழ்பவர்களாக சேர்த்துக் கொள்ள முடியாது.

தீய எண்ணங்கள் எல்லாம் அடியோடு இல்லாமல் போக வேண்டும்.

அதன்பிறகு தான் ஒரு தெளிவு வரும். ஞானம் வரும்.

ஒரு குரு இருந்தார். அவரைப் பார்த்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு வரலாம் என்று நினைத்து சீடன் ஒருவர் சென்றான். செல்லும்போது வழியில் யோகி ஒருவன் வந்தார். "எங்கே போகின்றாய் என்று கேட்டார். இது போல் குருவைப் பார்க்க போகின்றேன் என்று கூறினான் அந்தச் சீடன்.

அந்தக் குரு மீது இந்த யோகிக்கு ஏற்கனவே பொறாமை!

அதனால் அந்த சீடனைப் பார்த்து!

"உன்னுடைய குருவுக்கு எதுவும் தெரியாது! அவர் ஒரு முட்டாள்... நீ அவரை விட பெரிய முட்டாள். அதனாலேதான் அவருக்குச் சீடனாக இருக்கின்றாய்! உன்னுடைய குருவால் ஏதாவது அற்புதம் செய்து காட்ட முடியுமா? என்னைப் போல் அவரால் தண்ணீர் மீது நடக்க முடியுமா? ஆகாயத்தில் பறக்க முடியுமா? இல்லை என்றால் பூமியில் புதைந்து இருக்க முடியுமா? அவரால் எதுவும் முடியாது. அவ்வாறு இருக்கின்ற போது அப்படிப்பட்ட குருவிடம் சென்று ஏன் நேரத்தை வீணாக்குகின்றாய்? என்று தற்பெருமையுடன் கேட்டார். அதற்கு அந்த சீடன்

"நான் ஏன் அவரைக் குருவாக ஏற்றுக் கொண்டு வணங்குகிறேன் என்றால் அவர் எப்போதும் கோபப்பட மாட்டார். வேறுயாரையும் குறை கூறமாட்டார். இதைத்தான் அற்புதத்தில் எல்லாம் பெரிய அற்புதம் என்று நான் நினைக்கின்றேன்" என்றான்.

இதைக் கேட்டதும் யோகி தலையைக் கீழே குனிந்து கொண்டார்.

குளத்துக்கு மேல் நடக்கும் அதிசயத்தை விட கோபப்படாமல், நடக்கும் அதிசயம் பெரிது!

அவ்வாறு நடந்து பழக்கப்படுத்துவதுதான் மனிதனுக்கு நல்லது.

கவலை எவ்வாறு வருகின்றது என்பதற்கு ஒருவர் காரணம் கூறினார்.

முதலில் கோபம் வரும்.. அதைக் காட்டுவதற்கு எதிரில் யாரும் இல்லை என்றால் அந்தக் கோபம் தன் மேலேயே திரும்பும். அந்த சூழல்தான். அதை "கவலை" என்கின்றோம். கவலை வருவதற்கு இவ்வாறும் ஒரு வழி உண்டு!

மனதில் சாந்தியில்லாமல் வாழ்ந்தால்.. அது என்ன வாழ்க்கை!

சிலபேர் கடைசிவரைக்கும் கூட வருவதில்லை.

சர்வாதிகாரி ஒருவன் இருந்தான்.

மரணப்படுக்கையில் கிடந்தான். வைத்தியர்களெல்லாம் கைவிட்டுவிட்டார்கள். அவருக்கு வைத்தியம் பார்த்த பெரியவர் ஒருவர் வந்தார்.

"செத்துக் கொண்டிருக்கின்றவன் மனச் சாந்தியோடாவது மறுலோகம் போய்ச் சேரட்டும்"

என்று நினைத்தார்.

"மேன்மை தங்கிய அதிபரே! தங்கள் எதிரிகளை எல்லாம் மன்னித்துவிடுகிறீர்களா என்று கேட்டார்.

சர்வாதிகாரி கவசமாக...

"ஐயா! நான் மன்னித்துக் கொள்வதற்கு தயாராக இருக்கின்றேன். ஆனால் இப்பொழுது எனக்கு விரோதிகள் எவரும் இல்லை! ஏன் என்றால் அவர்களை எல்லாம் நான் ஏற்கனவே கட்டுத்தள்ளி விட்டேன்" என்று பதில் கூறினார்.



**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**

# வாசகர் திருமுகம்

## கஸ்தூரியார் வீதியை கவனிப்பார் யாரோ?

யாழ். கஸ்தூரியார் வீதியால் பொதுமக்கள் பயணம் செய்யமுடியாத நிலைமை தொடர்கிறது.

கன்னாதிட்டிச் சந்தி தொடக்கம் யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை வரையான வீதி மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இது குறித்து எத்தனையோ தடவைகள் சுட்டிக் காட்டியும் உரியவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான இந்த வீதியைச் சில மாதங்களுக்கு முன்னர் புனரமைப்புச் செய்வதற்கான முன்னேற்பாடுகள் செய்தனர். பின்னர் என்ன சாபமோ தெரியவில்லை. மாநகர சபையினர் அப்படியே கைவிட்டு விட்டனர்.

வீதியின் ஓரங்களில் வெட்டப்பட்டு கற்கள் போடப்பட்ட நிலையில் அண்மையில் பெய்த மழையால் அவை உடைந்து வீதி முழுவதும் பரவிக் காணப்படுகின்றது. இதுமட்டுமன்றி வீதியில் காணப்பட்ட சிறு குழிகள் கூட உடைந்து பெரியளவில் காணப்படுகின்றன. இவை போக்குவரத்துக்குப் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்துகின்றன.

பாடசாலைகள் அமைந்துள்ள இந்த வீதியின் நிலைமை குறித்து எவரும் கவனத்தில் எடுக்காமை வேதனையளிக்கிறது.

இந்த வீதியால் பயணிக்க முடியாத நிலையில் தூசுப்படலம் கிளம்புவதால் பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி இந்த வீதியூடாகப் பயணிப்போர் சுவாச நோய்களுக்கு ஆளாக வேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது.

கே.கே. எஸ். வீதி புனரமைப்புப் பணியும் தற்போது இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கஸ்தூரியார் வீதியையே போக்குவரத்துக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் இந்த வீதியைப் பயன்படுத்துவது அவலத்தில் காணப்படுவதால் பயணிகள் திண்டாடி வருகின்றனர்.

**கே.கலையரசி,**
**யாழ்ப்பாணம்.**

## சாதனை இல்லை மிகப் பெரிய வேதனை!

அண்மையில் வைத்தியசாலை சென்றுவிட்டு யாழ். மாவட்ட பஸ்தரிப்பிடம் ஒன்றில் பஸ்சுக்காகக் காத்து நின்றபோது நெஞ்சிலே பெரியதொரு பாரச்சுமை ஏற்பட்டது. வெளியூரில் இருந்து வந்த குடும்பம் ஒன்றும் பஸ்ஸஉக்காக நின்றது.

அவர்களை வழியனுப்புவதற்கு அவர்களின் உறவினர்கள் வந்து நின்றனர்.

இதில் வேதனை தரும் விடயம் என்னவென்றால் பெற்றோருக்கு (தாய்) தமிழ்மொழி நன்றாகத் தெரியும். ஆனால் அவர்களின் இரு புதல்வர்களுக்கும் (சுமார் 12,9 வயதிருக்கும்) தமிழ் பேசத் தெரியவில்லை.

வருவோர் தெரிந்தவர்கள் அந்த வெளியூர் வாசிகளைக் கண்டவுடன் சந்தோசமாக [illegible] போடு பேச [illegible] எமது அன்னை மொழி தெரியவில்லை.

இதை ஏதோ சாதனையாகச் சிலர் புகழ்ந்து பேசியதையும் காண முடிந்தது. இது சாதனை இல்லை தமிழுக்கு ஏற்பட்ட சோதனை.

பெற்றோருக்குத் தமிழ் மொழி தெரிந்தும் தமிழர்களாக இருந்து தமது குழந்தைகளுக்கு தமிழைச் சொல்லிக் கொடுக்காதது வேதனையிலும் வேதனை.

சகல நாட்டு மொழிகளையும் கற்பதற்குத் தடையில்லை. சகல மொழிகளையும் கற்று வளருங்கள். அது போற்றத்தக்க விடயம். ஆனால், நாம் பிறந்து வளர்ந்த மண்ணின் மொழி தெரியாமல் இருப்பது கொடுமையிலும் கொடுமை. நாம் தந்தை செல்வநாயகம் காலத்துக்கு முன்பே தமிழுக்காக எமது மொழிக்காக இந்தத் தாய் மண்ணில் தாரை வார்த்து, சிந்திய குருதி, கல்விமான்களில் இருந்து அப்பாவி பச்சிளம் பாலகர்களைக் கூட மண்ணோடு மண்ணாய் இரை கொடுத்து இன்னும் சோதனைகளுடனும் வேதனைகளுடனும் வாழ்ந்து வருவதை மறக்க முடியாது.

அத்தகைய நாம் எப்படி அன்னை மொழியை மறந்து வாழ்வது என்ற கடுமையான மன அழுத்தத்தில் பஸ் வந்ததும் என் பயணம் தொடர்ந்தது.

தாயக உறவுகளே! இன்று எமக்காக யாரும் குரல் கொடுக்கவோ தட்டிக் கேட்கவோ முன்வருவதில்லை. கடந்த கால இறுதிப் போர் இதற்குச் சான்றாகும்.

எனவே எங்கிருந்தாலும் நலமுடன் வாழுங்கள். ஆனால் எமது மொழியை மட்டும் கட்டிக்காத்து உங்கள் பிள்ளைகளுக்குப் புகட்டுங்கள். அதுவே எமது மொழிக்கு நாம் செய்யும் பெரும் வரவேற்பாகும். அப்போதுதான் மூன்றெழுத்தில் எம் மொழி இருக்கும்.

**தமிழ்ப் பிரியன்,**
**யாழ்ப்பாணம்.**

## வரணிப் பொது நூலகம் ஞாயிறும் திறக்கப்படுமா?

சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் இயங்கும் வரணிப் பொது நூலகம் ஞாயிற்றுக் கிழமைகளில் பூட்டிய நிலையில் உள்ளதால் வாசகர்கள் ஞாயிற்றுக்கிழமை பத்திரிகைகளை மறுநாள் திங்கட்கிழமை வாசிக்க வேண்டிய நிலைமை உள்ளது.

நூலகத்துக்குப் போதிய ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாக நூலக வட்டாரங்கள் தெரிவித்தன. வரணிப் பிரதேசத்தில் சகல பத்திரிகைகளையும் வாசிக்கக் கூடிய இடமாக விளங்குவது இந்த நூலகமாகும். பெரும் எண்ணிக்கையான வாசகர்கள் இந்த நூலகத்தில் பத்திரிகை படிக்க வருவதும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினத்திலாகும். இந்த நிலையில் ஞாயிறுக்கிழமைகளில் நூலகம் பூட்டப்படுவதால் அரச ஊழியர்கள் உட்பட மாணவர்கள் என சகலரும் வீட்டிலே பொழுதைக் கழிக்க வேண்டிய நிலைமை உள்ளது.

வறுமைப்பட்ட வாசக நெஞ்சங்கள் தினமும் சகல பத்திரிகைகளும் பணம் கொடுத்து வாங்கிப் படிக்க முடியாது. எனவே, இனிவரும் காலங்களில் ஏதாவது மாற்று வழி ஏற்படுத்தி நூலக சேவையை உணர்ந்து ஞாயிற்றுக் கிழமைகளிலும் வரணிப் பொது நூலகத்தைத் திறக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**வரணியூரான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடந்த (05.01.2013) சனிக்கிழமை வெளியான நம்பிக்கை ஊட்டல்கள் யதார்த்தமாக இருக்க வேண்டும் என்ற தம்பி பல்லவனின் கடிதத்துக்கான அண்ணன் வளவனின் பதில் கடிதம்.**



# இருளில்தான் இருக்கின்றோம்

என்றென்றும் அன்புடன் தம்பி வளவனுக்கு, பிறந்திருக்கும் புத்தாண்டு உன்னதும் மிக்க கனவுகளை நனவாக்கும் ஆண்டாக மலர பிரார்த்திக்கின்றேன். தம்பி கடந்த சனிக்கிழமை உனது கடிதம் கிடைத்தது. உனது ஆதங்கங்களுக்கும் அபிப்பிராயங்களுக்கும் பதில் எழுதும் முன்பாக ரவீந்திரநாத் தாகூரின், கவிதை வரியொன்றை ஞாபகப்படுத்துகின்றேன்.

''விளக்கொன்றை ஏற்றிவைப்போம் அது இருளை அகற்றுமா இல்லையா என்பதை ஒருபோதும் விவாதிக்க வேண்டாம்''. இங்கு விளக்கேற்றுவார் எவருமில்லை. இருள் பற்றிய விவாதங்களும், இருளுக்கான காரண விளக்கங்களுமே மலிந்து கிடக்கின்றன என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடே எனது கடிதம்.

தம்பி யூதர்களையும், ஜப்பானியர்களையும் உதாரணம் காட்டி யதார்த்தத்துக்கு பல ஒளியாண்டுகள் தொலைவிலுள்ள கோட்பாடுகளை நிறுவவதோ, நிர்க்கதியான நிலையில் உள்ள, இன்று தோற்றுப்போன இனமாகக் கணிக்கப்படுகின்ற எங்கள் இனத்தினை யூதர்களோடும், ஜப்பானியர்களோடும் சமப்படுத்தும் போலியான தர்க்கச்சமன்பாடுகளை தோற்றுவிப்பதோ என் நோக்கமல்ல. அது உதவப்போவதுமில்லை. யூதர்களுக்கு கிடைத்த டேவிட் பென் கூரியன் (David Ben- Gurion) போன்ற தலைவர்களோ, ஜப்பானைத் தாக்கிய அமெரிக்காவே அதனை அரவணைக்க வேண்டிய சூழலைத் தோற்றுவித்த உலக கம்யூனிஸத்தின் செல்வாக்குப் போன்ற புறக் காரணிகளோ நமக்கு வாய்க்கவில்லை என்ற அடிப்படையைக் கூட புரியாமல் வெறும் பேச்சுப் பேசுவதால் பயனில்லை என்பதை நான் அறிவேன்.



நாங்கள் இப்போது உண்மையில் இருளில்தான் இருக்கின்றோம். அதனால்தான் என்றேனும் விடியும் என்ற நம்பிக்கையோடும் விடியவேண்டும் என்ற ஏக்கத்தோடும் பேசுகின்றேன். எங்கள் அரசியல் சாணக்கியங்களின் மீதும் சமூகத் தலைமைகள் மீதும் கொண்டிருந்த நம்பிக்கைகள் உங்களிடத்திலே பொய்த்துப் போயிருப்பதை உனது கடிதத்தில் காண முடிந்தபோது மனவேதனையாக இருந்தது. புலம்பெயர் உறவுகளின் கேள்வியாக நீ கேட்டிருந்த போர் தின்ற பூமியைப் புனரமைக்கவும் போர் தின்று மீதமானவர்களை வளப்படுத்தவும் நிதி வழங்குவதாயின் யாரை நம்பிக் கொடுப்பது? யாரிடம் கொடுப்பது? என்ற கேள்விகளுக்கான பதில்களை நானும் தேடிக்கொண்டிருக்கின்றேன்.

புலம்பெயர் உறவுகளான உங்களிடம் மட்டுமல்ல எங்களிடமும் எங்கள் தலைமைகள் மீதான நம்பிக்கைகள் அருகுவது போலவே உணர்கின்றேன். இது ஆரோக்கியமானதல்ல என்பதை அவர்கள் உணராதிருப்பதே அதிக வேதனையைத் தருகின்றது.

கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போகப் போவ தாய் கதையளப்பது போல் அற்ப சொற்ப அதிகாரங்களுடன் கூடிய உள்ளூர் நிர்வாக அலகுகளையே சரிவர நிர்வகிக்க முடியாமல் தமக்குள் முரண்பட்டு முட்டி மோதும் எங்கள் தலைமைகள் இனத்தின் அபிலாஷைகளை வெற்றி கொள்வார்கள் என்று உன்னைப்போலவே நானும் நம்பவில்லை.

போர் தின்று முடித்து ஏப்பம் விட்ட உயிர்களைப் பற்றி உலகச் சபைகளின் கவனத்துக்காக உரத்துக் குரல் கொடுத்த வண்ணமுள்ளோம். என்று நீ எழுதியிருந்த வரிகள் ''தேச விடுதலைப் பணியைத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் எனது அன்பையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று எப்போதோ கேட்ட வரிகளை ஞாபகப்படுத்தியது.

ஆனால் உலகப் பொதுமன்றில் எமக்காக உலகில் மனச்சாட்சியுள்ளவர்கள் குரல் எழுப்பும் போதும் வழக்காளிகளான நாங்கள் பார்வையாளர்களாகக் கூட கலந்து கொள்ள[illegible], இன்றும் போர்க்குற்ற[illegible] தீர்மானிப்பதில் கூட தீர்க்கமான முடிவைக்காண முடியாதவர்களாக முரண்பாட்டு அல்லாடுவதும் உலகின் வெவ்வேறு மூலைகளில் எமக்காகக் குரல்கொடுப்பவர்களை சோர்ந்து போகச்செய்து விடுமோ என்ற ஏக்கத்தைத் தருகிறது.

கிடைத்திருக்கின்ற உள்ளூர் அதிகாரங்கள் கூட மக்களை அணிதிரட்டப் பயன்படவில்லை. என்பதைவிட பயன்படுத்தப்படவில்லை என்பதே சரியானது. அற்ப சொற்ப அதிகாரங்களின் கதகதப்பில் மக்கள் முதுகுகளில் சவாரி விட எத்தனிப்பதும், தமக்குள் முரண்பட்டு நிற்பதும், இனத்தின் அபிலாஷைகளுக்கான மக்கள் அணிதிரட்டலுக்கு முட்டுக் கட்டையாகவே அமையும் என்பதை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக முகிழ்த்த தலைமைகளும் முதிர்ந்த சாணக்கியர்களும் உணராதிருத்தல் எங்கள் சாபக் கேடன்றி வேறில்லை.

பேசவந்த விடயத்தை விட்டு வேறு விடயங்களை அதிகம் எழுதிவிட்டேன். விடயத்துக்கு வருகின்றேன். கடுமையான போர் நடந்த தேசங்களில் எல்லாம் காணப்பட்ட இயல்புகளையே இன்று இந்த மண்ணும் தரிசிக்கின்றது என்ற என் கருத்தை ஜீரணிக்க முடியாதவனாக இருக்கிறாய் என்பது தெரிந்தது. இது இயல்பான ஒன்று அதனை ஏற்றுக்கொள்வோம் என்ற கருத்துப்பட நான் அதனை எழுதவில்லை. இன்றைய அவலங்கள் களையப்பட வேண்டும் என்பதே எனது ஏக்கம். இன்று அவலங்களின் தோற்றுவாய்கள் கண்டும் காணாமல் விடப்பட்டிருப்பதோடு பல சந்தர்ப்பங்களில் ஊக்கப்படுத்தப்படுவதும் வெளிப்படையானதே.

அவற்றைத் தடுப்பதற்கான முறையான நிகழ்ச்சி நிரல், நடைமுறைக்குப் பொருத்தமான செயலொழுங்குகள் இன்றி குற்றச் சாட்டுக்களையும் விமர்சனங்களையும் கண்டன அறிக்கைகளையும் மட்டுமே காட்சிப்படுத்துவது எமது நம்பிக்கைகளை மட்டுமன்றி எம்மில் அக்கறை கொண்டு எமக்காக உழைப்போரின் நம்பிக்கைகளையும் தளர வைத்துவிடும்.

அண்மையில் கூட முன்னாளில் எம்மால் மதிப்போடும் கௌரவத்தோடும் பார்க்கப்பட்டு பின்னாளில் புனர்வாழ்வு முடிந்து ஊர் திரும்பிய போது தீண்டத்தகாதவர்களாய் புறமொதுக்கப்பட்டவர்களில் கொஞ்சப்பேர் மீண்டும் மகளிர் படையணியில் இணைந்தார்கள் என்ற செய்தி எம்மில் பலரை தேசிய உணர்வு கொள்ள வைத்தது.

அறிக்கைகளும் கண்டனங்களும் தேசிய உணர்விலிருந்தும் பீறிட்டுக்கிளம்பின. இணைந்ததும் இணைத்ததும் சரியா? தவறா ? என வாதிடுவதல்ல எனது நோக்கம். அவர்கள் புனர்வாழ்வு முடிந்துத் திரும்பியபோது எந்தத் தமிழ்த் தேசிய உணர்வாளர்களும் அவர்களைக் கைப்பிடிக்கவோ, வாழ்வளிக்கவோ துணியவில்லை.

எங்களின் எந்த அரசியல் தலைமைகளும் அவர்களின் வாழ்வை மீளக்கட்டி எழுப்புவதற்கான செயற்றிட்டங்களை கொண்டிருக்கவில்லை. குறைந்தபட்சம் எங்களின் உள்ளூர் அதிகாரசபைகள் தங்கள் சந்தை கட்டும் கட்டுமானப் பணியிலாயினும் அவர்களை தொழிலாளர்களாக இணைத்துக்கொள்ளவேனும் சிந்திக்கவில்லை.

ஆர்வமும் அக்கறையுமிருந்தால் அவர்களைப் பிரதேசங்கள் தோறும் குழுக்களாக்கி சந்தைகள் கட்டும் ஒப்பந்தங்களையாயினும் அந்தக் குழுக்களுக்கு கொடுத்திருக்கலாம். எங்களின் தவறுகளே அவர்களை எதிர்ப்பக்கம் தள்ளின என்பதை அறியாது அவர்களை நோக்கி குற்றச்சாட்டுக்களோடு நாங்கள் சுட்டுவிரல் நீட்டுகின்ற போது நான்கு விரல்கள் எங்களைச் சுட்டுகின்றன.

அதிகம் மனம் நிறைந்த வேதனைகளோடு இப்போதும் மணியடித்தால் மாடியில் விசாரணை, பூசை செய்தால் புனர்வாழ்வு என வாழ்ந்துகொண்டிருக்கும் நாங்கள் இப்படிக் கடிதத்தில்தான் உன்னைப் போன்றவர்களுடன் பேசமுடிகின்றது.

மறுகடிதத்தில் இன்னும் புதிய விடயங்களுடன் சந்திக்கின்றேன். அண்ணியும் பிள்ளைகளும் உனக்கு தனியாகக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதனால் அவர்களைப் பற்றியும் என்னைப் பற்றியும் நான் எழுதவில்லை. நேரம் கிடைத்தால் உடன் பதிலெழுது. அடுத்த மடலில் சந்திப்போம்.

**என்றும் அன்புடன்**
**அண்ணா வளவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org